# பொன்னிமலைத் தீவு



# பொன்னிமலைத் தீவு

**மாலினி**

மூவர் நிலையம்
107, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014

# பொன்னிமலைத் தீவு

# பொன்னிமலைத் தீவு

1

நடு இரவு!

''சீபூம்பா'' என்ற குரல் பயங்கரமாக ஒலித்தது!

அடுத்த வினாடி -

நெற்கதிர்கள் வாடிக் கருகின!

ஆடு மாடுகள் மடிந்தன.

குளம் வறண்டது!

மரங்களில் துயின்ற பறவைகள் செத்து விழுந்தன!

இந்தப் பயங்கரங்கள் நடந்து கொண்டு இருந்தது, பொன்னிமலைத் தீவில் உள்ள ஒரு கிராமத்தில்!

மக்கள் கண் முன்னாலேயே இவை எல்லாம் நடந்தன.

இதனால் அந்த கிராமத்து மக்கள் வயிறு எரிந்தது! துன்பங்கள் பெருகின.

இந்த ''சீபூம்பா'' வேலை நாளுக்கு நாள் பகலிலும் பொன்னிமலைத் தீவு முழுவதும் பரவத்தொடங்கின!

''சீபூம்பா'' யார்?

எங்கே இருக்கிறது? எப்படி வருகிறது? எப்படிப் போகிறது?

இது, எல்லோருக்குமே புரியாத புதிராக இருந்தது!

பகலில் திடீர் என்று ''சீபூம்பா'' என்ற குரல் கேட்கும்.

அடுத்த வினாடி -


பயங்கர சூறாவளி தோன்றி, செழித்து வளரும் மரம், செடி, கொடிகளை வேரோடு சாய்க்கும்!

இதனால், பொன்னிமலைத் தீவு மக்கள் நாளுக்கு நாள் சொல்ல முடியாத துன்பத்தை அடைந்தார்கள்!

பொன்னிமலைத் தீவின் மன்னன் பொன்னரசனும் மிகுந்த வேதனை அடைந்தார்!

தினமும் மக்கள் மன்னனைப் பார்த்து, முறையிட்டபடி இருந்தார்கள்.

'அரசே! எங்கள் கிராமத்தில் உள்ள நெற்பயிர்கள் எல்லாம் கருகி விட்டன! சாப்பாட்டுக்கே வழி இல்லாமல் தவிக்கின்றோம். அரசர்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் முறையிட்டு விட்டுப் போவார்கள்.



அடுத்து, இன்னொரு கூட்டம் வரும். ''அரசே! எங்கள் கிராமத்தில் உள்ள ஆடு மாடுகளை இரவோடு இரவாகக் காணவில்லை' என்று அழுவார்கள்.

இது அரசருக்குப் பெரும் சங்கடத்தைக் கொடுத்தது! பொன்னிமலைத் தீவுக்கு அழிவு காலம் வந்து விட்டதோ என்று அவர் அஞ்சினார்.

அரசருக்கு தக்க நேரத்தில் ஆலோசனை கூறினார். மந்திரி காத்தமுத்து!

''அரசே! முக்காலத்தையும் கணித்துக் கூறக் கூடிய சோதிடர்களை அழைத்து, நம் தீவைப் பிடித்துள்ள பீடை என்ன என்று கேட்டால், உண்மை தெரியும். அதை வைத்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்'' என்று காத்தமுத்து சொன்னார்.

அரசருக்கு மந்திரியின் யோசனை ''சரி'' என்று பட்டது!

''மந்திரியாரே! சோதிடத்தில் சிறந்த நிபுணர்களை எங்கு இருந்தாலும் பொன்னிமலைத் தீவுக்கு வரவழைக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்று அரசர் கட்டளையிட்டார்.

இந்தச் செய்தி பொன்னிமலைத் தீவு முழுவதும் அறிவிக்கப்பட்டது.

அன்று ஏராளமான சோதிட நிபுணர்கள் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள்!

அரசர் எல்லோரையும் 'அரச அவை'க்கு வரும்படி செய்தார்.

அவையில் ஒவ்வொருவராக எழுந்து அரசரிடம் தங்கள் கருத்தைச் சொன்னார்கள்.

அவர்களில் ஒருவர் மிகவும் துணிச்சலோடு பேசினார். ''அரசே! நம் மக்கள் படும் துன்பத்துக்குக் காரணம் உங்கள் தந்தைதான்'' என்று அடித்துச் சொன்னார்.

அதைக் கேட்டு அரசர் அதிர்ச்சி அடைந்தார்.

''சோதிடரே! நாவை அடக்கிப் பேசும்'' என்று அவரை மந்திரி காத்தமுத்து அடக்கினார்.

ஆனால், அரசர், சோதிடரை அடக்க விடவில்லை!

''சோதிடரே! எனக்கு இப்பொழுது மக்களும் நாடும்தான் முக்கியம். நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். மற்றதைப் பிறகு கவனித்துக் கொள்ளலாம்'' என்றார், அரசர் பொன்னரசன்!

சோதிடர் தொடர்ந்து பேசினார். அரசே! உங்களுக்கு அரச பதவியைக் கொடுக்க, மறைந்து போன உங்கள் தந்தை ஒரு தகாத காரியத்தைச் செய்தார்...''

சோதிடர் முடிக்கவில்லை, அதற்குள் மந்திரி காத்தமுத்து எழுந்தார்!

''அரசே! சோதிடரை மேற்கொண்டு பேச விடுவது தங்கள் நலனுக்கு நல்லது அல்ல! அவரை உடனே வெளியேற்ற வேண்டும்'' என்று வேண்டினார்.

''என் நலன் இப்பொழுது முக்கியம் அல்ல! சோதிடர் தொடர்ந்து பேசலாம்'' என்றார், அரசர்!

மந்திரி காத்தமுத்து வாயடைத்து உட்கார்ந்தார். அவர் முகத்தில் ஒருவித பீதி படர்ந்தது!

பெரியவர் தொடர்ந்து பேசினார். ''காத்தமுத்து பயப்பட வேண்டிய தேவை இல்லை. நான் யாரையும் காட்டிக் கொடுக்க மாட்டேன். மக்கள் காப்பாற்றப்பட வேண்டும். அதற்கு அரசர் உடனடியாக ஒரு காரியத்தைச் செய்தாக வேண்டும்!'' என்று சோதிடர் நிறுத்தினார்.

''என்ன செய்ய வேண்டும் சோதிடரே!'' என்று அரசர் கேட்டார்.

''நீங்கள் சிறையில் அடைத்து வைத்திருக்கும் சிறுவன் வேந்தனை உடனே வெளியே அனுப்ப வேண்டும்'' என்று சோதிடர் கூறினார்.

''அதைக் கேட்டதும், அமைச்சர் காத்தமுத்து வேகமாக எழுந்தார். ''அது மட்டும் முடியாது'' என்று கூவினார்.

## 2

அரசர் பொன்னரசனுக்குக் கோபம் அதிகமானது. சீற்றத்தோடு மந்திரி காத்தமுத்துவை நோக்கினார்.

''மந்திரியாரே! முதலில் சோதிடரைப் பேச விடுங்கள்! பிறகு, நீங்கள் பேசலாம்'' என்று கடுமையான குரலில் சொன்னார்.

காத்தமுத்துவின் நிலைமை தர்மசங்கடமாகியது! சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் உட்கார்ந்தார்!

''சோதிடரே! வேந்தன் சிறையில் இருப்பதற்கும், ''சீபூம்பா''வுக்கும் என்ன சம்பந்தம்!'' அரசர் கேட்டார்.

''நிறைய இருக்கிறது. அரசர் அனுமதித்தால், சொல்ல சித்தமாக இருக்கிறேன்' என்றார் சோதிடர் அழுத்தமாக.

பொன்னரசன் சிறிது நேரம் யோசித்தார். பிறகு, ''சொல்லுங்கள்'' என்றார்.

மந்திரி காத்தமுத்து ஆத்திரத்தோடு அரசரைப் பார்த்தார்.

''அரசே!'' சோதிடர் தொடர்ந்தார். ''ஐந்து ஆண்டுக்கு முன் 'திடீர்' என்று மரணம் அடைந்ததாக அறிவிக்கப்பட்ட நமது தீவின் தளபதி நரசிம்மனை எல்லோருக்கும் தெரியும்...!''

''தெரியுமாவா? அந்த மாவீரனின் திடீர் மரணத்தைத் தாங்கமாட்டாமல் தானே, என் தந்தை மனம் நொந்து படுத்த படுக்கையாகக் கிடந்து நம்மை விட்டு பிரிந்தார்!'' அரசர் இடைமறித்துப் பேசினார்.

சோதிடர் அர்த்தத்தோடு அரசரையும், மந்திரி காத்தமுத்துவையும் பார்த்தார். பிறகு உறுதியாகச் சொன்னார்.

''தளபதி நரசிம்மன் 'திடீர்' மரணம் அடையவும் இல்லை. உங்கள் தந்தை மனம் நொந்து உயிர்விடவும் இல்லை!''

''சோதிடரே! என்ன சொல்லுகிறீர்?'' அரசர் அதிர்ச்சியோடு கேட்டார்.

''அரசே! நான் முன்பே சொன்னேன். சோதிடர் புத்திசுவாதினம் இல்லாமல் உளறுகிறார். அவரை 'அவை'யை விட்டு வெளியேற்ற உத்தரவிடுங்கள்!'' என்று மந்திரி காத்தமுத்து அலறினார்.

சோதிடர் அமைதியாகச் சொன்னார். ''நான் சொல்லப் போவதுதான் உண்மை!''

அரசர் பொன்னரசன் குழப்பம் அடைந்தார்!

மந்திரி காத்தமுத்து, சதி, சந்திக்கு வந்து விடுமோ என்று பயந்தார்.

மற்ற சோதிடர்கள்,\''அரசே! உணமை வெளிவரட்டும். நாட்டைப் பிடித்துள்ள பீடை ஒழியட்டும்'' என்று சேர்ந்து வற்புறுத்தினார்கள்!

அரசர், சோதிடர் மேல் கோபம் கொள்ளவில்லை. நாட்டின் நலமே முக்கியம் என்று கருதினார்.

''சோதிடரே! இப்பொழுது உள்ள பிரச்சினை, மக்களை, ''சீபூம்பா''வின் அட்டகாசத்தில் இருந்து காப்பது! இதற்கு என்ன செய்ய வேண்டுமோ, அதை மட்டும் சொல்லுங்கள்'' என்றார் அரசர் சாந்தமாக.

''அரசே! ''சீபூம்பா'' பிரச்சினைக்கு வேந்தனால் மட்டுமே முடிவு காண முடியும். அவன் தங்கள் தந்தையால் 'நாட்டுத் துரோகி' என்று குற்றம் சாட்டப்பட்டு, பாதாளச் சிறையில் இருக்கிறான். அவன் எப்படிப்பட்ட நிலையில் சிறைவைக்கப்பட்டான் என்ற உண்மை தங்களுக்குத் தெரிய

நியாயம் இல்லை. அதை நீங்கள் முழுமையாகத் தெரிந்து கொண்டால்தான், வேந்தனை விடுதலை செய்ய முடியும்!''என்றார் சோதிடர்.

''சரி, சொல்லுங்கள்'' என்றார் அரசர்.

சோதிடர் உற்சாகமாக நிமிர்ந்தார்.

''தளபதி நரசிம்மன் ஒரு மாவீரன் மட்டும் அல்ல. சிறந்த ராஜதந்திரி; எல்லா வித்தையும் அறிந்தவர், மதி மந்திரி சொல்ல வேண்டிய யோசனைகளை உங்கள் தந்தைக்கு நரசிம்மன் சொன்னார். அதனால் அரசரிடத்தில் நரசிம்மனுக்கு மதிப்பு உயர்ந்தது! அதைக் கண்டு பொறாமை கொண்ட மந்திரி காத்தமுத்து சதித் திட்டத்தில் இறங்கினார்...!''

''என்ன?''

எல்லோரும் அதிர்ச்சியோடு காத்தமுத்துவைப் பார்த்தனர்.

சோதிடர் தொடர்ந்து பேசினார். ''ஒரு போலி சோதிடரை அரசரிடம் அனுப்பி, ''தளபதி நரசிம்மன் உங்களையும், உங்கள் மகனையும் (பொன்னரசன்) கொன்று விட்டு, அரச பதவியைக் கைப்பற்ற திட்டம் போட்டுக் கொண்டு இருக்கிறார்'' என்று சொல்லும்படி செய்தார். அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அரசர் காத்தமுத்துவை அழைத்து, ''சோதிடர் சொல்வதை நம்பலாமா?'' என்று கேட்டார். அதற்கு, ''முற்றிலும் உண்மை. சோதிடர் முக்காலத்தையும் கணித்துச் சொல்வதில் நிபுணர். அரசர் இந்த விஷயத்தில்

அலட்சியமாக இருந்துவிடக் கூடாது'' என்று காத்தமுத்து அடித்துச் சொல்லிவிட்டார். பதவியும் மண்ணும் பறி போகப் போகிறதே, என்று பதறிய அரசர் மந்திரி காத்தமுத்துவின் ஆலோசனைப்படி, தளபதி நரசிம்மனை ஒழித்துக் கட்ட தீர்மானித்தார்!'' ஒரு பெருமூச்சு விட்டு சோதிடர் நிறுத்தினார்.

''சோதிடர் சொல்வது சுத்தப்பொய் அபாண்டம்'' என்று கத்தினார், காத்தமுத்து.

''என்னால் நம்பவே முடியவில்லையே!'' என்று வியப்பால் வாயைப் பிளந்தார், அரசர் பொன்னரசன்!

## 3

**சோ**திடர் உறுதியோடு அரசரைப் பார்த்தார்.

''எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறதே!'' என்றார் பொன்னரசன்.

''அரசே! உங்களைக் குழப்ப வேண்டும் என்று திட்டம் போட்டு சோதிடர் வந்து இருக்கிறார். உடனே 'அவை'யை கலைத்துவிட்டு, எல்லோரையும் வெளியே அனுப்புங்கள்!'' என்று அரசருக்கு இசைந்து பாடினார், மந்திரி காத்தமுத்து!

சோதிடர் அமைதியாகச் சொன்னார். ''அரசே! உண்மை கசக்கத்தான் செய்யும். குழப்பத்தையும் ஏற்படுத்தும். ஆனால் சாகாது! என்றைக்காவது ஒருநாள் வெளியே



வந்துதான் தீரும்!'' என்று சொல்லிவிட்டு தனது இடத்தில் அமர்ந்தார்!

அரசர் தடுமாற்றம் அடைந்தார். சோதிடரை நம்புவதா, மந்திரி காத்தமுத்து சொல்வதை ஏற்றுக் கொள்வதா என்று தெரியாமல் விழித்தார்.

''சோதிடரே! இப்பொழுது என்ன செய்யச் சொல்லுகிறீர்!'' என்று வினவினார்.

''அரசே! மாவீரன் நரசிம்மனை உங்கள் தந்தையும் காத்தமுத்துவும் விருந்துக்கு என்று அழைத்து விஷம் கொடுத்துக் கொன்றார்கள்! கொடுமை அதோடு நிற்கவில்லை, காத்தமுத்துவின் பார்வை நரசிம்மனின் மகன் வேந்தன் மீது விழுந்தது. எங்கே, வேந்தன் தனக்கு எதிராக வந்து விடுவானோ என்று பயந்து அவனையும் கொல்ல சூழ்ச்சி செய்தார். ''வேந்தன் பிறப்பால் சகல சக்திகளையும் பெற்றவன். அவனால் உங்கள் அரச பதவிக்கு ஆபத்து ஏற்படப் போகிறது'' என்று உங்கள் தந்தையிடம் கோள் மூட்டினார். பாலகன் என்பதால் அரசர் இரங்கினார். வேந்தனைக் கொலை செய்யாமல், பாதாளச் சிறையில் அடைத்து வைத்தார். தவறு ஏதும் செய்யாமல் சிறையில் வாடும் வேந்தனை உடனே விடுதலை செய்ய வேண்டும்...!'' சோதிடர் தனது பேச்சுக்கு சிறு முற்றுப்புள்ளி வைத்தார்.

அரசர் பொன்னரசனும், மற்ற சோதிடர்களும் அதிர்ச்சி அடைந்தார்கள்!

அரசர், மனதில் எழுந்த கொந்தளிப்பை வெளிக் காட்டாமல் பேசினார்.

''சோதிடரே! நீர் சொல்லுவதை உண்மை என்று வைத்துக் கொண்டாலும்கூட, வேந்தனை விடுதலை செய்வதற்கும், சீூம்பா'விற்கும் என்ன சம்பந்தம்'' என்று அரசர் கேட்டார்.

''அரசே! மாவீரன் நரசிம்மனை நயவஞ்சகமாகக் கொலை செய்து, வேந்தனைப் பாதாளச் சிறையில் தள்ளி கொடுமைப்படுத்தியதால், ஏற்பட்ட சாபக்கேடு தான், ''சீூம்பா'' என்ற பெயரில் வந்து, நம் தீவு மக்களை வாட்டி வதைத்துக் கொண்டு இருக்கிறது என்று நான் நம்புகிறேன். வேந்தனை விடுதலை செய்து விட்டால், சாபக்கேடு தீர்ந்து விடும் என்பது என் எண்ணம்'' என்று பதில் அளித்தார் சோதிடர்.

''மந்திரியாரே! நீர் என்ன சொல்லுகிறீர்?'' என்று அரசர் பொன்னரசன் மதி மந்திரியைப் பார்த்தார்.

அரசர் ஆலோசனை கலந்ததும், காத்தமுத்துவுக்கு தலைகால் புரியவில்லை. கடைசியாக அரசர் தம் சொல்லைத் தான் கேட்கப் போகிறார் என்று நினைத்துக் கொண்டதும் குவிந்துபோய் இருந்த அவர் முகம் மலர்ந்தது.

'அரசே! வேந்தன் நாட்டுத் துரோகி, தங்கள் அரச பதவியை அபகரிக்கத் துணிந்தவன். அவனை காலமெல்லாம் பாதாளச் சிறையில் போட வேண்டும்'' என்று அழுத்தமாகச் சொன்னார்.

அப்போது -

''அரசே! எங்களைக் காப்பாற்றுங்கள்!'' என்று சிலர் அபயக் குரல் எழுப்பிக் கொண்டு அரசர் காலில் வந்து விழுந்தனர்.

''என்ன! என்ன நடந்து விட்டது!'' என்று அரசர் வியப்போடு எழுந்தார்!

ஒருவன், ''அரசே! அடுக்கி வைத்திருக்கும் நெல்மூட்டைகள் எல்லாம் மணல் மூட்டைகளாக மாறிவிட்டது!'' என்று அழுதான்.

மற்றொருவன், ''அரசே! வயலுக்கு வேலைக்கு போன வேலையாட்கள் அப்படியே நின்று விட்டார்கள். அவர்களால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை'' என்று குமுறினான்.

இதைக் கேட்டுப், பொன்னரசனும் சோதிடர்களும் அதிர்ச்சி அடைந்தார்க்ள்.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதனையும் கடிக்க வந்துவிட்டதே என்று அரசர் கலங்கினார்.

''சோதிடரே! நீர் சொல்லுவதை நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. ஆனாலும் உமது வேண்டுகோளை - நாட்டின் நலன் கருதி நிறைவேற்று கிறேன். வேந்தனை விடுதலை செய்கிறேன்'' என்றார் பொன்னரசன்.

மந்திரி காத்தமுத்துவிடம் கேட்காமலேயே வேந்தனை 'அவை'க்குக் கொண்டு வர அரசர் உத்தரவிட்டார்.

அடுத்த சில நிமிடங்களில், காவலர்கள் வேந்தனை அரசர் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள்!

வேந்தனை பார்க்கச் சகியாத மந்திரி காத்தமுத்து, வேகமாக எழுந்து அவையைவிட்டு வெளியேறினார்!

அதே நேரத்தில் ''சீபூம்பா'' என்ற குரல் பலமாக ஒலித்தது!

## 4

அரசர் பொன்னரசன் மலைத்துப் போய் நின்றார்.

சோதிடர்கள் திகைத்தார்கள்!

வேந்தன் முகத்தின் மட்டும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

''அரசே! என்னை அழைத்து வந்ததன் காரணம் என்ன?'' என்று அரசரை நோக்கிக் கேட்டான்.

அரசர் கவனம் இன்னும் வேந்தன் பக்கம் திரும்பவில்லை. அவரது எண்ணம் முழுவதும் ''சீபூம்பா'' வைப் பற்றியே இருந்தது!

சோதிடரே! உங்கள் காதில் ''சீபூம்பா என்ற குரல் விழுந்ததா?'' என்று அரசர் சோதிடரிடம் கேட்டார்!

சோதிடர் திடுக்கிட்டுத் திரும்பினார். ''அரசே! அந்த பயங்கர ஒலி இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது'' என்றார் அச்சம் நிறைந்த குரலில்.

''வேந்தன் அவைக்கு வரவும், ''சீபூம்பா'' என்ற குரல் ஒலிக்கிறது. அரசர் இதை சாதாரணமாக விடக்கூடாது. இதன் பின்னணியில் இருக்கும் சூழ்ச்சியை உடனே கண்டுபிடிக்க வேண்டும்'' என்று மற்ற சோதிடர்கள் அரசரை கேட்டுக் கொண்டார்கள்!

அப்போது கூட வேந்தன் முகத்தில் எந்தவித மாற்றமும் தெரியவில்லை!

வேந்தனை விடுதலை செய்ய அரசர் உத்தரவிட்டதும், சோதிடர் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தார்! அவனை சேர்த்து அணைத்துக் கொள்ள நினைத்தார். ஆனால் அந்த ''சீபூம்பா'' என்ற குரல், அவரது கவனத்தையே மாற்றிவிட்டது!

சோதிடரும் வேந்தனை மறந்துவிட்டு, அந்தக் குரலைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு இருந்தார்.

வேந்தன் மீண்டும் வாய் திறந்தான். ''அரசே! என்னை சிறையில் இருந்து அழைத்து வந்ததற்கு என்ன காரணம்? என்று கேட்டான் சற்று அழுத்தமாக.

இப்பொழுதுதான், வேந்தனின் குரல், அரசர் காதில் விழுந்தது! அவர், வேந்தனை ஒரு வினோதப் பொருளைப் பார்ப்பது போல பார்த்தார்.

''வேந்தா! உன்னைச் சிறையில் அடைத்தவர், என் தந்தை...!'' அரசர் பொன்னரசன் பேசினார்.

''ஆம். அது உலகறிந்த விஷயம்!'' வேந்தன் நிமிர்ந்து பார்க்காமலேயே பதில் சொன்னான்.

''உன்னை சிறையில் அடைத்ததற்கான உண்மைக் காரணமும் எனக்குத் தெரியாது...''

''மந்திரி காத்தமுத்து சொல்லியிருப்பாரே!'' என்றான் வேந்தன் நிமிராமலேயே!

''நிறையச் சொன்னார் உண்மை நிலையை சோதிடரும் விளக்கினார்...''

''சோதிடர் சொன்னதை உண்மையாகக் கொண்டு உன்னை விடுதலை செய்யப் போகிறேன்!''

''வேடிக்கையாக இருக்கிறதே!''

''உறுதியாகத்தான் சொல்கிறேன். நீ வாழ வேண்டியவன். உன் வாழ்வை நான் அழிக்க விரும்பவில்லை. நீ சோதிடர் கூடவே தங்கி இருக்கலாம்'' என்றார் அரசர் பொன்னரசன்!

சோதிடர் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது!

காவலர்கள், வேந்தன் கைகளைப் பிணைத்து இருந்த இரும்புச் சங்கிலியை அவிழ்த்து விட்டார்கள்!

அவனுடைய கைகள் சுதந்திரம் பெற்றன. அவன் சோதிடர் பக்கம் திரும்பினான். அப்படியே அவரது காலில் விழுந்தான்! ''என்னை ஆசீர்வதியுங்கள்'' என்று வேண்டினான்.

சோதிடர் உடல் சிலிர்த்தது. ஆனந்தத்தோடு, வேந்தனைத் தூக்கி நிறுத்தினார். பிறகு கட்டித் தழுவிக் கொண்டார்.

''வேந்தா! உன்னால் அரசரின் ஆட்சி சிறக்க வேண்டும். மக்களின் துன்பம் தீர வேண்டும்'' என்று சோதிடர் நா தழுதழுக்கக் கூறினார்.

ஆகட்டும் என்பது போல், வேந்தன் கைகளைக் குவித்தான்!

''வேந்தா! நீ அரசர் முன் வந்து நின்றதும், ''சீபூம்பா'' என்று ஒரு ஒலி ஒலித்ததே, உன் காதில் விழுந்ததா?'' சோதிடர் ஆவேசத்தோடு கேட்டார்.

''தெளிவாக விழுந்தது. நான் விடுதலை ஆவதை தாங்கிக் கொள்ளாதவர்களின் ஓலம், அது!'' வேந்தன் சாதாரணமாகப் பேசினான்.

ஆனால் அவன் சொன்ன வார்த்தையைப் புரிந்து கொள்ள முடியாமல் அரசர் பொன்னரசன் விழித்தார்.

சோதிடர்கூட ஆச்சரியத்தோடு, கண்களை அகல விரித்தார்!

## 5

''**வே**ந்தா! நீ என்ன சொல்கிறாய்? உனக்கு வேண்டாதவர்கள் என்றால் அவர்கள் யார்? ஏன் இப்படிச் செய்கிறார்கள்'' அரசர் அடுக்கடுக்காகக் கேள்விகளை எழுப்பினார். அவரது குரலில் பரபரப்பு இருந்தது.

வேந்தனோ, முகத்தில் எந்தவித அச்சமோ, கலவரமோ இல்லாமல் பேசினான்.

அவனது பேச்சு தெளிந்த நீரோடை போல இருந்தது!

''மதிமந்திரி காத்தமுத்துவை அழைத்துக் கேளுங்கள். அவரே எல்லா உண்மைகளையும் தெரிந்தவர்'' என்று சொல்லிவிட்டு, வேந்தன் அரசனை நோக்கினான்.

காத்தமுத்துவை வேந்தன் சுட்டிக் காட்டியது. அரசருக்கு அதிர்ச்சியை கொடுத்தது.

''நீ என்ன சொல்லுகிறாய். புரியும்படி சொல்'' என்றார் வியப்போடு!

''அரசே! நான் சற்று ஓய்வு எடுக்க வேண்டும். என்னை அமைதியாக இருக்க அனுமதியுங்கள்!'' அரசரை வணங்கிவிட்டு, வேந்தன் சோதிடரைப் பார்த்தான்.

''வேந்தா! இப்போது நாம் எங்கே போக வேண்டும்?'' என்று சோதிடர் கேட்டார்.

''என் தந்தை துயில் கொள்ளும் கல்லறைக்கு'' என்றபடி வேந்தன் 'அவை'யை விட்டு வெளியேறி நடந்தான்!

சோதிடர் வேந்தனைப் பின் தொடர்ந்தார்!

''சோதிடரே! என் தந்தையை நெருங்க எமனே பயப்படுவான்! அப்படிப்பட்ட அவருக்கு சாவு எப்படி வந்துவிட்டது பார்த்தீர்களா?'' நடந்து கொண்டே வேந்தன் ஏங்கினான்!

''வேந்தா! சூழ்ச்சி வென்று விட்டது. நடந்ததை நினைத்துக் கலங்காதே! இனிமேல் என்ன செய்யப் போகிறோம் என்பதுதான் முக்கியம்'' என்று வேந்தனை திடப்படுத்தினார், சோதிடர்.

''என்ன செய்ய வேண்டும் என்கிறீர், சோதிடரே!'' என்று கேட்டு நின்றான் வேந்தன்!

சோதிடர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். ''வேந்தா! இன்று நம் தீவு மக்கள் ''சீபூம்பா''வின் அட்டகாசத்தால் தாங்க முடியாத துன்பத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களை உடனே காப்பாற்ற வேண்டும் அது உன்னால் தான் முடியும்!''

''என் மீது பெரும் பொறுப்பை சுமத்துகிறீர்களே!''

''நீதான் அதை சுமக்க முடியும்'' என்றார் சோதிடர் உறுதியாக.

அதற்குள் போர் வீரர்களின் கல்லறைத் தோட்டம் வந்தது!

''சோதிடரே! என் தந்தை எங்கே அமைதி கொண்டிருக்கிறார்? அந்த இடத்தைக் கொஞ்சம் காட்ட முடியுமா?'' என்று கேட்டான், வேந்தன் உணர்ச்சிப் பெருக்கோடு!

சோதிடர் ஒரு கல்லறையை அவனுக்கு சுட்டிக் காட்டினார்!

சாதாரணப் போர் வீரர்களின் கல்லறைகள் கூட சலவைக் கற்களால் அழகு படுத்தப்பட்டு இருந்தன. ஆனால் தளபதி நரசிம்மன் கல்லறையை வெறுமனே விட்டிருந்தார்கள்!



இது சோதிடருக்கே பெரும் துன்பத்தைக் கொடுத்தது.

வேந்தன் தன் தந்தையின் கல்லறையைப் பார்த்ததும், ''அப்பா!'' என்று வீரிட்டுக் கொண்டு அதன் மீது குப்புற விழுந்தான்.

சிறிது நேரம் ஒரே மயான அமைதி!

சோதிடர் தனியே விலகி நின்று கொண்டிருந்தார்.

சில நிமிட நேரத்துக்குப் பிறகு, வேந்தன் ஆவேசமாக எழுந்தான்! ''தந்தையே! உங்கள் கட்டளைப்படியே நடக்கிறேன்!'' என்று கூறிவிட்டு, சோதிடரை நோக்கி நடந்தான்!

''என்னப்பா, உன் தந்தை என்ன கட்டளையிட்டார்!'' என்று சோதிடர் வேந்தன் கைகளைப் பற்றினார்.

''சோதிடரே! உங்கள் உத்தரவுபடி நடக்க சித்தமாகி விட்டேன். என் தந்தையே அதைச் செய்யும்படி சொல்லி விட்டார்!'' என்றான் அவன் துணிவோடு.

''எதைச் செய்யப் போகிறாய், வேந்தா?'' சோதிடர் புரியாமல் கேட்டார்.

''சீபூம்பாவை ஒழிக்கப் போகிறேன்!''

''உண்மையாகவா?''

சோதிடர் மகிழ்ச்சியோடு வினவினார்!

''என் தந்தை ஆணையிட்ட பிறகு, அதற்கு மறுப்பு இருக்காது'' என்று கம்பீரமாக நிமிர்ந்தான் வேந்தன்.

அவனது முகம் புதுப் பொலிவு பெற்று திகழ்ந்தது. அவன் ஒரு மாவீரனைப் போல நின்றான்.

''வேந்தா! இந்தக் கிழவனுக்கு ஓர் ஆசை நீ என் இல்லத்துக்கு வந்து தங்க வேண்டும்'' என்று வேண்டினார் சோதிடர்!

வேந்தன் சோதிடரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டான்!

## 6

**சோ**திடர், தளபதி நரசிம்மனின் சிறப்புகளைக் கூறிக் கொண்டே நடந்தார்.

வேந்தன் அதை காதில் வாங்கிக் கொண்டு அடக்கமாக சோதிடரைத் தொடர்ந்து போனான்.

''உன் தந்தை எல்லா சக்தியும் பெற்றவர். ஆனால் எதையும் அவர் தன் சொந்த நலனுக்காக பயன்படுத்த வில்லை. நாடு - மக்கள் என்றே எப்பொழுதும் எண்ணினார். அதற்காகக் கடுமையாக உழைத்தார்...''

''அந்த சோகக் கதையை ஏன் இப்பொழுது கிளறுகிறீர்கள், சோதிடரே!'' வேந்தன் இடைமறித்துக் கேட்டான்!

''காரணமாகத்தான். நீயும் உன் தந்தையைப் போல் எல்லா சக்தியும் பெற்றவன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதை எந்தவிதத்திலும் மற்றவர்களை அழிக்கவோ - பழிவாங்கவோ பயன்படுத்தக் கூடாது. நாடும் மக்களுமே

நமக்கு முக்கியம். உன் சக்தி எல்லாம் அவர்களை வாழவைக்கவே பயன்பட வேண்டும்!'' என்று நிறுத்தினார் சோதிடர்.

''என்மேல் என்ன உங்களுக்கு இவ்வளவு சந்தேகம்?'' வேந்தன் கேட்டான்.

''நீ இளம் இரத்தம், எதற்கும் அஞ்சாத வயது, எனவே, இவற்றை அறிவுறுத்துவது என் பொறுப்பு அல்லவா?'' என்றார் சோதிடர்!

''என்னை நம்புங்கள். என் சக்தி எந்தவிதத்திலும் உண்மைக்குப் புறம்பாக இருக்காது. என் தந்தை மீது ஆணை!'' என்று உணர்ச்சிப் பிழம்பாக மாறினான் வேந்தன்!

சோதிடர் வேந்தனைத் தட்டிக் கொடுத்தார். ''நீ தான் உண்மையான வீர மகன்'' என்றார்.

வழியில் கருகிக் கிடந்த வயல்களை சோதிடர் வேந்தனுக்குக் காட்டினார்.

வறண்டு கிடந்த குளங்களை - கிணறுகளை வேந்தன் பார்த்தான்!

அவனது இரத்தம் கொதித்தது!

சீபூம்பாவின் அட்டூழியங்களை நினைத்து வெதும்பி னான்.

சோதிடரின் வீடு வந்தது!

வீட்டை அடைந்ததும் சோதிடர் வேந்தனுக்கு உணவு படைத்தார். சாப்பிடப் பழங்கள் கொடுத்தார்.

நீண்ட நாட்கள் சிறையில் இருந்தமையால், வேந்தன் உணவு - பழங்களை சுவைத்துச் சாப்பிட்டான்.

சாப்பாடு முடிந்ததும், வேந்தன் சோதிடரின் காலில் விழுந்தான்!

''தெய்வம் உனக்குத் துணை நிற்கட்டும்'' என்று சோதிடர் அவனை வாழ்த்தினார்.

வேந்தன் புறப்பட்டான்!

''வேந்தா! இந்தக் கிழவன் உனக்கு துணையாக வரட்டுமா?'' என்று சோதிடர் கேட்டார்.

''உங்களுக்கு எந்தத் தொந்தரவும் வேண்டாம், அய்யா! நானே கவனித்துக் கொள்கிறேன். அடிக்கடி உங்களைச் சந்திப்பேன்'' என்று வணங்கி விட்டு வேந்தன் நடையைக் கட்டினான்!

அப்போது -

ஊரையே அலாக்காக தூக்கிச் செல்லும் பயங்கர சூறாவளி வீசியது!

புழுதி கண்களை மறைத்தது!

வேந்தன் ஒரு நிமிடம் திடுக்கிட்டு நின்றான்! ஆனால் அடுத்த நிமிடமே மீண்டும் நடக்கத் தொடங்கினான்.

காற்றின் வேகம் வேந்தன் நடை வேகத்தைக் குறைக்கவில்லை. அவன் முகத்தில் பயத்தின் சாயல் இல்லை. ஒரு படைவீரனைப் போல அவன் நிமிர்ந்து நடந்தான்.

திடீர் என்று ஒரு அலறல் சத்தம் கேட்டு ஒரு கணம் வேந்தன் நின்றான்! காதுகளைக் கூர்மையாக்கினான்!

"சீ... பூம் ...பா!"

மீண்டும் அதே அலறல்.

அடுத்த வினாடி -

குடிசை வீடுகள் காற்றில் பறந்தன.

மரங்கள் வேரோடு சாய்ந்தன!

இப்பொழுது காற்றுப் புழுதிகள், வேந்தன் கண்களை மறைத்தன!

கால்கள் பின்னின!

வேந்தனால் நடக்கக்கூட முடியவில்லை. அவனை அலாக்காகத் தூக்கி வீசியது!

அவன் பொன்னிமலைக் காட்டுக்குள் இருந்த ஒரு குகையின் முன் போய் "தொப்"பென்று விழுந்தான்!

## 7

‘‘சீபூம்பா’’ தொடர்ந்து கொடுத்துக் கொண்டு இருந்த தொல்லைகள் அரசர் பொன்னரசன் மனதைப் புண் ஆக்கின.

மந்திரி காத்தமுத்து இன்னும் பிடிவாதமாகவே இருந்தார்.

‘‘இந்த ‘‘சீபூம்பா’’ யார்? என்ன காரணத்துக்காக நம் தீவு மக்களை கொடுமைப்படுத்துகிறது! என்பதைக் கண்டுபிடித் தீர்களா?’’ என்று அரசர், காத்தமுத்துவிடம் கேட்டார்!

‘‘அரசே! உங்களுக்கு அரச பதவியைப் பெற்றுத்தர நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன்! அதை எல்லாம் மறந்துவிட்டு, அந்தக் கிழட்டு சோதிடர் சொல்லைக் கேட்டீர்கள். என் சொல்லைத் தொடக்கத்திலேயே கேட்டு இருந்தால் இப்பொழுது இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்பட்டு இருக்காது’’ என்று காத்தமுத்து மிக அலட்சியமாக பதில் சொன்னார்!

அரசர் ஒன்றும் புரியாமல் கேட்டார். ‘‘மந்திரியாரே! என்ன சொல்லுகிறீர்?’’

மந்திரி காத்தமுத்து அழுத்தமாகப் பேசினார், ‘‘அரசே! வேந்தன் தேசத் துரோகி. அவனைப் பிடித்து உடனே கொன்று விடுங்கள் என்று நான் உங்களுக்கு ஆலோசனை சொன்னேன். என்னை நீங்கள் மதிக்கவில்லை. என் ஆலோசனைக்கு எதிராக வேந்தனைக் கொல்லாமல் பாதாளச் சிறையில் வைத்து சோறு போட்டீர்கள். இப்பொழுது அவனை விடுதலை வேறு செய்துவிட்டீர்கள்.



எனக்கு நீங்கள் செய்த துரோகத்துக்கு தண்டனையாகத்தான் ''சீழும்பா'' கிளம்பி வந்து, நம் தீவையே அழிக்கிறது'' என்று சாதாரணமாகக் கூறினார்.

அப்பாவி அரசர் பொன்னரசன் காத்தமுத்து பேச்சில் உண்மை இருக்குமோ என்று நினைத்தார்!

''இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிறீர்?'' என்று மந்திரியிடம் கேட்டார்.

அரசர் இறங்கி வந்ததும், காத்தமுத்துக்கு முகம் மலர்ந்தது. ஒரு வெற்றிப் புன்னகையோடு அரசரை நோக்கினார்!

''அரசே! இப்பொழுதே எனக்குக் கட்டளை இடுங்கள். வேந்தனைப் பிடித்துக் கட்டி இழுத்து வருகிறேன். அவனை ''தேசத் துரோகி'' என்று ஊர் மத்தியில் கட்டி வைத்து, உங்கள் கையாலேயே அவனைக் கண்ட துண்டமாக வெட்டிப் போடுங்கள்'' என்று ஓர் அரக்கனைப் போல் காத்தமுத்து சொன்னார்.

அதை கேட்டதும், அரசர் நடுங்கிப் போனார். காத்தமுதது ஏன் இவ்வளவு கொடூரமாக மாறுகிறார்?

அரசர் சிந்திப்பதைப் பார்த்ததும், காத்தமுத்து மேலும் குழப்பினார்.

''அரசே! வேந்தனைக் காப்பதற்காக, இந்த நாட்டு மக்களை ''சீழும்பா''விற்கு பலி கொடுக்கப் போகிறீர்களா? அரச பதவியை இழந்து ஆண்டியாக அலைய விரும்பு கிறீர்களா?'' என்று கேள்விகளை அடுக்கினார்.

அரசர் பொன்னரசன் ஒருவித அச்சத்தோடு மந்திரியைப் பார்த்தார். ''மந்திரியாரே! நான் உத்தரவிடுகிறேன். மற்றதை எல்லாம் நீரே பார்த்துக் கொள்ளும்!'' என்று சொல்லி விட்டு வேகமாக எழுந்து போய்விட்டார்!

காத்தமுத்து வெற்றிச் சிரிப்பு சிரித்தார். தனது வளையாத மீசையை முறுக்கி விட்டார்!

''யார், அங்கே!'' என்றார்.

இரண்டு ஆயுதம் தாங்கிய வீரர்கள், விரைந்து வந்து தலைவணங்கி நின்றார்கள்!

''உடனே புறப்பட்டுப் போங்கள். வேந்தன் எங்கு இருந்தாலும் பிடித்து இழுத்து வாருங்கள்'' என்று காத்தமுத்து கட்டளையிட்டார்.

அடுத்த வினாடி -

பத்துக்கும் மேற்பட்ட வீரர்கள், மாவீரன் வேந்தனைத் தேடிப் புறப்பட்டார்கள்!

சூறாவளியால் தூக்கி எறியப்பட்ட வேந்தன் சுய நினைவுக்கு வர வெகு நேரம் ஆயிற்று!

''வே... ந்... தா! வேந்தா!'' என்று அசரீரியாக ஒலித்த குரல் கேட்டு, வேந்தன் திடுக்கிட்டு எழுந்தான்! நிதானமாக எதிரே இருந்த குகையை நோக்கினான்!

அப்போது -

''மகனே, வா! மகனே, வா!'' என்ற இனிமையான குரல், அவனை சுண்டி இழுததது!

பசுவைத் தேடிச், செல்லும் கன்று போல், வேந்தன் அந்தக் குரலைத் தொடர்ந்து போனான்.

குரல் குகைக்குள் சென்று நின்றது!

குகைக்குள் கால் எடுத்து வைத்ததும், வேந்தன் பிரமித்துப் போனான்!

அவன் ஆவலோடு தேடி வந்த காளி தெய்வம் அங்கே சிலை வடிவில் உயிர் பெற்று இருந்தது.

## 8

**வே**ந்தன் பரவசத்தோடு நிமிர்ந்தான்!

உயர்ந்து நின்ற காளி சிலை அவனுக்கு மேலும் உயர்ந்து காட்சி அளித்தது!

பக்தியோடு அதன் பாதத்தைப் பற்றினான், வேந்தன். ''எங்கள் குல தெய்வமே! உன்னை வணங்குகிறேன். எனக்கு வேண்டிய எல்லா வரத்தையும் அளிக்கும்படி உன்னை வேண்டுகிறேன்'' என்று காளியின் காலடியில் குப்புற விழுந்தான்!

அப்போது அந்த குகை எங்கும் கண்ணைப் பறிக்கும் ஒளி பரவியது!

பூமியே இரண்டாகப் பிளந்துவிடும் போல் பயங்கர அதிர்ச்சி ஏற்பட்டது!

வேந்தன் சிலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

அடுத்து, இடி இடிக்கும் ஒலி எழுந்தது!

குகை மீண்டும் ஒளி மயமானது!

''தாயே!'' என்று வேந்தன் பக்திக் குரல் எழுப்பினான்!

அப்போது அவனுக்கு ஓர் அசரீரி கேட்டது!

''தந்தோம்... தந்தோம்... மகனே, வேண்டும் வரம் தந்தோம்!''

அந்தக் குரலைக் கேட்டதும் வேந்தன் துள்ளிக் குதித்து எழுந்தான். இப்பொழுது அவனையே அவனால் நம்ப முடியவில்லை.

அவன் உடல் முழுவதும் மின்சாரம் பாய்வது போல ஓர் உணர்ச்சி!

அடுத்த வினாடி, அவன் புலியின் சீற்றமும், யானையின் பலமும் பெற்றான்.

''நன்றி தாயே, நன்றி'' என்று அவன் அந்த சிலையைக் சுற்றினான்!

சிலையின் பின் பக்கம் தரையில் நின்ற ஒரு வாள், அவன் காலைத் தட்டியது!

வேந்தன் குனிந்து வாளை எடுத்தான். அது தானாக அவனது இடைக்குள் போய் ஒளிந்து கொண்டது!

இதுவும் காளி தேவியின் கருணைதான் என்று எண்ணிக் கொண்டு, அவன் வாளோடு வெளியே வந்தான்! வந்தவன் ஏதோ நினைவில் மீண்டும் குகைக்குள் எட்டிப் பார்த்தான்! அதற்குள் என்ன நடந்து விட்டது! வானளாவ உயர்ந்து நின்ற காளி சிலை இப்பொழுது அங்கு இல்லை!

வேந்தன் அதிர்ச்சி அடைந்தான்!

தனக்கு வரம் அளிக்கவே, காளிதேவி சிலை வடிவில் வந்து காட்சி அளித்திருக்கிறாள் என்று அவன் நினைத்துக் கொண்டதும், அதிர்ச்சி ஆச்சரியமாக மாறியது! குகையை வணங்கி விட்டு, வீர நடை நடந்து வெளியே வந்தான்!

அவனுக்கு சோதிடரைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது!

எனவே, பொன்னிமலைக் காட்டை விட்டு, ஊரை நோக்கி நடந்தான்!

வேந்தன் ஊரை நெருங்கவில்லை!

எதிரே வந்த ஒரு குதிரைப்படை வீரன், ''அதோ வேந்தன்!'' என்று கத்தினான். பிறகு வந்த திசையிலே குதிரையைத் திருப்பி விரட்டினான்.

சிறிது நேரத்தில் பத்துக்கும் மேற்பட்ட ஆயுதம் தாங்கிய குதிரைப் படை வீரர்கள், வேந்தனை நோக்கிப் பறந்து வந்தார்கள்!

வேந்தன் எதையும் கவனிக்காதவன் போல் நடையில் கவனமாக இருந்தான்!

குதிரைப்படை, வேந்தனை நெருங்கியதும், பத்து வீரர்களும் கண நேரத்தில், அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்!

வேந்தன் முகத்தில் அதிர்ச்சி இல்லை. பயத்தின் சாயல் இல்லை. சாதாரணமாக வீரர்களை நோக்கினான்.

''வேந்தா! உன்னைக் கட்டி இழுத்து வர அரசர் கட்டளையிட்டு இருக்கிறார்!'' என்றபடி ஒரு வீரன் குதிரையில் இருந்து குதித்தான்.

''நான் என்ன தவறு செய்தேன். ஏன் என்னைக் கட்டி இழுத்துப் போக வந்து இருக்கிறீர்கள்!'' என்று வீரக் குரல் எழுப்பினான், வேந்தன்!

''உன்னைக் கட்டி இழுத்து வரத்தான் எங்களுக்குக் கட்டளை! பேச வேண்டியதை மந்திரி காத்தமுத்துவிடம் வந்து பேசிக் கொள்'' என்று இரைந்தான் அடுத்த வீரன்!

''மந்திரி காத்தமுத்துவை சந்திக்க நான் தயாராக இல்லை. அவரிடம் போய் சொல்லி விடுங்கள்'' என்று வேந்தன் வீரர்களுக்கு திருப்பிக் கட்டளையிட்டான்!

''உன்னைக் கட்டி நாயைப் போல் இழுத்துப் போவோம்'' என்று கர்ச்சித்தான் மற்றொரு வீரன்!

''முடிந்தால் செய்து பாருங்கள்'' வேந்தன் அலட்சியமாகச் சொன்னான்.

அடுத்த வினாடி -

வீரர்கள் அத்தனை பேரும் உருவிய வாளுடன் வேந்தன் மீது பாய்ந்தார்கள்!

## 9

**சொ**ய்ங்... சொய்ங்...

வேந்தனின் வாள் மின்னல் வேகத்தில் கைக்கு வந்தது! அவன் பம்பரமாகச் சுழன்றான். கையில் இருந்த வாள் களிநடனம் புரிந்தது!

வேந்தனின் இடித் தாக்குதலை எதிர்பாராத பத்து வீரர்களும் பெரிதும் கலக்கமுற்றார்கள்.


வேந்தன் வாளால் விளையாடிக் கொண்டே சொன்னான்.

''உயிர்மேல் ஆசையிருந்தால், தப்பி ஓடி விடுங்கள்! என்னை நாயைப் போல் இழுத்துப் போக வேண்டும் என்று நினைத்தால் உங்களை நாய்க்கு இரையாக்கி விடுவேன்'' என்று வீர முழக்கம் செய்தான்!

வேந்தனின் ஏளனப் பேச்சு அவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டியது!

''உன்னைக் கட்டி இழுத்துப் போகாமல், நாங்கள் இந்த இடத்தை விட்டு நகர மாட்டோம்!'' என்று ஒருவன் எதிர்ச்சவால் விடுத்தான்!

''அப்படியானால் நீங்கள் உயிரோடு போக மாட்டீர்கள்!'' என்றான் வேந்தன்.



அடுத்த கணம் ''அதையும் பார்த்து விடுவோம்'' என்றபடி பத்து வீரர்களும் மீண்டும் ஆக்ரோசமாக வேந்தன் மீது பாய்ந்தார்கள்.

வேந்தன் தனி மனிதனாக நின்று அவர்களைப் பந்தாடினான்! அவர்கள் கையில் இருந்த வாள்கள் ''டங் டங்'' என்று தரையில் வீழ்ந்தன!

அவனது தாக்குதலைத் தாக்குப்பிடிக்க முடியாத சில வீரர்கள் பின் வாங்கத் தொடங்கினார்கள்!

''இவன் வாளுக்கு ஏதோ மந்திர சக்தி இருக்கிறது. உடனே மந்திரியிடம் போய்ச் சொல்ல வேண்டும்'' என்று அலறிக் கொண்டு ஓடினான் ஒருவன்.

அவனைத் தொடர்ந்து, ''தப்பித்தோம், பிழைத்தோம்'' என்று மற்றவர்களும் குதிரையை விட்டு விட்டு தலைதெரிக்க ஓடினார்கள்.

வேந்தன் அலட்சியமாக அவர்களைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

சோதிடர் இருக்கும் கிராமத்துக்கு இன்னும் பல மைல் தூரம் போக வேண்டும்!

அவன் அருகே நின்ற ஒரு குதிரையை நோக்கி கையை அசைத்தான்!

குதிரை ஓடி வந்து அவன் முன் நின்றது!

வேந்தன் தாவி குதிரை மேல் போய் அமர்ந்தான்! குதிரையைத் தட்டிவிட்டான்!

குதிரை வீர நடை நடந்து சென்றது.

வேந்தன் ஒரு இளவரசனைப் போல் கம்பீரமாக குதிரையைச் செலுத்திக் கொண்டு போனான்!

புயல் வேகத்தில் பறந்து சென்ற குதிரை, திடீர் என்று கனைத்துக் கொண்டு நின்றது!

அதன் கால்கள் பின்னின.

வேந்தன் காரணம் புரியாமல், குதிரையை வேகமாக முடுக்கிவிட்டான்!

அப்போது -

''சீ பூம்பா...! சீ பூம்பா...!'' என்ற குரல் அவனைச் சுற்றிச் சுற்றி அலறியது.

அதைத் தொடர்ந்து குதிரை அசையாமல் நின்றது.

வேந்தன் சிலை போல் நின்று கொண்டு அந்த சத்தத்தை அசை போட்டுக் கொண்டு இருந்தான்! ''சீ பூம்பா!'' ''சீ... பூம்...பா...!''

வேந்தனால் அதிக நேரம் அப்படி நிற்க முடியவில்லை!

''சீ பூம்பாவே! உன் அட்டகாசத்தை அடக்கிக் கொண்டு போய் விடு. என் குதிரையைப் போகவிடு!'' என்று குரல் எழுப்பினான்.

இப்பொழுது, ''சீ பூம்பா'' என்ற குரல் அவனுக்கு மிக அருகாமையில் கேட்டது! அதன் துடிப்பும் அதிகமானது!

அடுத்த வினாடி -

குதிரை 'தடால்' என்று கீழே சாய்ந்தது!

வேந்தன் நல்ல வேளையாக குதித்து விட்டான்!

அடுத்து, அவனைச் சுற்றி சூறாவளிக் காற்று எழுந்தது!

நிமிர்ந்து நின்ற மரங்கள் அவன் மீது விழுந்து நசுக்குவன போல் அவனை நோக்கி வளைந்து பேயாட்டம் போட்டன.

அதுவரை அமைதியாக நின்று கவனித்துக் கொண்டு இருந்த வேந்தன், எரிமலையாக வெடித்தான்!

"சீபூம்பாவே ஒழிந்து போ! காற்றே அடங்கு! என்னைப் போக விடு!" என்று தன் வலது; கரத்தை நீட்டினான்!

அடுத்த வினாடி -

புயல் அடங்கியது!

மரங்கள் அசைவற்றன!

செத்தாற்போல் தரையில் வீழ்ந்து கிடந்த குதிரை கம்பீரமாக எழுந்து நின்றது!

வேந்தன் மீண்டும் குதிரை மீது தாவி ஏறினான்!

## 10

வேந்தன் காளிதேவியை மனதில் நினைத்துக் கொண்டு கையை நீட்டியதும், ''சீபூம்பா''வின் அலறல் நின்றது!

புயல் அடங்கியது!

நாணலாக வளைந்த மரங்கள் பழைய நிலைக்கு வந்தன.

ஆனாலும் வேந்தனுக்குக் குழப்பம் தீரவில்லை!

''சீ பூம்பா'' யார்?

எப்படி வருகிறது? எப்படிப் போகிறது? அது, பொன்னி மலைத் தீவு மக்களை வாட்டி வதைப்பது ஏன்?

இவற்றுக்கெல்லாம், வேந்தன் விடைகாணத் துடித்தான்!

மின்னல் வேகத்தில் அவன் மனதில் ஒன்று தோன்றியது!

''சீபூம்பா'' தீவு மக்களை அழிக்கப் புறப்பட்டது என்றால், வேந்தனை ஏன் வழி மறிக்க வேண்டும்?

ஒருவேளை, வேந்தனின் இரத்தத்தைக் குடிக்கத் துடிக்கும் மந்திரி காத்தமுத்துவுக்கும், 'சீ பூம்பா'வுக்கும் தொடர்பு இருக்குமோ!

அப்படியென்றால் வேந்தன் ஒருவனுக்காக, ஏன் தீவு மக்கள் எல்லோரையும் கொடுமைப்படுத்த வேண்டும்!

இப்படி பலவாறு எண்ணிக் கொண்டு இருந்த வேந்தனுக்கு, குழப்பமே மிஞ்சியது!

அவன் குதிரையைத் தட்டி விட்டான்!

குதிரை, சோதிடர் குடியிருக்கும் அரிசிக்காடு கிராமத்தை நோக்கி முன்கால் இரண்டையும் வைத்தது!

வேந்தன் அரிசிக்காடு கிராமத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது, மாலை வெயில் மறைந்து கொண்டு இருந்தது. இருள் படரத் தொடங்கியது!

கிராமத்தை நெருங்கியதும் வேந்தனின் கண்கள் கசிந்தன!

ஊரைச் சுற்றியுள்ள வயல்கள், கருகிக் கிடந்தன!

குளங்கள் வரண்டு கிடந்தன!

இது என்ன சாபக்கேடு! என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான், வேந்தன்!

குதிரை ஊருக்குள் நுழைந்தது!

வயல்களைப் போலவே, ஊரும் களையிழந்து, வெறிச்சோடிக் கிடந்தது!

குதிரை பாய்ந்து வந்த சத்தத்தைக் கேட்டு, சிலர் என்னமோ, ஏதோ என்று பரபரப்போடு வெளியே வந்து எட்டிப் பார்த்தார்கள்!

எதிரே வந்து கொண்டு இருந்தவர்கள், ஆச்சரியத்தோடு தலையை உயர்த்தினார்கள்.

ஆனால், கண் இமைக்கும் நேரத்தில், குதிரை அவர்களைக் கடந்து சென்றது!

சோதிடரின் குடிசையை அடைந்ததும், ஒரு கனைப்போடு குதிரை நின்றது!

வேந்தன் கீழே குதித்தான்!

குதிரை சத்தத்தைக் கேட்டதும், சோதிடர் துடித்துக் கொண்டு வெளியே வந்தார்!

அவர் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை!

ஓர் இளவரசனைப் போல வேந்தன் கம்பீரமாக வந்து கொண்டு இருப்பதைப் பார்த்ததும், அவர் கண்களை அகல விரித்தார்!

''வா, வேந்தா! வா!'' என்று உள்ளன்போடு அழைத்தார்!

வேந்தன் சோதிடரை வணங்கிக் கொண்டே, ''அய்யா! உங்களை சந்தித்து ஆசி பெறவே ஓடோடி வந்தேன்'' என்றான்.

சோதிடர் வேந்தனை அமர வைத்தார்.

வழியில் ''சீபூம்பா'' தடுத்து பயமுறுத்தியதை வேந்தன் எடுத்துச் சொன்னான்.

''சீபூம்பா, ஏன் என்னை வழிமறிக்க வேண்டும்!'' என்றான் அவன் மிக சாதாரணமாக.

''மந்திரி காத்தமுத்துவுக்கும், ''சீபூம்பா''வுக்கும் தொடர்பு இருக்குமோ!'' என்று தனது சந்தேகத்தையும் கேட்டான்!

வேந்தன் கூறியதை எல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டு இருந்த சோதிடர் கொஞ்சமும் அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் பேசினார்.

''எல்லாம் எதிர்பார்த்ததுதான்'' என்றார்.

''அய்யா, என்ன சொல்லுகிறீர்கள்?'' வேந்தன் பரபரப்போடு கேட்டான்.

சோதிடர் மீண்டும் சாதாரணமாகச் சொன்னார்.

''வேந்தா! மந்திரி காத்தமுத்துவுக்கும், சீ பூம்பாவுக்கும் தொடர்பு இருக்கும் என்று நான் நினைக்கவில்லை! நிச்சயமாகச் சொல்லுகிறேன். அப்படி இருக்க முடியாது!'' என்றார் அழுத்தமாக.

''அது எப்படி இவ்வளவு திட்டவட்டமாகக் கூறுகிறீர்கள்!'' வேந்தன் கேட்டான்!

''காத்தமுத்துவைப் பற்றி எனக்குத் தெரியும்!''

சோதிடர் பேச்சை முடிக்கவில்லை!

குடிசைக்கு வெளியே இருந்து, ''சோதிடரே வெளியே வாரும்!'' என்று ஒரு குரல் காட்டமாக அழைப்பது கேட்டது!

சோதிடர் சரேலென எழுந்து வெளியே வந்தார்! அவரைத் தொடர்ந்து வேந்தனும் எழுந்தான்!

சோதிடருக்கு வெளியே பெரிய அதிர்ச்சி காத்திருந்தது!

## 11

எதிரியின் கோட்டையை சுற்றி வளைத்து நிற்பது போல், பொன்னிமலைத் தீவு போர் வீரர்கள், அந்தக் குடிசையைச் சூழ்ந்து நின்று கொண்டு இருந்தார்கள்!

மந்திரி காத்தமுத்து உள்ளே என்ன நடக்கிறது என்று உளவு பார்த்துக் கொண்டு இருந்தார்.

இந்தக் காட்சியைக் கண்டதும், சோதிடர் திகைத்துப் போனார்!

''மந்திரியாரே! என்ன, இது! எதற்காக இந்தப் படை! என் குடிசைக்குக் காவல் ஏன்?'' என்று புரியாமல் வினவினார்.

மந்திரி காத்தமுத்து, சிறந்த நகைச்சுவையைக் கேட்டு விட்டவர் போல், ''கோ... கோ...'' என்று சிரித்தார்!

''சோதிடரே! உமக்கு சதித்திட்டம் தீட்டமட்டும் அல்ல, நன்றாக நடிக்கவும் தெரிகிறது!'' என்று காத்தமுத்து நகையாடினார்.

''சதித்திட்டமா! மந்திரியாரே! என்ன கூறுகிறீர்!'' என்று ஆத்திரத்தோடு கேட்டார், சோதிடர்!

''சோதிடரே! உம்மிடம் பேச நான் வரவில்லை. எனக்குத் தேவை வேந்தன்! அவனை வெளியே அனுப்பிவையும்! இது அரசர் கட்டளை!'' என்று கத்தினார், காத்தமுத்து.

''என்ன?'' என்றார் சோதிடர் மீண்டும் ஆச்சரியத்தோடு!



வேந்தனால் அதற்கு மேலும் குடிசைக்குள் இருக்க முடியவில்லை!

குகைக்குள் இருந்து வெளியே வரும் சிங்கம் போல், அவன் குடிசையை விட்டு வெளியேறினான்!

வேந்தனைப் பார்த்ததும், ''இன்று நீ தப்ப முடியாது! மரியாதையாக என் பின்னால் வந்து விடு'' என்று அழைத்தார், காத்தமுத்து!

வேந்தன் அஞ்சாத சிங்கம் போல், கம்பீரமாக நின்று கொண்டு, அவரைப் பார்த்தான்!

அவன் வீரர்களைக் கண்டு அதிர்ச்சி அடையாமல், கலங்காமல் - பதறாமல் நிற்பதைப் பார்த்ததும், காத்தமுத்துவுக்கே ஆச்சரியமாக இருந்தது!

அன்று பத்து வீரர்கள் வந்து சொன்னது எல்லாம் உண்மையாகத்தான் இருக்குமோ! வேந்தனிடம் மாய சக்தி இருப்பதாகக் கூறினார்களே! அதுவும் சரியான கூற்று தானோ!

இப்படி தனக்குத்தானே, பலவாறு எண்ணிக் கொண்டு இருந்த காத்தமுத்து, தன் பூத உடம்பை அசைத்துக் கொண்டு வேந்தனைப் பார்த்தார்!

''வேந்தா! உன்னைக் கட்டி இழுத்துவர, அரசர் ஆணை பிறப்பித்து இருக்கிறார்! நீயாக வந்தால், கவுரவமாக அழைத்துப் போவோம். இல்லாவிட்டால்...''

''என்ன செய்வீர்களாம்'' வேந்தன் இடைமறித்துக் கேட்டான்.

''கட்டி, தெரு வழியே இழுத்துப் போவோம்'' என்றார் காத்தமுத்து ஆணவக் குரலில்!

வேந்தன் அலட்சியமாக மந்திரியாரைப் பார்த்தான்!

''மந்திரியாரே! ஏற்கனவே பத்து வீரர்கள், வாங்கி கட்டிக் கொண்டு வந்ததைக் கேட்டு இருப்பீர்கள். இப்பொழுதும் சொல்லுகிறேன். என்னை அழிக்க வேண்டும் என்று நினைத்தால், அழிந்து போவது நானாக இருக்க மாட்டேன். நீங்கள்தான். என்னைத் தனியே விடுங்கள். எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது'' என்றான் அழுத்தமாக

அதைக் கேட்டதும் காத்தமுத்துவின், இரும்பு உடல் துடித்தது! பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டார்.

சோதிடர் நிலைமை தர்ம சங்கடமாகியது!

''மந்திரியாரே! நீங்கள் வீரர்களை அழைத்துக் கொண்டு போங்கள். வேந்தனை நான் அரசரிடம் அழைத்து வருகிறேன்'' என்றார் பொதுவாக!

காத்தமுத்து, சோதிடர் மீது சீறிப் பாய்ந்தார். ''பிள்ளையைக் கிள்ளிவிட்டு விட்டு, தொட்டிலையும் ஆட்டுகிறீரா! உமது வேலை என்னிடம் நடக்காது. நடக்கவும் விடமாட்டேன். இந்தச் சிறு நரியை எப்படி இழுத்துப் போக வேண்டும் என்பது எனக்குத் தெரியும்!'' என்று நகைத்தார்!

''மந்திரியாரே! இப்பொழுது என்னதான் செய்ய வேண்டும் என்கிறீர்'' என்று கேட்டான், வேந்தன்!

காத்தமுத்துவுக்கு கோபம் அதிகமானது! ''இவனைப் பிடித்துக் கட்டுங்கள்!'' என்று ஓலமிட்டார்.

அடுத்த வினாடி -

தயாராக நின்ற வீரர்கள் திபுதிபு என்று, வேந்தன் மீது பாய்ந்தார்கள்!

சோதிடர் பதறித் துடித்தார்!

ஆனால், சோதிடர் பயந்தது போல் அங்கு எதுவும் நடக்கவில்லை.

வேந்தன் மீது விழுந்த வீரர்கள், அதே வேகத்தில் ''ஆ'' என்று அலறியபடி பின்னோக்கி விழுந்தார்கள்!

வேந்தனின் கையில் இருந்த வாள், பம்பரமாக சுழன்று கொண்டே இருந்தது!

காத்தமுதது இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

அடுத்து குதிரை வீரர்கள் வேந்தனை நோக்கி வந்தார்கள்!

## 12

ஒரு வீரன் தந்திரமாகத் தன் குதிரையை வேந்தன்மீது ஏவி விட்டான்!

அது கொடூரமாக கனைத்துக் கொண்டு, கால்களைத் தூக்கி பின்னால் இருந்து வேந்தனைத் தாக்கியது.

அடுத்த கணம், குதிரையின் கால் துண்டுபட்டது! ''தடால்'' என்று குதிரை தரையில் சாய்ந்தது!

வீரர்களும் பின் வாங்கிக் கொண்டிருந்தனர்.

வேந்தனின், இந்த மின்னல் வேகத் தாக்குதலைப் பார்த்ததும், மந்திரி காத்தமுத்துவுக்கு திகில் உண்டானது! மானம் போகுமுன், அங்கிருந்து போய்விட நினைத்தார்!

''சோதிடரே! கண்கட்டு வித்தையா செய்கிறீர்! அரசரிடம் சொல்லி உம்மை என்ன செய்கிறேன், பாரும்?'' என்று கருவிக் கொண்டு, காத்தமுத்து குதிரையில் ஏறினார்.

அவரைத் தொடர்ந்து மற்ற வீரர்களும் குதிரைகளைத் தட்டி விட்டார்கள்!

''எப்படியும் வேந்தனைப் பழி வாங்கியே தீருவேன்'' என்று சாடிக் கொணடு காத்தமுத்து குதிரையை விரட்டினார்!

அவர் முகம் தோல்வியால் குவிந்து போய் இருந்தது!

கண்கள் கோவைப் பழம் போல் சிவந்து இருந்தன.

அவர் வாழ்க்கையில் இப்படி ஒரு தோல்வியை சந்தித்தது இல்லை!

வேந்தன் மட்டும் அவரிடம் தனியே சிக்கினால், அவனது குடலை உருவி மாலையாகப் போட்டுக் கொள்வார்.

அந்த அளவுக்கு அவர் அவமானத்தால் வெந்து போய் திரும்பிக் கொண்டு இருந்தார்!

அரண்மனையை அடைந்தபோது, காத்தமுத்துவுக்கு ஆத்திரம் அதிகமானது!

காரணம், சோதிடரின் குடிசையின் முன்நின்று கொண்டு இருந்த குதிரை, அரண்மனை வாசலில் கட்டப்பட்டு இருந்தது!

அது வேந்தனுடைய குதிரை என்பதைப் புரிந்து கொண்டதும், அவர் மூளை வேகமாக வேலை செய்தது!

வேந்தன் இவ்வளவு சீக்கிரத்தில் இங்கே எப்படி வந்தான்?

அவன் அரசரைப் பார்க்க வந்து இருக்கிறானா, அல்லது தன் குதிரையை கொண்டு வந்து கட்டிப் போட்டுவிட்டுப் போய் விட்டானா?

யார் கொடுக்கும் தைரியத்தில், அவன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறான்!

அவனிடம் குடி கொண்டிருக்கும் சக்தி, அவனது சொந்த பலமா? பேயின் சக்தியா?

குழப்பத்தோடு அரண்மனைக்குள் நுழைந்து கொண்டு இருந்த காத்தமுத்து அரச அவையை அடைந்ததும், எண்ணெயில் போட்ட கடுகு ஆனார்!

காத்தமுத்துவை எதிர்த்து வேந்தனே வந்து கொண்டு இருந்தான்!

அவன் அரச அவையில் இருந்து வந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும், காத்தமுத்துவுக்கு சினம் அதிகமானது!

அரசர் பொன்னரசனே தன்னை மட்டம் தட்டுகிறாரோ என்று அவர் எண்ணினார்.

அவருக்கு இதயமே வெடித்து விடும் போல் இருந்தது!

அடிபட்ட வேங்கை போல் ஆனார், காத்தமுத்து!

''அரசே!'' என்று அதட்டலாக அலறிக் கொண்டு அவர் அவைக்குள் நுழைந்தார்!

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த பொன்னரசன், மந்திரியின் கோபாவேசத்துக்கு காரணம் தெரியாமல், ''மந்திரியாரே! என்ன நடந்து விட்டது. ஏன் இப்படிப் பதறுகிறீர்?'' என்று சாதாரணமாகக் கேட்டார்!

''வேந்தன் உங்களைச் சந்திக்க எப்போது வந்தான். முதலில் அதைச் சொல்லுங்கள்!'' என்று படபடத்தார் காத்தமுத்து!

மந்திரியாரின் கடுங்கோபத்துக்கான காரணத்தைப் புரிந்து கொண்டதும், அரசர் பொன்னரசன் நிமிர்ந்து உட்கார்ந்தார்!

''அதற்காக ஏன் இப்படித் தேவையில்லாமல் ஆத்திரப் படுகிறீர்!'' என்ற அரசர், ''அவசரமாக என்னைப் பார்க்க வேண்டும் என்று வந்தான். நான் மறுத்தேன். ஆனாலும் ஏதோ ஒரு சக்தி என் பிடிவாதத்தை குலைத்து விட்டது. அரைமணி நேரமாக இருந்து பேசிவிட்டு, இப்பொழுதுதான் போகிறான். வழியில் நீங்களும் பார்த்து இருக்கலாமே!'' என்றார் நிதானமாக.

அரசரின் பேச்சு எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல் இருந்தது காத்தமுத்துக்கு. சீற்றம் அதிகமானது!

அரசரும் தன்னைக் கேலி செய்கிறாரோ என்று அவர் நினைத்தார்!

ஆனாலும், காத்தமுத்து வெகுண்டு எழவில்லை. அடக்கமாகவே பேசினார். அதுதான் அப்போதைக்கு சிறந்த ஆயுதமாக அவருக்குப்பட்டது!

'அரசே! வேந்தனை தாங்கள் கைது செய்து இருக்கலாமே!'' என்றார் பணிவோடு!

''வேந்தனைக் கைது செய்ய நீங்கள் பெரும்படையோடு சென்றீர்களே! ஏன் கைது செய்யவில்லை, மந்திரியாரே'' என்று திருப்பிக் கேட்டார்! அரசர்!

சோதிடர் குடிசையில் ஏற்பட்ட அவமானத்தை எப்படி அரசரிடம் சொல்வது என்று தெரியாமல் காத்தமுத்து விழித்தார்!

## 13

அரசர் இப்படியொரு கேள்வியைப் போடுவார் என்று அவர் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

''அரசே! வேந்தன் இப்பொழுது பழைய வேந்தனாக இல்லை. ஆளே மாறிப் போயிருக்கிறான். சோதிடரும் அவனும் சேர்ந்து



உங்களுக்கு எதிராக சதித்திட்டத்தில் இறங்கி இருக்கிறார்கள்'' என்றார் காத்தமுத்து தடுமாற்றத்துடன்.

''அது உண்மை என்றால் வேந்தனை ஏன் கைது செய்து வரவில்லை?'' என்றார் அரசர் அதட்டலாக!

''உங்கள் உத்தரவுப்படி, வேந்தனை இழுத்து வரத்தான் போனோம். ஆனால் அவன் தப்பிவிட்டான்!'' காத்தமுத்துதான் இப்படிச் சொன்னார்.

வேந்தனோடு போராடி மண்ணைக் கவ்வி விட்டு வந்த உண்மையை அவரால் எப்படிச் சொல்ல முடியும்?

குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல காத்தமுத்து பேசினார்.

''வேந்தன் தப்பி ஓடினானா? உங்களையும் நம் வீரர்களையும் அடித்து விரட்டினானா?'' அரசர் குத்தலாகக் கேட்டார்!

இந்தக் கேள்வி, காத்தமுத்தை நறுக்கென்று தைத்தது!

சோதிடர் குடிசை முன் நடந்த விஷயம், அரசருக்கு எப்படித் தெரிந்தது என்று ஒருகணம் சிந்தித்தவர், அடுத்த நிமிடமே உஷார் ஆகிக்கொண்டார்!

''அரசே! வேந்தனிடம் ஏதோ பேய் சக்தி இருக்கிறது. அதை வைத்துக் கொண்டுதான், அவன் நம் வீரர்களைப் பின் வாங்க வைத்துவிட்டான்! இதற்கெல்லாம் காரணம் அந்த சோதிடர்தான்'' என்று பல்லைக் கடித்தவர், ''நீங்கள் சோதிடரை அழைத்து அதட்டினால், உண்மை

வெளிவந்துவிடும். வேந்தனை சுலபமாக பிடித்து விடலாம்'' என்று குழைந்தார்!

''அது இருக்கட்டும்... ''ஜீ பூம்பா''வைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?''

அரசர் பேச்சை மாற்றிய பிறகுதான், காத்தமுத்துக்கு படபடப்பு நின்றது! நிதானமாகப் பேசினார்.

''அரசே! வேந்தனும் சோதிடரும் சேர்ந்துதான் இந்த வேலையைச் செய்கிறார்களோ, என்று நான் சந்தேகப்படுகிறேன்'' என்றார் காத்தமுத்து பணிவாக!

''எப்படிச் சொல்லுகிறீர்கள்?'' - இது அரசர் கேள்வி வியப்பு கலந்து வந்தது!

''வேந்தன் - சோதிடரின் நடவடிக்கையை வைத்து சொல்லுகிறேன். வேந்தனிடம் இருப்பது மனித பலம் அல்ல. பேய் பலம்! இதை வைத்து மக்களையும் மன்னரையும் பயமுறுத்தி, அழித்து நாட்டைக் கைப்பற்ற அவன் துடித்துக் கொண்டு இருக்கிறான்..'' என்று காத்தமுத்து முழங்கிக் கொண்டிருந்தபோது, ''மந்திரியார் சொல்வது சுத்தப் பொய்!'' என்று ஒரு மெல்லிய குரல், அவைக்கு வெளியே இருந்து கணீரென்று ஒலித்தது!

இரண்டு பேரும், திடுக்கிட்டு திரும்பினார்கள்!

''தந்தையே! உங்கள் பேச்சில் குறுக்கிடுவதற்காக என்னை மன்னித்து விடுங்கள்! மந்திரியாரே நீங்களும்தான்!'' என்றபடி, பொன்னரசனின் ஒரே செல்வ

மகள் இளவரசி பூங்கொடி தந்தையை நோக்கி வந்து கொண்டு இருந்தாள்!

பூங்கொடி!

அவள் ஓர் அழகுத் தேர்!

அழகும் அறிவும் இணைந்த பெட்டகம்!

பொன்னரசன் தன் மகளுக்கு சிறு வயதிலேயே எல்லா வித்தையும் சொல்லிக் கொடுத்து இருந்தார்.

குதிரை ஏற்றம், வாள் பயிற்சி எல்லாவற்றிலும், பூங்கொடி தலை சிறந்து விளங்கினாள்!

அதுமட்டும் அல்ல. அரண்மனையில் தன் தந்தைக்கு, ஒரு மதி மந்திரியாகவும் திகழ்ந்தாள்!

காத்தமுத்து கூட பலமுறை பூங்கொடியின் அறிவுக் கூர்மையைப் புகழ்ந்து பாராட்டி இருக்கிறார்!

ஆனால் இதுவரை அரசர் பொன்னரசன் அவையில் மந்திரியுடன் தனியே பேசிக் கொண்டு இருக்கும் போது பூங்கொடி அவைக்குள் நுழைந்தது இல்லை, இடை மறித்துப் பேசியதும் இல்லை!

பொன்னரசன் அவையை விட்டு வெளியே வந்த பிறகுதான், அவள் தனது கருத்தைத் தந்தையிடம் தெரிவிப்பாள்!

ஆனால் இன்று, பூங்கொடி நேராக அவைக்குள் நுழைந்தது - அதுவும் வேந்தனுக்கு ஆதரவாகக் கொடி

பிடித்துக் கொண்டு வந்தது காத்தமுத்துக்கு மட்டும் அல்ல, அரசருக்கே ஆச்சரியத்தை உண்டு பண்ணியது!

"பூங்கொடி! இது என்ன விளையாட்டு?" என்றார் அரசர் கொஞ்சம் கண்டிப்புடன்!

அவள் துணிவோடு பேசினாள். "நான் உங்கள் பேச்சில் தலையிடுவதற்கு மீண்டும் மன்னிப்பக் கேட்டுக் கொள்கிறேன். வேந்தன் அப்பழுக்கற்ற வீரன்! இந்த நாட்டையே மாற்றான் படையெடுப்பில் இருந்து மீட்டுத் தந்த மாவீரன் நரசிம்மனின் அரும்புதல்வன்! இந்நாட்டைக் காக்கப் போகிறவன். அவன் மீது வீண் பழி சுமத்துவதை இந்நாடு ஏற்காது" என்று பொரிந்தாள் பூங்கொடி!

அதைக் கேட்டு, காத்தமுத்து திருட்டுப் பூனை போல விழித்தார்.

அரசர் பொன்னரசன் வியப்போடு மகளைப் பார்த்தார்!

## 14

ஒருநாளும் இல்லாத திருநாளாக, பூங்கொடி அவைக்குள் நுழைந்து, இடைமறித்துப் பேசியது, அரசருக்கு உண்மையாகவே வியப்பைத்தான் கொடுத்தது!

"பூங்கொடி...!"

அரசர் ஏதோ சொல்ல அழைத்தார். அதற்குள் காத்தமுத்து முந்திக் கொண்டார்.

''இளவரசி! நாங்கள் சில முக்கியப் பிரச்சினைகளைப் பற்றி பேசிக் கொண்டு இருக்கிறோம்..'' என்று இழுத்த மந்திரி காத்தமுத்து, ''நீங்கள் போய் விடுங்கள்'' என்று கெஞ்சுவது போல் பூங்கொடியைப் பார்த்தார்.

''எல்லாவற்றையும் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். வேந்தன் மீது இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, அவனை ஒழித்துக் கட்ட அப்பாவின் சம்மதத்தைப் பெற துடிக்கிறீர்கள். அப்படித்தானே, மந்திரியாரே! இதுதான் உங்களுக்கு முக்கியப் பிரச்சினை இல்லையா?'' என்ற பூங்கொடி, அர்த்தத்தோடு காத்தமுத்துவைப் பார்த்தாள்!

அந்தப் பார்வை, காத்தமுத்துவின் மீசையைத் துடிக்க வைத்தது!

அவர் கோபக்கனல் பொங்க அரசரை நோக்கினார்!

அரசர் பொன்னரசன் சினத்தோடு மகளைப் பார்த்தார்!

''பூங்கொடி! இந்நாட்டின் இளவரசியான நீ இப்படி சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளலாமா? நீ சொல்ல வேண்டியதைப் பிறகு சொல்லலாம். இப்பொழுது எங்களைப் பேச விடு'' என்றார் அரசர் கண்டிப்புடன்.

பூங்கொடி சிணுங்கிக் கொண்டே, அவையை விட்டு வெளியேறினாள்.

காத்தமுத்துக்கு உதறல் நின்றது! பெரிய இக்கட்டில் இருந்து விடுபட்டவர் போல், அரசரைப் பார்த்தார்.

''மந்திரியாரே! நாளை வந்து பாருங்கள்!'' என்று அரசர் எழுந்தார்.

''இன்னும் நிறைய விஷயங்கள்பேச வேண்டும்..'' என்று இழுத்தார், காத்தமுத்து.

''அதுதான் சொன்னேனே! நாளை வாருங்கள் என்று!''

அரசர் பொன்னரசன் அவையை விட்டு வெளியேறி விட்டார்!

காத்தமுத்துக்கு குழப்பம் அதிகமானது!

அவர், இளவரசி பூங்கொடியை வேறு முறையில் பயன்படுத்த திட்டமிட்டு இருந்தார்! அதற்கான முயற்சியில் இறங்கிக் கொண்டு இருக்கும் நேரத்தில், அவள் வேந்தனுக்கு ஆதரவாக நின்று பேசியது. அவருக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது!

இந்த குழப்பத்தில் இருந்து விடுபட, காத்தமுத்துக்கும் சிறிது அவகாசம் தேவைப்பட்டது!

வேந்தனது செயல்கள் சோதிடருக்கே வியப்பைத்தான் கொடுத்தது!

அவன், பொன்னிமலைத் தீவு வீரர்களுடன் சிங்கமென மோதி, நொடிப் பொழுதில் அவர்களை மண் கவ்வ வைத்தது சோதிடர் எதிர்பார்க்காத ஒன்று!

அவருக்கே வேந்தனது பலம் மீது வியப்பு ஏற்பட்டது!

ஆனால் எது பற்றியும் அவர் வேந்தனிடம் கேட்க வில்லை.

வேந்தனும் சோதிடரிடம் எதையும் கூறவில்லை.

அவன், அரசரை சந்தித்து விட்டு வந்ததும், ''அய்யா! என்னை வாழ்த்துங்கள்'' என்று சோதிடரின் காலில் விழுந்தான்!

''வீடும் நாடும் உன்னைப் போற்ற வேண்டும்'' என்று கூறி, அவனைத் தூக்கி நிறுத்தினார், சோதிடர்.

அடுத்த வினாடி -

வேந்தன் 'ஜெட்' வேகத்தில் குதிரை மீது தாவினான்.

குதிரை 'ராக்கெட்டு' வேகத்தில் பறந்தது!

எங்கு போக வேண்டும் என்பதை, அவன் முடிவு செய்யவில்லை.

ஆனாலும் குதிரையை புயல் வேகத்தில் பறக்க விட்டான்!

வீராதி வீரர்கள் கூட குதிரையின் வேகத்தைப் பார்த்து வாய் மேல் விரல் வைத்தனர்.

சிலர் பயந்து மயக்கமுற்று விழுந்தனர்.

வாயு வேகத்தில் அவனைச் சுமந்து சென்ற குதிரை, ஒரு கிராமத்தைக் கடந்து ஓர் இடத்தில் 'திடீர்' என்று நின்றது. முன் கால் இரண்டையும் தூக்கிக் கனைத்தது!

வேந்தன் திடுக்கிட்டு சிந்தனையைக் கலைத்தான்!

எதிரே, ஒரு வயல்! பயன் கொடுக்கும் பருவத்தில் கருகிக் கிடந்தது! அதற்குச் சொந்தக்காரர்கள், அதைச் சுற்றி கண்ணீர் வடித்துக் கொண்டு இருந்தார்கள்!

வேந்தன் குதிரையை விட்டு குதித்தான்!

ஒரு நிமிடம் வானத்தை நோக்கிப் பார்த்தான்!

அவனது முகம் தெய்வீகக் களை பெற்றது!

இடுப்பில் இருந்த வாளை உருவி, கருகிக் கிடந்த வயலை நோக்கி நீட்டினான்!

அடுத்த வினாடி -

கருகிக் கிடந்த கதிர்கள், களிப்போடு நிமிர்ந்தன!

## 15

**வே**ந்தன், களிப்போடு வயலைப் பார்த்தான்.

அப்பொழுது, குரல் வளை நெறிக்கப் பட்டு ஒருவன் அலறும் அவல ஒலி கேட்டது!

ஆனால், சற்று நேரத்தில் அந்த அலறல் நின்றது!

அந்தக் குரலையே கவனித்துக் கொண்டு நின்ற வேந்தன், ''உன்னை அழிக்காமல் விடமாட்டேன்'' என்று சபதம் எடுத்துக் கொண்டு குதிரையில் ஏறப் போனான்!

அப்போது-

''அய்யா! எங்கள் வயிற்றில் பாலை வார்த்தீர்கள். போய்க் கொண்டு இருந்த எங்கள் உயிரைத் திருப்பித் தந்து விட்டீர்கள். நீங்கள்தான் எங்கள் கண்கண்ட தெய்வம்'' என்று அந்த வயலுக்குச் சொந்தக்காரர்கள் வேந்தனின் காலில் வந்து விழுந்தார்கள்.

வறண்டு போய் இருந்த அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி ஒளி படர்ந்தது!

புதிய உலகையே கண்டு விட்டவர்கள் போல், அவர்கள் பரவசம் அடைந்தார்கள்!

''இனிமேல் உங்களுக்கு ஒரு துன்பமும் ஏற்படாது. சந்தோசமாக இருங்கள்'' என்று சொல்லிக் கொண்டே, வேந்தன் குதிரையில் தாவி ஏறினான்.

ஆணைக்குக் கட்டுப்பட்டது போல, குதிரை நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்து சென்றது!

அவர்கள் எல்லோரும், ஓர் அற்புதக் காட்சியைப் பார்ப்பது போல, வேந்தன் குதிரை சென்ற திசை நோக்கி அமைதியாக நின்றார்கள்!

அந்த அமைதியைக் கருப்பண்ணன் கலைத்தான்!

''முத்தண்ணா! இந்த செய்தியை உடனே அரசரிடம் போய் சொல்ல வேண்டும்'' என்றான் கருப்பண்ணன்.

அதை மற்றவர்களும் ஆமோதித்தார்கள்.



அந்த நிமிடமே, முத்தண்ணனும், கருப்பண்ணனும் அரசரைப் பார்க்கப் புறப்பட்டார்கள்.

அவர்களை எதிர் நோக்கி இருப்பது போல், அரசர் பொன்னரசன் அரண்மனை முற்றத்தில் இளவரசி பூங்கொடியோடு உரையாடிக் கொண்டு இருந்தார்!

காவலர்கள் போய்ச் சொன்னதும், அரசர் எழுந்து வந்தார். பூங்கொடியும் தந்தையுடன் வந்தாள்!

''என்ன விஷயமாக வந்தீர்கள்?'' என்று அரசர் கேட்டார்!

நாட்டு மக்களைச் சந்திப்பதற்கு பொன்னரசன் எப்பொழுதும் தயங்குவது இல்லை.

முத்தண்ணன் வயலில் நடந்த அற்புதத்தை ஒன்று விடாமல் தெரிவித்தான்.

வார்த்தைக்கு வார்த்தை வேந்தனின் பெருமையைப் பாடினான்!

அரசர் வியப்போடுகேட்டுக் கொண்டு இருந்தார்.

பூங்கொடிக்கு வேந்தனின் புகழைக் கேட்க கேட்க உற்சாகமாக இருந்தது!

''வேந்தன் வீரத்தில் சிங்கம். பலத்தில் யானை அழகில் மன்மதன்..'' என்று முத்தண்ணன் அடுக்கிக் கொண்டு போனான்.

''வேந்தனைப் போன்ற ஒரு மாவீரனை நான் பார்த்ததே இல்லை. அவர் கடவுளின் அவதாரம். அதனால் தான்

கருகிக் கிடந்த வயல்கள் அவரைப் பார்த்ததும் செழிப்போடு எழுந்தன'' என்றான் கருப்பண்ணன்.

''அவருடைய குதிரை பாய்ந்து போகிறதோ, பறந்து போகிறதோ என்றே தெரியவில்லை. அவ்வளவு வேகம்! நாங்கள் மெய்மறந்து பார்த்துக் கொண்டு நின்றோம்' என்று முத்தண்ணன் பெருமையடித்துக் கொண்டு இருக்கும் போது, மந்திரி காத்தமுத்து அங்கு வந்தார்!

மந்திரியைக் கண்டதும், பூங்கொடி அங்கிருந்து நழுவி விட்டாள்!

''நீங்கள் போகலாம்!'' என்று அவர்கள் இருவரையும் அரசர் அனுப்பினார்!

''வணங்குகிறேன் அரசே!'' என்று காத்தமுத்து, திரும்பி முத்தண்ணனையும் கருப்பண்ணனையும் பார்த்தார்!

''உங்களுக்குத் தெரியுமா, மந்திரியாரே! ''சீ பூம்பா'' அழித்து விட்டுப் போன வயல்களை வேந்தன் மீண்டும் எழச் செய்தானாம்!'' என்று அரசர் சாதாரணமாகச் சொன்னார்!

''இது கட்டுக்கதை, அரசே'' என்று வியப்போடு, அரசரை நோக்கினார் காத்தமுத்து!

''வயலுக்குச் சொந்தக்காரர்களே வந்து சொல்லிவிட்டுப் போகிறார்கள். எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது'' என்றார் அரசர்.

''அப்படி என்றால் நான் யூகிப்பதுதான் சரி. வேந்தன் ஏதோ பேய் சக்தியை வைத்து விளையாடிக் கொண்டு இருக்கிறான். அவனை உடனே அழிக்கா விட்டால், உங்கள் பதவிக்கு மட்டும் அல்ல, உயிருக்கும் ஆபத்தாகி விடும்!'' என்று எச்சரித்தார் காத்தமுதது!

''அதுசரி, நீங்கள் என்ன விஷயமாக வந்தீர்கள்!'' என்று பேச்சை மாற்றினார் அரசர்.

''சீ பூம்பா'' வின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மக்கள் சொன்னார்கள்! அதை தங்கள் கவனத்துக்கு கொண்டு வர வேண்டும் என்று வந்தேன்...'' என்றார் காத்தமுத்து!

''பழைய செய்திதானே, இது! இந்த அட்டூழியத்தை செய்வது யார் என்பதைக் கண்டு பிடித்தீர்களா?''

''அதற்கு ஒரு முடிவோடுதான் வந்து இருக்கிறேன்.''

## 16

**கா**த்தமுத்து ''முடிவு'' என்றதும், ''முடித்து விட்டார்'' என்றே அரசர் நினைத்தார்!

மந்திரியாரின் திறமையில் இன்னும் அவர் அவ்வளவு நம்பிக்கை வைத்து இருந்தார்!

அந்த நம்பிக்கையில், ''என்ன முடிவு? உடனே, சொல்லுங்கள், மந்திரியாரே!'' என்றார் உற்சாகமாக!

''வேந்தனை ஒழித்துக் கட்டும் பொறுப்பை என் மகன் மாவீரன் வெங்கனிடம் ஒப்படைக்கலாம் என்று இருக்கிறேன்'' என்றார் காத்தமுத்து மிகச் சாதாரணமாக.

அதைக் கேட்டதும், அரசர் முகத்தில் இருந்த நம்பிக்கை ஒளி மறைந்தது!

அரசருக்கு ஆத்திரம் ஒரு பக்கம். அனுதாபம் மறுபக்கம்!

''சீ பூம்பா''வை கண்டு பிடியும் என்றால், வேந்தனை ஒழிக்க வேண்டும் என்கிறாரே?

''என்ன சொல்லுகிறீர், மந்திரியாரே'' என்றார் அரசர் வெறுப்போடு.

''அரசே! வேந்தனை ஒழித்தால் போதும்! அவன் தான் இந்த வேலையைச் செய்வது! கருகிக் கிடந்த வயலை எழச் செய்ததே அதற்கு சாட்சி!'' என்றார் காத்தமுத்து அழுத்தமாக.

அரசர் நொடிப் பொழுது சிந்தித்தார். பிறகு, ''மந்திரியாரே! உமது விருப்பப்படியே, உம் மகனை அனுப்பும். ஆனால், வேந்தனைக் கொன்று வராமல், என்னிடம் கொண்டுவர வேண்டும். நானே அவனைத் தண்டிப்பேன்'' என்றார்.

''இன்னும் ஒரு வாரத்தில் வேந்தன் உங்கள் காலடியில் கிடப்பான்'' என்ற காத்தமுத்து, வேகமாக அரசரிடம் விடை பெற்றுச் சென்றார்!

அன்று பூங்கொடிக்கு தூக்கம் பிடிக்கவில்லை. கண் இமைகள் ஓய்வு கொள்ள மறுத்தன!

அவள் நோக்கும் திசையெல்லாம் வேந்தன் வந்து நின்றான்!

பூங்கொடிக்கு எப்பொழுதுமே வேந்தன் மீது அன்பு உண்டு!

அது ''திடீர்'' பாசம் அல்ல. சிறு வயது முதலே ஏற்பட்ட ஒரு பிணைப்பு!

வேந்தனின் தந்தை மாவீரன் நரசிம்மன், பொன்னிமலைத் தீவின் தளபதியாக இருந்த போது, சிறுவன் வேந்தன், அரண்மனைத் தோட்டத்துக்கு வருவான்! பூந்தோட்டத்தில் பூங்கொடியோடு ''கண்ணாம் பூச்சி'' விளையாடி விட்டுப் போவான்!

அவன் சிறு வயதிலேயே தன் தந்தையைப் போல், வீரனாகத் திகழ்ந்தான்! பூங்கொடிக்கு, அவனை மிகவும் பிடித்து இருந்தது!

அந்த அன்பை - மதிப்பை - வேந்தன் மீது, அவள் இப்பொழுதும் பசுமையாக வைத்திருந்தாள்!

வேந்தனின் வீர தீரச் செயல்களை கேள்விப்பட கேள்விப்பட, அவன் மீது, அவளுக்குள்ள அன்பு அதிகமானது!

அதனால்தான் அன்றொரு நாள், அரசவையில் மந்திரி காத்தமுத்து, வேந்தனை ஒழித்துக் கட்ட அரசரிடம் தீ மூட்டியபோது, பூங்கொடி வேந்தனுக்கு ஆதரவாகக் கொடி தூக்கினாள்!

இன்று, முத்தண்ணனும் கருப்பண்ணனும் வேந்தனைப் பற்றி அரசரிடம் கூறியதை நேரில் கேட்டதும், அவளுக்கு உற்சாகம் தாழ முடியவில்லை.

பாலில் தேன் கலந்து சாப்பிட்டது போல இருந்தது, அவளுக்கு!

ஓடிப் போய் பஞ்சு மெத்தையில் படுத்தாள். ஆடினாள், பாடினாள். அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

ஆனால், வேந்தனைப் பிடிக்க காத்தமுத்துவின் மகன் வெங்கனை அனுப்பி இருப்பதாக, பொன்னரசன் வந்து சொன்னதும், அவள் ''தீ''யை மிதித்து விட்டவள் போல் ஆனாள்!

வேந்தனின் வீரத்தில் அவளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது! ஆனால், சூழ்ச்சி வென்று விடக் கூடாதே என்று நினைத்து பயந்தாள்!

வேந்தனை சந்தித்து காத்தமுத்துவின் சூழ்ச்சியை சொன்னால்தான் அவள் மனது அமைதி அடையும்!

இது முடிகிற காரியமா?

பூங்கொடியால் அரண்மனையை விட்டு தனியே வெளியே போக முடியாது!

வேந்தனுக்கு என்று ஓர் இடமும் இல்லை! அவனை எங்கே போய் தேடுவது?

கடிதம் மூலம் தூது அனுப்பவும் முடியாது!

பலவாறு சிந்தித்தபடி படுக்கையில் சாய்ந்த பூங்கொடி ''பளிச்'' என்று ஒன்று தோன்றவே, வேகமாக எழுந்து உட்கார்ந்தாள்!

தன் தந்தையின் அறைக்குச் சென்றாள். பொன்னரசன் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருந்தார்!

''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டபடி, தன் பணிப் பெண்கள் அறைக்குப் போனாள்.

தன் உயிர்த் தோழிகளான மாலாவையும், லதாவையும் எழுப்பினாள்!

அவர்கள் காதில் ஏதோ கிசுகிசுத்தாள்!

## 17

அடுத்த நிமிடம்

பூங்கொடியும் ஒரு பணிப் பெண்ணாக மாறினாள்!

மூன்று பேரும் துணியால் போர்த்திக் கொண்டு அந்தப்புரத்து வழியே அரண்மனையை விட்டு வெளியேறி னார்கள்!

பூங்கொடி போகத் தீர்மானித்த இடம், சோதிடர் வீடு.

சோதிடரிடம் கேட்டால், வேந்தன் இருக்கும் இடம் தெரிந்துவிடும் என்று அவள் நினைத்தாள்!



பூனை போல் பதுங்கிச் சென்ற அந்த மூன்று பேரும் சிறிது தூரத்தில் இருந்து "யாரது?" என்று அதட்டும் குரலைக் கேட்டு, திடுக்கிட்டு நின்றார்கள்!

பூங்கொடிக்கு இதயத் துடிப்பே நின்று விடும் போல இருந்தது. உடல் முழுவதும் "குப்" என்று வியர்த்துக் கொட்டியது!

அப்படி அவர்களை அதட்டியது, பூங்கொடி பயந்தது போல, அவளது தந்தையோ (அரசர்) மந்திரி காத்தமுத்துவோ, அல்லது காவலரோ அல்ல!

அவள் யாரைத் தேடி புறப்பட்டு இருக்கிறாளோ, அதே வேந்தன்தான் அந்தக் குரலுக்குச் சொந்தக்காரன்!

பெண்கள் மூவரும் பயந்து பதுங்கிப் போய் நின்றதும், "பயப்படாதீர்கள். உங்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது" என்றபடி வேந்தன் அவர்களை நெருங்கி வந்தான்!

வந்தவன் வேந்தன்தான் என்பதைத் தெரிந்து கொண்டதும், பூங்கொடி நாணமும் அச்சமும் கொண்டு ஒதுங்கிக் கொண்டாள்!

பூங்கொடி பணிப் பெண் உடையில் இருந்தாலும், அவளைக் கண்டு கொள்ள வேந்தனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

பணிப் பெண் மாலா, அவர்கள் அந்த நடுநிசி நேரத்தில் புறப்பட்டு வந்த காரணத்தைச் சொன்னாள்!

''இளவரசியார் வாய் திறக்கமாட்டார்களோ!'' என்று குறும்பாக கேட்டுவிட்டு, ''இளவரசி! எனக்காகவா இந்த நடுநிசி நேரத்தில் யாருக்கும் தெரியாமல் புறப்பட்டு வந்தீர்கள்?'' என்று எல்லாம் புரிந்தும் கேட்டான், வேந்தன்!

பூங்கொடிக்கு நா எழவில்லை. வேந்தனைப் பார்த்த மகிழ்ச்சியில் என்ன பேசுவது என்று தெரியாமல் விழித்தாள்!

''வாருங்கள்! நானே உங்களைப் பத்திரமாக அரண மனையில் கொண்டு போய்விட்டு விடுகிறேன்'' என்று வேந்தன் முன்னோக்கி நடந்தான்!

''வேண்டாம்! என் தந்தை பார்த்துவிட்டால் ஆபத்து. நாங்களே போய்விடுகிறோம்!''

பூங்கொடிதான் முதன் முறையாக வாய் திறந்தாள்!

''ஒரு ஆபத்தும் ஏற்படாது! பேசாமல் என்னோடு வாருங்கள்'' என்றான் வேந்தன்!

பூங்கொடி இப்பொழுது மறுத்துப் பேசவில்லை!

''காத்தமுத்துவும் அவர் மகன் வெங்கனும் உங்களை ஒழிக்க சதி செய்கிறார்கள். நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்று சொல்லிக் கொணடே, பூங்கொடி வேந்தனைத் தொடர்ந்து நடந்தாள்!

''இந்த நாட்டையும், மக்களையும் அழிக்க யாரையும் நான் அனுமதிக்கமாட்டேன். நீங்கள் தைரியமாக இருங்கள்.

இனிமேல் இப்படி என்னைத் தேடி வராதீர்கள். தேவை என்றால் நானே அரண்மனைக்கு வந்து உங்களைச் சந்திப்பேன்!'' என்று வேந்தன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, ''எப்பொழுது வருவீர்கள்?'' என்று ஆவலோடு கேட்டாள், பூங்கொடி!

வேந்தன், அவளுக்கு பதில் சொல்லவில்லை!

அதற்குள், ''எல்லோரும் அப்படியே நில்லுங்கள்!'' என்று ஒரு உருவம் அவர்களை அதட்டியது!

பூங்கொடியும், மற்ற பணிப் பெண்களும் அந்தக் குரலைக் கேட்டு அஞ்சி நடுங்கி நின்றார்கள்!

அது அவர்களுக்கு பழக்கப்பட்ட குரல்!

வேந்தன் மட்டும் அசையாமல் நின்றான்!

அவனது வலது கரம் வாளைப் பற்றியது!

''யாரது?'' என்று கேட்டுக் கொண்டு, அந்த முரட்டு உருவம் வேந்தனை நோக்கி வந்தது!

அது, மந்திரி காத்தமுத்துவின் அருமந்தப் புத்திரன் வெங்கன்!

காப்பாற்றப் போய், காட்டிக் கொடுத்த கதையாகி விட்டதே! என்று பூங்கொடி வருந்தினாள்!

''வேந்தனா! அப்படியே அசையாமல் நில்'' என்று ஒரு எக்காளச் சிரிப்பை உதிர்த்துவிட்டு, ''உன்னைத்தான் தேடிக் கொண்டு வந்தேன்'' என்று வெங்கன் வேந்தனை நெருங்கினான்.

''உன்னோடு பெண்ணின் குரலும் கேட்டதே! அவர்கள் எங்கே?'' என்று கேட்டான்!

''ஏன் உனக்குப் பெண்கள்தான் வேண்டுமா?'' வேந்தன் அலட்சியமாகக் கேட்டான்.

'கிண்டலா செய்கிறாய். உன்னை என்ன செய்கிறேன் பார்!' என்று வெங்கன் வாளை உருவினான்!

அடுத்த நிமிடம் -

வேந்தனது வாளும் கைக்கு வந்தது!

அங்கு ஒரு போர்க்களமே உருவானது!

வேந்தன் சாதாரணமாகவே வாளைச் சுழற்றினான்!

அதற்கே வெங்கன் ''ஆ... ஊ...'' என்று கத்தினான்!

## 18

**வெ**ங்கன் ஒன்றும் கோழை அல்ல.

அரைகுறையாக வித்தை கற்றவனும் அல்ல.

மந்திரி காத்தமுத்து, அவனுக்கு எல்லாவிதப் போர் முறைகளையும் முறைப்படி கற்றுக் கொடுத்து இருந்தார்.

மறைந்த தளபதி மாவீரன் நரசிம்மனைப்போல, நிகரில்லா வீரனாக வெங்கன் திகழ வேண்டும் என்று காத்தமுத்து விரும்பினார்!

அவனும் சோடை போகவில்லை!

உறுதி வாய்ந்த தேக்கு மரம் போன்ற உடலை அவன் பெற்றிருந்தான். அது, ஒரு முழு வீரனுக்கான கம்பீரத்தை அவனுக்கு அதிகமாகவே கொடுத்தது!

இதை வைத்துக் கொண்டு, பொன்னிமலைத் தீவையே வெங்கன் ஆட்டிப் படைக்க நினைத்தான்!

ஆனால் அந்த எண்ணத்தை வேந்தனின் வாள் வீச்சு, குலைத்துக் கொண்டு இருந்தது!

அசையாத அவன் உடலையும் வேந்தன் வாள் அசைய வைத்தது!

அவன் வீசிய ஒவ்வொரு வீச்சும், வெங்கனை மேல் மூச்சு, கீழ்முச்சு வாங்கச் செய்தது.

எனவே, வெங்கன் கடைசி முயற்சியில் இறங்கினான்!

வேந்தனுக்குப் போக்குக் காட்டி, வாளை அவன் மார்புக்கு நேராகப் பாய்ச்சினான்.

வேந்தன், அதையும் மிக லாவகமாக தடுத்து நிறுத்தினான்!

அந்த வேகத்தில் வெங்கனின் வாளை மண் கவ்வவும் வைத்தான்!

வாள் 'டொங்' என்று போய் தரையில் விழவும், வெங்கன் 'ஆ' என்று அலறினான்!

''ஓ! சீபூம்பா'' என்று அபயக்குரல் எழுப்பினான்.

துகில் உரிய வந்த துரியோதனனிடம் இருந்து தன் மானத்தைக் காக்க, திரவுபதி, ''கண்ணா!'' என்று அபயக்குரல் எழுப்பினாள்.

கண்ணன் அவளுக்கு அபயம் அளித்தான்!

திரவுபதியின் மானம் காக்கப்பட்டது.

முதலையின் பிடியில் சிக்கி, உயிருக்குப் போராடிக் கொண்டு இருந்த கஜேந்திரன் என்ற யானை, ''ஆதிமூலமே!'' என்று அழைக்க, திருமால் காக்கும் சக்கரத்தால், முதலையை அழித்து, யானையின் உயிரைக் காத்தார்

அதுபோல, வெங்கன் எழுப்பிய ''ஓ...! சீ பூம்பா'' என்ற அபயக் குரலுக்கும் அபயம் கிடைத்தது!

நிராயுத பாணியாய் - அவமானச் சின்னமாய் வேந்தன் முன் நின்று கொண்டு இருந்த வெங்கன் கைக்கு வாள் வந்தது!

அவன் கம்பீரமாக தலை நிமிர்ந்தான்!

அடுத்த வினாடி! -

வேந்தனைச் சுற்றி ''சீபூம்பா!'' என்ற குரல் பலமாக ஒலித்தது.

அடுத்து அவனைச் சுற்றி திபு, திபு என்று தீ படர்ந்து, சுவாலை விட்டு எரிந்தது!

அவன் தீ வட்டத்துக்குள் நின்று கொண்டு இருந்தான்!

அதைப் பார்த்து, வெங்கன் ''இடி இடி'' என்று சிரித்தான்!

''இன்றோடு ஒழிந்தாய்'' என்பது போல், வெற்றிப் பெருமிதத்தோடு வேந்தனைப் பார்த்தான்!

வெங்கனின் இந்த ''திடீர்'' செயலைக் கண்டு வேந்தன் கூட ஒருகணம் செயல் இழந்துதான் போனான், செய்வது அறியாது தவித்தான்!

தீயின் வெம்மை அவன் உடலைத் தாக்கியது.

அவன் புழுவாகத் துடித்தான்!

அப்பொழுதுதான் தன் பலமும், வாளின் சக்தியும் அவனுக்கு நினைவு வந்தது.

அன்றொரு நாள், கருகிக் கிடந்த வயலை, தன் தெய்வ சக்தியால் வளப்பமுடன் எழச் செய்த காட்சியை நினைவு கூர்ந்தான்!

அடுத்த கணம் - உறையில் கிடந்த வாளை, உருவி, வானத்தை நோக்கிப் பார்த்தான்!

என்ன ஆச்சரியம்!

அவனைச் சுற்றிப் படர்ந்த தீ சுவாலை. அவன் மீது பூங்காற்றை வீசியது!

இதை தாங்கிக்கொள்ள முடியாத வெங்கன் ''சீழும்பா'' என்று கத்திக் கொண்டு மீண்டும் வேந்தன் மீது பாய்ந்தான்!

ஆனால், வேந்தனின் மந்திரவாள் தந்திரமாகச் சுழன்று, அவனது திடீர் தாக்குதலை முறியடித்தது!

வெங்கனின் வாள் மீண்டும் 'டொங்' என்று போய் தரையில் விழுந்து, மண்ணைப் பதம் பார்த்தது!

இதைக் கொஞ்சமும் எதிர்பாராத வெங்கன், அங்கு மேலும் நிற்பது ஆபத்து என்பதை உணர்ந்தவனாய், அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்!

ஆனால், வேந்தன் அவனை விரட்டி அடிக்கவில்லை!

வெங்கன் ஓடும்வரை ஓடட்டும் என்று விட்டு விட்டான்!

இத்தனையும் நடந்து கொண்டு இருந்தது!

ஆனால், பூங்கொடிக்கும் மற்ற பணிப் பெண்களுக்கும் வாள் சத்தம்தான் கேட்டதே தவிர உருவம் எதுவும் தெரியவில்லை!

இது மாயமா? மந்திரமா?

பூங்கொடி தவித்தாள்!

## 19

''இளவரசி! அரண்மனைக்குப் போகலாம். வாருங்கள்!'' என்று வேந்தன் அழைத்த பிறகு தான் பூங்கொடிக்கு சுயநினைவு வந்தது!

''என்ன...?'' என்ற பூங்கொடியால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லை. வியப்போடு வேந்தனைப் பார்த்தாள்!

அவளது மயக்கத்தைப் புரிந்து கொண்டவேந்தன், ''இளவரசி ஏன் இப்படி விழிக்கிறீர்களா?'' என்றான் குறும்பாக.

''வெங்கன் வந்தானே. அவன் என்ன ஆனான்? வாட்போர் புரியும் சத்தம் கேட்டதே, நீங்கள் யாரோடு சண்டை செய்தீர்கள். சத்தம் மட்டும் காதில் விழுந்தது. எங்கள் கண்களுக்கு ஏன் எதுவும் தெரியவில்லை?'' பூங்கொடிதான் வாய் திறந்து கேட்டாள்! கேட்டுவிட்டு, பதிலுக்கு அவன் முகத்தைப் பார்த்தாள்.

''வெங்கன் பார்த்து இருந்தால், உங்கள் நிலைமை என்ன ஆகும்? என் தெய்வம்தான் உங்களைக் காப்பாற்றி யிருக்கிறது'' என்றான் வேந்தன் சாதாரணமாக!

''தெய்வமா?''

பூங்கொடி அவனை அதிர்ச்சியோடு நோக்கினாள்.

''ஆமாம். வெங்கன் வந்ததும், என் தெய்வமே எங்கள் இளவரசிக்கும் அவருடைய பணிப் பெண்களுக்கும் இந்த வெங்கனால் எந்தவித ஆபத்தும் இல்லாமல் காப்பாற்று'' என்று வேண்டினேன். என் தெய்வம் உங்களைக் காப்பாற்றி விட்டது!'' என்று விளக்கினான் வேந்தன்!

''வெங்கன் என்னை என்ன செய்துவிட முடியும்?''

வீராங்கனை போலக் கேட்டாள், பூங்கொடி.

''நான் இருக்கும்போது, அவன் என்ன செய்ய முடியும்! ஆனாலும் உங்களை என்னோடு பார்த்த விஷயத்தை



அரசரிடம் போய்ச் சொன்னால், ஆபத்தாகி விடுமே! அதனால்தான் உங்களை வெங்கனிடம் இருந்தும், வெங்கனை உங்களிடம் இருந்தும் தெய்வம் மறைத்து விட்டிருக்கிறது'' என்று வேந்தன் சொன்னதும், பூங்கொடி வியப்போடு அவனை நோக்கினாள்.

வேந்தன் சிறந்த வீரன் என்று மட்டுமே நினைத்து இருந்த பூங்கொடிக்கு, அவனிடம் இருந்த தெய்வ சக்தி வியப்பைக் கொடுத்தது!

''சரி, இனிமேல் அரண்மனைக்குப் போகலாமா?'' என்றான், அவன்.

''நாங்களே போய் விடுகிறோம்'' என்றாள் பூங்கொடி, வியப்பைக் கலைத்துவிட்டு!

வேந்தன் அதற்கு சம்மதிக்கவில்லை!

''உங்களைப் பத்திரமாக கொண்டு போய் சேர்க்க வேண்டியது என் பொறுப்பு. நீங்கள் யார் கண்ணிலும் படாமல் அரண்மனை போய் சேர்ந்தால் தான் எனக்கு நிம்மதி!'' என்றவன், ''வாருங்கள், இளவரசி'' என்று முன்னோக்கி நடந்தான்!

என்ஜீனை தொடர்ந்து செல்லும் ரெயில் பெட்டிகள் போல பூங்கொடியும், மற்ற பணிப்பெண்களும், வேந்தனைத் தொடர்ந்து போனார்கள்!

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு என்பார்கள். அப்படித்தான் நினைத்தான் வெங்கன்!

தலை தப்பினால் போதும் என்று வாளை வேந்தன் காலடியில் விட்டுவிட்டு தப்பி ஓடிய வெங்கன், நேரே தன் மாளிகைக்குப் போனான்!

''தந்தையே!'' என்று குரல் எழுப்பினான்!

அப்போது அங்கே காத்தமுத்து இருந்தார்.

மைந்தனின் அழைப்புக்குரல் கேட்ட காத்த முத்து மகன் வெற்றியோடு திரும்பி விட்டான் என்று நினைத்து, ''மகனே!'' என்று அவனைத் தழுவிக் கொள்ள ஓடோடி வந்தார்.

ஆனால் அவர் வெங்கனைத் தழுவிக் கொள்ளவில்லை!

பெற்றவர் பெருமைப்படும்படியாகவா, வெங்கன் வந்து நின்றான்?

கோழையாக, நடைப் பிணமாக வாளை இழந்து வந்து நின்ற மகனைப் பார்த்ததும் காத்தமுத்து ஏமாற்றம் அடைந்தார். அவமானத்தால் வெந்தார்!

''எல்லா வித வாள் வித்தைகளையும் செய்து பார்த்தேன். பலிக்கவில்லை. அதற்கு மேலும் போய் அவனை அழிக்க முயன்றேன். ஆனால் அசைக்கக் கூட முடியவில்லை. வேந்தன் தப்பிவிட்டான்'' என்று வெங்கன் அறிக்கை வாசித்தான்!

''அதற்கு மேலும்'' என்பதை வெங்கன் அழுத்திச் சொன்னான்!

''எதற்கு மேலும்'' என்று காத்தமுத்து மகனிடம் கேட்டுவிடவே நினைத்தார்.

ஆனால் ஆத்திரம் அவர் வாயை அடைத்தது!

''நீ உண்மையான **வீரன்** என்றால், பறிகொடுத்த வாளோடு திரும்ப வா! போ!'' என்று குரல்வளை தெரிக்கக் கத்தினார், காத்தமுத்து!

வெங்கன்மீது அடிதான் விழவில்லை!

## 20

**நா**டாளுவான் என்று நினைத்தவன், நாலாந்தர ஒருவனிடம் தோற்றுப் போய் வந்தால், யாருக்குத் தான் ஆத்திரம் ஏற்படாது!

அந்த நிலையில் தான் காத்தமுத்துவும் இருந்தார்.

காத்தமுத்துவின் திட்டம், வெங்கன் பூங்கொடியை மணமுடித்துக் கொண்டு பொன்னி மலைத்தீவுக்கு அரசன் ஆக வேண்டும் என்பது! அதனால் தான் மாவீரன் தளபதி நரசிம்மனை சூழ்ச்சியால் அழித்தார். இப்பொழுது நரசிம்மனின் மகன் வேந்தனை ஒழிக்கப் போராடிக் கொண்டு இருக்கிறார்.

ஆனால் வெங்கன் தன் தந்தை காத்தமுத்துக்கு ஒரு படிமேலே போனான்.

அரசன் பொன்னரசனை அழித்து விட்டு, ஆட்சியைப் பிடிக்க அடங்கா ஆசை கொண்டான். குறுக்கு வழியில் இறங்கினான்!

அப்போது அவனுக்கு துணையாகக் கிடைத்தவன் தான் ''சீபூம்பா!''

இவன் பெரிய மந்திரவாதி! அரக்க குணம் படைத்தவன்! கல்லை மண்ணாகவும், இரும்பைத் துரும்பாகவும் மாற்றும் வல்லமை பெற்றவன். மக்களைக் கொடுமைப் படுத்துவதில் இன்பம் காணுபவன்.

இவன், பொன்னிமலைத் தீவுக்கு வடக்கே உள்ள ஒரு குகையில் வாழ்ந்து வந்தான்!

இந்த குகை, உயர்ந்த நான்கு மலைகளுக்கு மத்தியில் இருந்தது!

''நான் இந்த நாட்டின் அரசன் ஆக வேண்டும்'' என்று வெங்கன் மந்திரவாதியிடம் சொன்னான்!

''நீ அரசன் ஆனால் எனக்கு என்ன தருவாய்?'' என்று கேட்டான் மந்திரவாதி!

''நீ தான் எனக்கு மதி மந்திரி!''

இதைக் கேட்டதும் மந்திவாதி ''இடி இடி'' என்று சிரித்தான்! அவனுக்கு உற்சாகம் தாளவில்லை.

இடது கையில் வைத்திருந்த குழந்தையின் மண்டை ஓட்டையும் வலது கையில் இருந்த பூண் போட்ட எலும்புத் தடியையும் தரையில் வைத்தான்!

கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த சங்கை சற்று ஒதுக்கிப் போட்டு விட்டு, ''நண்பரே!'' என்று வெங்கனைத் தழுவிக் கொண்டான்!

''நம் நட்பு ஓங்கட்டும்'' என்று முழங்கிய வெங்கன், ''எனக்கு அரச பதவியை எப்படிப் பெற்றுத் தருவீர்!'' என்று மந்திரவாதியிடம் கேட்டான்!

''நீ எதற்கும் கவலைப்படாதே! நான் காளி அருள் பெற்றவன், அதைக் கொண்டு மக்களைக் கொன்று குவிக்கிறேன். அரசரைப் பதவியை விட்டு ஓட வைக்கிறேன். அதன் பிறகு நீ ராஜா, நான் மந்திரி!'' என்று வெறி பிடித்தவன் போலக் கத்தினான், மந்திரவாதி!

வெங்கன் நெகிழ்ந்து போனான். ''நல்ல திட்டம்! நாம் மீண்டும் எப்பொழுது சந்திக்கலாம்? என்று கேட்டான்!

''எப்பொழுது வேண்டுமானாலும், நீ இங்கு வரலாம் போகலாம். உனக்கு என் உதவி தேவைப்படும் போது, ''சீ பூம்பா'' என்று குரல் எழுப்பு, என் சக்தி உனக்கு வரும்'' என்று சொல்லி அனுப்பினான், மந்திரவாதி.

இது வெங்கனுக்குப் புது பலத்தைக் கொடுத்தது. அவன் தலைகால் புரியாமல் ஆடத் தொடங்கினான்.

வேந்தனை அழிக்கும் படலத்திலும் இறங்கினான்.

இந்த ''சீபூம்பா''வைப் பற்றி காத்தமுத்துவிடம் கூட வெங்கன் சொல்லிக் கொள்ளவில்லை!

இதற்கு காத்தமுத்து சம்மதிக்க மாட்டாரோ என்ற எண்ணம் அவனுக்கு!

ஆனால், ''சீ பூம்பா'' வின் சக்தியும் வேந்தனிடம் பலிக்காமல் போனது, வெங்கனுக்கு வியப்பைக் கொடுத்தது.

தந்தையின் ஆதரவையும் இழந்து போய் நின்ற வெங்கன், ''சீ பூம்பா'' வை விட்டால் வேறு கதியே இல்லை என்று எண்ணினான்!

அந்த தைரியத்தில் காத்தமுத்துவை நோக்கினான். ''தந்தையே! நான் கோழை அல்ல. வெற்றியோடு உங்களை வந்து சந்திக்கிறேன்'' என்று சொல்லி விட்டு, வில்லில் இருந்து சென்ற அம்பு போல், அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்!

வெங்கனின் குதிரை, மந்திரவாதி குடியிருக்கும் மலையடிவாரத்தில் போய்த் தான் காலைத் தரையில் பதித்தது!

குதிரையில் இருந்து குதித்த வெங்கன், மலையைத் தாண்டி, மந்திரவாதியின் குகைக்குப் போனான்.

அங்கே -

மந்திரவாதி, ஓமகுண்டத்தில் தீயை வளர்த்து, ''ஓம்...ரீம்.. சீ... பூம்பா!'' என்று மந்திரம் ஓதிக் கொண்டு இருந்தான்!

அவனது குரல் அந்த மலைப் பள்ளத்தாக்கு முழுவதும் எதிரொலித்தது!

வெங்கன் பயபக்தியோடு, குகை வாசலில் வந்து நின்றான்.

மந்திரவாதி, அவனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை!

வெங்கனுக்கு கால்கள் வலித்தன. கண்கள் சினத்தால் சிவந்தன!

## 21

**கா**ரியம் ஆகவேண்டும் என்றால் கழுதைக் காலையும் பிடிக்க வேண்டும் என்பார்கள்!

அதனால், வெங்கன் மந்திரவாதி மீது எழுந்த கோபத்தை தணித்துக் கொண்டான்!

அவன் அரசன் ஆகவேண்டும். அதுதான் அவனுக்கு முக்கியம்!

மந்திரவாதி தன்னை அலட்சியப்படுத்தவில்லை. பூஜையில் மும்முரமாக இருப்பதால் தன்னை கவனிக்க வில்லை என்று அவன் தனக்குத்தானே சமாதானம் கூறிக் கொண்டான்!

ஆனாலும், அவனால் அதிக நேரம் குகையின் காவலன் போல் நிற்க முடியவில்லை.

மவுனத்தைக் கலைத்து விட்டு, இலேசாகக் கனைத்தான்!

அந்த சத்தம் மந்திரவாதியின் காதில் விழுந்திருக்க வேண்டும்!



''யாருடா, அவன்! என்னுடைய அனுமதி இன்றி எனது குகைக்குள் நுழைந்திருப்பது!'' என்று அவன் ஆவேசம் வந்தவனைப் போல் எழுந்தான்!

வெங்கன் வெட வெடத்துப் போனான்!

தப்பு செய்து விட்டோமோ என்று பயந்தான்!

கொடூரமாக எழுந்த மந்திரவாதி வெங்கனைப் பார்த்ததும், ''வெங்கனா! வா. எப்பொழுது வந்தாய்'' என்று சாதாரணமாகக் கேட்டான்!

வெங்கனுக்கு அப்போதுதான் உடல் நடுக்கம் நின்றது!

முகத்தில் ஒரு அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, இப்பொழுது தான் வந்துகொண்டு இருக்கிறேன்'' என்று பொய் சொன்னான்.

அவனை ஒரு சதுர வடிவ கல்லின்மேல் உட்காரச் சொல்லிவிட்டு, ''பொன்னி மலைத்தீவின் வருங்கால மன்னர், இந்த ஏழையின் குகைக்கு வரக் காரணம், என்னவோ?'' என்று கேட்டுக் கொண்டே, மந்திரவாதியும் ஒரு கல்லின் மீது அமர்ந்தான்.

''அரசர் பதவி பறிபோய்விடும் போல இருக்கிறது...!''

வெங்கன் சொல்லி முடிக்கவில்லை!

அதற்குள், ''என்ன?'' என்று வெடுக்கென்று எழுந்தான், மந்திரவாதி!

''ஆமாம் நான் அரசர் ஆகப் போவதும் இல்லை எனக்கு நீ மந்திரியாக இருக்கப் போவதும் இல்லை'' என்றான் வெங்கன் விரக்தியோடு!

''நமக்குப் போட்டியாக வந்திருப்பவன் யார்? சொல்லு, இன்றைக்கே அவனை ஒழித்துக் கட்டி விடுகிறேன்'' என்று மீசையை முறுக்கினான், மந்திரவாதி!

அவனது மலைபோன்ற உடல் ஆத்திரத்தால் அசைந்தது!

வெங்கன், மந்திரவாதியை சீண்டிவிட்டு, நயமாக விஷயத்தைச் சொன்னான்!

''அவன் பெயர் வேந்தன், பொடியன்; ஆனால் யானை பலம் கொண்டவன். அவனை வீழ்த்த யாராலும் முடியவில்லை'' என்று அங்கலாய்த்தான்.

''புலியான உன்னாலுமா அந்த யானையை வீழ்த்த முடியவில்லை'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான், மந்திரவாதி.

உண்மையை ஒப்புக் கொண்டான் வெங்கன்.

''வேந்தன் என்னையும் மிஞ்சிவிட்டான்'' என்று சொன்ன அவன், முந்திய இரவு நடந்த சண்டையை ஒன்று விடாமல் விளக்கினான்.

அதைக் கேட்டதும், மந்திரவாதி ''அவமானம்! அவமானம்!'' என்று கத்தினான்.

அவனது மீசை துடித்தது!

''சீ பூம்பா'' சக்திகூட அவனிடம் பலிக்காது போல இருக்கிறது. அவ்வளவு வீரம் படைத்து இருக்கிறான்'' என்று வெங்கன் தூபம் போட்டான்.

மந்திரவாதிக்கு கோபம் தலைக்கு ஏறியது.

''என்னிடமா விளையாடுகிறான். அந்தப் பொடியன்! அவனை என்ன செய்கிறேன் பார்!'' என்று மந்திரவாதி ஓமகுண்டத்தின் முன் போய் நின்றான்.

ஓமகுண்டத்தில் தீ சுவாலை விட்டு எரிந்து கொண்டு இருந்தது!

அதன் முன் போய் நின்ற மந்திரவாதி, ''ஓம்... ரீம்... அம்...ஓ... காளி!'' என்று அலறிக் கொண்டு சாமி வந்தவன் போல், ஆடினான்.

வெங்கன் பயபக்தியோடு தனியே நின்று கொண்டு இருந்தான்.

''வெங்கா!''

மந்திரவாதி திடீரென்று கத்தினான்.

வெங்கன் ஓடிப்போய் மந்திரவாதி முன் நின்றான்!

அவனை நிமிர்ந்து பார்த்த மந்திரவாதி, ''என் அன்னை காளி அருள் தந்து விட்டாள். இனிமேல் உன்னை யாரும் அசைக்க முடியாது!'' என்று பக்கத்தில் இருந்த சூலத்தில் தன் பெருவிரலை தேய்த்தான்!

விரலில் இருந்து ரத்தம் கொட்டியது!

அதை எடுத்து வெங்கனின் நெற்றியில், ''ஓம்... ரீம்... சீ பூம்பா'' என்று ஜெபித்தான்.

பிறகு தன் இடையில் கிடந்த வாளை எடுத்து வெங்கனிடம் கொடுத்தான்!

## 22

அது, மந்திரவாதி பயன்படுத்தி வந்த வாள்!

''வெங்கா! இது அதிசய வாள்! நீ யாரைக் குறி வைத்துத் தாக்குகிறாயோ, அவனைக் கொன்று விட்டு, வாள் உன்னிடமே திரும்பி வரும். இந்த வாள் உன்னிடம் இருக்கும் வரை உன்னை யாரும் வெல்ல முடியாது. சென்றுவா; வேந்தனை வென்றுவா'' என்று வாழ்த்தி அனுப்பினான்!

வெங்கன் அந்த வாளை அப்போதே சோதித்துப் பார்க்க விரும்பினான்.

எதிரியைக் கொன்று விட்டு வாள் திரும்பி வரும் என்பதை உறுதி செய்து கொள்ள நினைத்தான்.

பத்மாசூரன் என்ற அரக்கன், சிவனிடம் ஒரு வரம் கேட்டுத் தவம் இருந்தான்!

அவன் யார் மீது கை வைத்தாலும், அவர்கள் உடனே எரிந்து சாம்பலாகி விட வேண்டும்!

இதுதான், அவன் கேட்ட வரம்!

சிவனும் பத்மாசூரன் கேட்ட வரத்தை அளித்தார்!

வரம் பெற்றதும், பத்மாசூரனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது!

சிவன் அளித்த வரம் பலிக்குமா, பலிக்காதா? என்ற சந்தேகம்தான், அது!

சிவன் அளித்த வரத்தை, அவன் சோதித்துப் பார்க்க விரும்பினான் - தங்கத்தை உரசிப் பார்ப்பது போல!

அதற்கு அவன் தேர்ந்து எடுத்ததும் சிவனைத் தான்!

வரம் கொடுத்தவர் மீதே பத்மாசூரன் கை வைக்க முயற்சி செய்தான்!

ஆனால், வெங்கன் அந்த அளவு மோசமாகப் போக வில்லை.

மந்திரவாதி மீதே வாளை வீசிப் பார்க்க அவன் விரும்பவில்லை!

மந்திரவாதியின் வார்த்தையில் அவனுக்கு நம்பிக்கை இருந்தது! ஆனாலும், அதை உறுதிப்படுத்திக் கொள்ள ஆசைப்பட்டான்!

அதற்காக, வேறு யாரையோ தேடி, மந்திரவாதியின் குகையை விட்டு, காட்டு வழியே வந்து கொண்டிருந்தான்!

அப்போது, எதிரே பறந்து வந்த ஒரு கழுகு, அவன் கழுகுக் கண்ணில் பட்டது!

நாலுகால் பாய்ச்சலில் சென்று கொண்டிருந்த குதிரையை, ஒரு நொடியில் நிறுத்தினான்!

இடையில் இருந்த வாளை உருவிக் கழுகைக் குறி வைத்து வீசினான்.

அடுத்த வினாடி -

''க்கூக்!'' என்ற கழுகின் அலறல்!

வாள் திரும்பி வந்தது!

அவன் கண் எதிரே கழுகு தரையில் ''தொப்'' பென்று விழுந்தது!

வெங்கன் பெருமிதம் கொண்டான்!

குதிரையை விட்டு இறங்கி, ராஜநடை நடந்து, கழுகைப் பார்த்தான்!

அது உயிருக்காக துடியாய் துடித்துக் கொண்டு கிடந்தது!

அதைப் பார்த்து அவன் வெற்றிச் சிரிப்பு சிரித்தான்!

''வேந்தனையும் இப்படித் துடிக்க வைப்பேன்!'' என்று வீரசபதம் செய்து கொண்டு அவன், மீண்டும் குதிரையில் ஏறப்போனான்!

அப்போது அவனுக்கு மற்றொரு யோசனை தோன்றியது!

உடல் வலிமையையும் சோதித்துப் பார்த்தால் என்ன என்று அவன் நினைத்தான்!

அவனுக்கு உடல் முறுமுறு என்று வந்தது!

குதிரையில் ஏறி நடுக்காட்டுக்குள் போனான்!

அது புலி, சிங்கம் போன்ற மிருகங்கள் வாழும் பயங்கரக்காடு!

ஒரு குகையில் ஒரு சிங்கம் படுத்துக் கிடந்தது!

வெங்கன் அதை சீண்டி விட்டான்!

ஒரு கல்லை எடுத்து சிங்கம் மீது வீசினான்!

சிங்கம் விழித்துக் கொண்டது. வெங்கனைக் கண்டதும், "கொர்... கொர்...ர்" என்று கொடூரமாக கர்ச்சித்துக் கொண்டு அவன் மீது பாய்ந்தது!

அந்த வேகத்தில் வெங்கன் ஒரு வினாடி தடுமாறினான்!

ஆனால், பிறகு சமாளித்துக் கொண்டான்! முழு பலத்தையும் கொண்டு சிங்கத்தை தாக்கினான்!

வெங்கனின் இடித் தாக்குதலைத் தாக்குப்பிடிக்க முடியாமல், சிங்கம் பின் வாங்கியது! குகையை நோக்கி ஓடியது!

இந்த வெற்றி வெங்கனுக்கு புதுப் பொலிவைக் கொடுத்தது!

அவன் அப்போதே வேந்தனைப் பந்தாட நினைத்தான்!

அவனைத் தேடி குதிரையை வாயு வேகத்தில் செலுத்தினான்.

வெங்கனின் குதிரை ஒரு குகையின் முன் போய் காலை தரையில் ஊன்றியது!

அந்த குகைக்குள்ளே தான் வேந்தன் படுத்து இருந்தான்!

## 23

அது வேந்தன் வழக்கமாகத் தங்கும் குகை!

சோதிடர் அவனைத் தன்னோடு குடிசையிலேயே தங்கும்படி வற்புறுத்தினார்.

ஆனால், வேந்தன் மறுத்துவிட்டான்!

மந்திரி காத்தமுத்துவின் கண்ணில் இருந்து அவன் மறைந்து வாழ ஆசைப்பட்டான்!

அதோடு, ''சீ பூம்பா''வின் அட்டகாசங்கள் காட்டுப் பகுதிகளிலும், வயல் பகுதிகளிலுமே அதிகம் நடந்து கொண்டு இருந்ததால், அதை நேரடியாக சந்திக்க எண்ணினான்.

அதற்காக, அவன் தங்கத் தேர்ந்து எடுத்த இடம்தான் அந்தக் குகை!

அவனது குலதெய்வம் காளிதேவி குடியிருக்கும் குகையும் அதன் அருகில்தான் இருந்தது!

இளவரசி பூங்கொடியை வெங்கனிடம் இருந்து மறைத்து, பத்திரமாக, அரண்மனையில் கொண்டு போய் சேர்த்து விட்டு, அவன் நேராக தனது குகைக்கு வந்தான்!

நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டு போன வெங்கன் மீண்டும் வருவான் என்பது வேந்தனுக்குத் தெரியும்!

அவனும் அதை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந் தான்.

அவனுக்கு நன்றாகப் பசி எடுத்தது.

காட்டுப் பழங்களைப் பறித்து வயிறு புடைக்கத் தின்றான்.

உண்ட களைப்பு கண்ணை மறைத்தது.

வெங்கனோடு பலமாக மோதியதால், அவன் உடல் வேறு வலித்தது!

அந்த அலுப்பில், குகையில் உள்ள ஒரு அகன்ற கல்லின்மீது சாய்ந்தான்.

உடனே கண்கள் மூடிக் கொண்டன!

நீண்ட தூக்கத்துக்குப் பிறகு, அப்போதுதான் கண் விழித்தான்!

குதிரைகளின் காலடிச் சத்தம் நெருங்கிக் கேட்டதும், எழுந்து வெளியே வரக்கூட அவன் முற்பட்டான்.

ஆனால், அந்தக் காலடிச் சத்தம் குகையின் அருகே வந்து நின்றதும் அவன் ''உஷார்'' ஆனான்!

தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டு என்ன நடக்கப் போகிறது என்பதைக் கூர்ந்து கவனித்தான்!



வெங்கன் குதிரையை விட்டு இறங்கினான். கம்பீரமாக அங்கும் இங்கும் பார்த்தான்! உலகமே அவன் காலடியில் கிடப்பதைப் போல நிமிர்ந்தான்! வேகமாகச் சென்று குகையினுள் எட்டிப் பார்த்தான்.

அங்கே, வேந்தன் தூங்கிக்கொண்டு இருப்பதைப் பார்த்ததும், அவன் உடல் சிலிர்த்தது.

உள்ளம் துடித்தது.

அப்படியே கழுத்தை நெரித்துக் கொன்று விடலாமா என்று கைகளைப் பிசைந்தான்!

ஒருவேளை கழுத்தை பிடிக்கப் போகும் நேரம், வேந்தன் விழித்துக் கொள்ளக் கூடும் என்று நினைத்த வெங்கன், இடுப்பில் இருந்த கத்தியை கையில் எடுத்தான்!

கத்தியைத் தயாராக வைத்துக் கொண்டு, அடிமேல் அடி எடுத்து வைத்து உள்ளே நுழைந்தான்!

இத்தனைக்குப் பிறகும், வேந்தன் அசைந்து கொடுக்கவில்லை. காளிதேவியை மனதில் நினைத்துக் கொண்டு அப்படியே படுத்து இருந்தான்!

அவனது தூக்கம் வெங்கனுக்குத் தெம்பைக் கொடுத்தது!

தைரியமாக வேந்தனை நெருங்கினாள்!

கழுத்துக்கு குறி வைத்து, கத்தியை ஓங்கினான்!

அது தூங்கும் புலியை இடறுவது போல இருந்தது!

வேந்தன் காலால் ''படார்'' என்று ஓர் உதை விட்டான்!

வெங்கனின் கையில் இருந்த கத்தி கண் காணாத இடத்தில் போய் ''டொங்'' என்று விழுந்தது!

அடுத்த வினாடி, வேந்தன் எழுந்து கொண்டான்!

அது மதயானை எழுந்து கொண்டதைப் போல இருந்தது!

வேந்தனின் ''திடீர்'' என்ற ''இடி தாக்குதலுக்கு ஆளான வெங்கன் ஒரு நிமிடம் மூச்சுத் திணறிப் போனான்!

பிறகு, மந்திரவாதி கொடுத்த வாளை உருவினான்.

வேந்தனும் தனது வாளை எடுத்தான்!

''சொய்ங்... சொய்ங்...''

இருவரும் மோதினார்கள்!

அது மலையும் மலையும் மோதுவது போல இருந்தது!

ஆனால், வேந்தன் பெருமலையாக நின்றான்!

வெங்கன் வாளால் மோதிக் கொண்டே, தன் பூத உடலால், வேந்தனை இடித்துத் தள்ளினான்!

வேந்தன் விழவில்லை! வளைந்து கொடுக்கக் கூட இல்லை!

இருவரும் போராடிக் கொண்டே குகையை விட்டு வெளியே வந்தார்கள்!

அந்தப் பரந்த வெளி; வாளைச் சுழற்றுவதற்கு வேந்தனுக்கு வசதியாக இருந்தது!

அவன் பம்பரமாகச் சுழன்றான்! வெங்கன் வாளை ஓங்கி அடித்தான்!

அது, வெங்கனின் கையை விட்டு நழுவிப் பறந்தது!

ஆனால், தரையில் விழவில்லை!

## 24

**வெ**ங்கனின் வாள் மீண்டும் அவன் கைக்குத் திரும்பி வந்தது.

நிராயுதபாணியாய் நின்ற வெங்கன், அடுத்த நிமிடம், வாள் வீரன் ஆனான்!

வேந்தனுக்கு ஒரே ஆச்சரியம்!

கண் இமைக்கும் நேரத்தில் நடந்துவிட்ட இந்த நிகழ்ச்சி, அவனுக்கு ஒருவித மயக்கத்தையே உண்டு பண்ணியது!

ஆனால், அவன் கலக்கம் அடையவில்லை!

மயக்கம் அடைந்தும் விடவில்லை!

பழைய வேகத்திலே அவன் வாளைச் சுழற்றினான்!

வாள் திரும்பி வந்ததும், வெங்கன் ''புத்துயிர்'' பெற்றவன் போல் ஆனான்!

''மந்திரவாதியின் மந்திரம் ஏமாற்றிவிட வில்லை'' என்று நினைத்தான்!

''வேந்தா! உன்னை அழிக்காமல் விடமாட்டேன்'' என்று கர்ச்சித்துக் கொண்டு ஆவேசமாகப் பாய்ந்தான்!

''இந்த நாட்டையும் மக்களையும் உன்னிடம் இருந்து காப்பாற்றாமல் விடமாட்டேன்'' என்று எதிர் அடி கொடுத்தான் வேந்தன்!

''பேசாமல் என்னிடம் 'சரண்' அடைந்துவிடு!'' என்று முட்டி மோதினான் வெங்கன்!

''உன்னையும், ''சீபூம்பா''வையும் ஒடுக்காமல் நான் ஓய மாட்டேன்'' என்று உதைத்தான் வேந்தன்!

அவர்கள் வாள்களும் மோதிக் கொண்டுதான் இருந்தன!

''உன்னைக் கொன்று விடுவேன்'' என்று வெங்கன் எச்சரிக்கை விட்டான்!

வேந்தனா இந்த வெற்றுக் கூச்சலுக்குப் பயப்படுவான்!

''உன் ஜம்பம் மட்டும் அல்ல ''சீபூம்பா''வின் பருப்புகூட என்னிடம் வேகாது! பேசாமல் இருவரும் திருந்தி விடுங்கள். மக்களைக் கொடுமைப்படுத்துவதை நிறுத்தி விடுங்கள். நீங்கள் திருந்தாவிட்டால், நான் சும்மா விடமாட்டேன்'' என்று சவால் விட்டுக் கொண்டே, வாளைப் பின்னிவிட்டான், வேந்தன்!

அந்தப் பின்னலில், மீண்டும் வெங்கன் வாள் நழுவியது.

ஆனால், அவன் விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்! அந்தப் பெருமிதத்தோடு, வேந்தனைப் பார்த்தான்!

''உன் மாய வாளின் வேலை எல்லாம் இனிமேல் என்னிடம் பலிக்காது. என் வாள் உன்னைப் பழி வாங்கியே

தீரும்'' என்று கர்ச்சித்துக் கொண்டே அவன் வேந்தன் மீது அதிவேகமாகப் பாய்ந்தான்!

வெங்கனின் முரட்டுத் தாக்குதல்களை எல்லாம் வேந்தன் தன் திறமையால், மிகலாவகமாக சமாளித்தான்.

வேந்தன், வெங்கனோடு மோதுவது, இது இரண்டாவது முறை!

ஒரு நாள் இரவு இதேபோல், இருவரும் மோதிக் கொண்ட போது, வேந்தனின் ஒவ்வொரு அடியையும் தாங்கிக் கொள்ள முடியாமல், வெங்கன் ''ஆ! ஊ...'' என்று முணங்கினான்; அலறினான்!

ஆனால், இன்று அவன் வேந்தனின் அடியை ''இடி தாங்கி'' போல், தாங்கிக் கொண்டு போரிட்டான்.

இது வேந்தனுக்கே, சிறிது ஆச்சரியத்தைக் கொடுத்தது!

இந்த பலத்துக்குக் காரணம், ''சீ பூம்பா''வின் வேலைதான் என்பதையும் வேந்தன் சீக்கிரமே உணர்ந்து கொண்டான்!

ஆனாலும், இந்த ''சீ பூம்பா'' வேலைக்கு எல்லாம், அவன் பயப்படுபவனாக இல்லை.

அவன் மனதுக்குள் காளிதேவியை நினைத்துக் கொண்டு அசுர வேகத்தில் வாளை வீசினான்!

அந்த வீச்சு ஒவ்வொன்றும், வெங்கனை இரும்புத்தடி கொண்டு தாக்குவது போல் இருந்தது!

அதைத் தாக்குப் பிடிக்காமல், அவன் ''அம்மா! அப்பா!'' என்று அவனை அறியாமலேயே முணங்கினான்!

வேந்தன் ஓயவில்லை. ஆவேசம் வந்தவனைப் போல் விடாமல் வாளை வீசினான்!

வெங்கன் திணறினான்.

வேந்தனைக் கட்டி இழுத்துப்போய் அரசரிடமும், தன் தந்தையிடமும் குறிப்பாகப் பூங்கொடியிடமும் ''மகாவீரன்'' என்ற பெயரைத் தட்டிச் சென்றுவிட தீர்மானித்த அவன் இப்பொழுது உயிர் தப்பினால் போதும் என்று நினைத்தான்!

இதற்கு மேலும் வேந்தனை உயிரோடு விட்டால் ஆபத்து என்பதை உணர்ந்ததும், அவனை ஒழித்துவிடவும் முடிவு செய்தான்!

அதற்கு ஆதரவாக, மந்திரவாதியை மனதுக்குள் நினைத்தான்!

மறுவினாடி அவன் புது பலம் வந்தது போல உணர்ந்தான்!

''வேந்தா! உயிர்மேல் ஆசை இருந்தால், உன் வாளை விட்டு எறி!'' என்று ஓலமிட்டான்.

வேந்தன் அஞ்சவில்லை; அடங்கவில்லை. ஆத்திரமே அதிகம் கொண்டான்!

''முடிந்ததை செய்து பார்! நான் ஓயமாட்டேன்'' என்று எதிர்ப்பேச்சு கொடுத்தான்!

வெங்கனுக்கு ஆவேசம் தலைக்கு ஏறியது!

''ஒழிந்து போ'' என்று கத்திக்கொண்டே வாளை வேந்தனின் நெஞ்சில் பாய்ச்சினான்!

## 25

**வே**ந்தன் ''ஆ!'' என்றான்!

அவன் கையில் இருந்த வாள் ஒரு நொடி நேரம் செயலற்றது!

''வேந்தன் செத்தான்'' என்று நினைத்தான் வெங்கன்!

மார்பில் பாய்ச்சிய வாளை உருவிவிட்டு, அவனைக் குப்புற தரையில் உருட்டிவிடும் எண்ணத்தில், வாளை இழுத்தான்!

வாள் அசையவில்லை!

மார்பையே அறுத்துக் கொண்டு வரப்போகிறதோ என்று நினைத்த வெங்கன், சற்று பலமாக வாளைப் பிடித்து இழுத்தான்!

அப்போதும் வாள் அசைந்து கொடுக்கவில்லை!

முதலில், வேதனையால் துடிப்பது போல், ''ஆ!'' என்று அலறிய வேந்தன் தன் வாளைத் தரையில் தாங்கலாக ஊன்றிக் கொண்டு நிமிர்ந்து நின்றான்!

அவன் முகத்தில் வேதனையின் வடு தெரியவில்லை. வீரமே தொனித்தது!



வெங்கன் மலைத்துப் போனான்.

இரத்தம் சிந்தி, வேதனையால் துடிதுடித்து, தரையில் உருண்டு சாகப் போகிறான் என்று நினைத்தவன், கல்லுளி மங்கன் போல் நின்று கொண்டிருந்தால், யாருக்குத்தான் மலைப்பாக இருக்காது!

அவன் உடல் ‘‘குப்’’பென்று வியர்த்தது!

முகம் பீதியால் சிவந்தது!

ஆனாலும் அவன் மலைத்துப்போய் சிலையாக நின்றுவிடவில்லை! இரு கைகளாலும் வாளைப் பிடித்து மீண்டும் பலமாக இழுத்தான்!

அவனுக்குக் கை வலித்ததுதான் மிச்சம்! வாள் அசைய மறுத்துவிட்டது!

எதிரியைக் கொன்றுவிட்டு திரும்பி வரும் சக்தி படைத்த வாள். இப்பொழுது இழுத்தாலும் வர மறுக்கிறதே என்று எண்ணி அவன் வெந்தான்!

வேந்தன், வெங்கனை வேடிக்கை பார்க்க வேண்டியோ என்னவோ, அசையாமல் அப்படியே நின்றான்!

இது, வெங்கனுக்குக் கொஞ்சம் ஆறுதலைக் கொடுத்தது!

தன் வாள் தான் வேந்தனை இப்படி செயலற்றவனாக்கி உள்ளது என்று அவன் நினைத்தான்!

இப்பொழுது வேந்தனால் தன்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்றும் அவன் நம்பினான்.

அதனால், அவனது வெடவெடத்த உடம்பு கொஞ்சம் அடங்கியது!

புதுத் தெம்பு பிறந்தது!

அவன் தன் முழுப் பலத்தையும் சேர்த்து, வாளை இழுக்க முயற்சித்தான்!

வலது காலைத் தூக்கி, வேந்தனின் அடி வயிற்றில் மிதித்துக் கொண்டு, இரண்டு கைகளாலும் வாளைப் பற்றிக்கொண்டு, ''ஓ! சீ பூம்பா'' என்று அலறிக் கொண்டு உருவினான்!

அடுத்த வினாடி -

கயிறு அறுந்த பட்டம்போல் அவன் வாளோடு தூரப்போய் விழுந்தான்!

விழுந்த வேகத்தில் எழுந்து வாளைப் பார்த்தான்!

அதில் இரத்தக் கறை இல்லை. ''பளிச்'' என்று இருந்தது!

ஆச்சரியத்தோடு வேந்தனைப் பார்த்தான்!

அவன் அலட்சியமாகச் சிரித்துக் கொண்டுநின்றான்!

வெங்கனுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது!

''சிரிக்கவா, செய்கிறாய். உன்னை என்ன செய்கிறேன் பார்!'' என்று கருவிக்கொண்டே, ''சீ பூம்பா'' என்று அழைத்தபடி மீண்டும் வேந்தன் மீது பாய்ந்தான்!

வேந்தன் மதம் பிடித்த யானை ஆனான்.

பொறுமையை உதறித் தள்ளிவிட்டு பொங்கி எழுந்தான்.

இடறிவிட்ட புலிபோல், வெங்கன் மீது பாய்ந்தான்!

அடுத்த நிமிடம் வெங்கன் தரையில் போய் குப்புற விழுந்தான்!

அவன் கையில் இருந்த மந்திர வாள், அவனுக்கு அப்பால் போய் ''டொங்'' என்று தரையைத் தழுவியது!

அப்போது, வேந்தன் நினைத்திருந்தால், வெங்கனை ஒரே குத்தில் கொன்று சாய்த்திருக்க முடியும்!

ஆனால் ஓர் உயிரை அழிக்க அவன் விரும்பவில்லை!

வெங்கனின் அட்டகாசம் அடங்க வேண்டும் என்று மட்டுமே அவன் நினைத்தான்!

''வெங்கா! இனிமேலாவது ஒழுங்காக இரு. இந்த நாட்டு மக்களுக்கு பாதுகாப்பாக இரு அவர்களுக்குப் பாதகம் விளைவிக்காதே!'' என்று சொல்லிக் கொண்டே, வேந்தன், வெங்கனை நோக்கி வந்தான்.

வேந்தன் பேச்சை வெங்கன் நம்பவில்லை.

தன்னைக் கொல்லத்தான் வேந்தன் நெருங்கி வருகிறான் என்று பயந்தான்!

இடையில் இருந்த கத்தியை உருவி வேந்தன் மீது குறி வைத்து வீசினான்.

அது, வேந்தனது மேனியைத் தொட்டுப் பார்த்து விட்டு, தரையில் போய் குத்திக் கொண்டுநின்றது!

அதைப் பார்த்ததும், வெங்கனுக்கு திகில் அதிகமானது!

திடுதிப்பென்று எழுந்து தலை தெறிக்க ஓடினான்!

வேந்தன், வெங்கனை விரட்டி அடிக்கவில்லை! அலட்சியமாகப் பார்த்து சிரித்துவிட்டு, ஒரு குன்றின் மீது அமர்ந்தான்!

வெங்கனை இப்படி ஆட்டிப் படைக்கும் "சீபூம்பா"வை நேருக்கு நேர் சந்திக்க வேண்டும் என்ற ஆசை அவன் மனதில் எழுந்தது!

அதே நேரத்தில், அவனை நோக்கி தூரத்தில் சோதிடர் தள்ளாடியபடி வந்து கொண்டு இருந்தார்.

வேந்தன் ஓடிச்சென்று அவரை வரவேற்றான்!

அவர் சொன்ன செய்தி அவனுக்குப் புதுக் கவலையைக் கொடுத்தது!

## 26

**சோ**திடர் தேடி வருவதைப் பார்த்ததுமே, வேந்தன் புரிந்துகொண்டான்! ஏதோ விபரீதம் நடந்து இருக்கிறது என்று!

அவரை முறைப்படி வணங்கிவிட்டு, "அய்யா! இந்தத் தள்ளாத வயதில் தாங்கள் இவ்வளவு தூரம் வரக் காரணம் என்ன? சொல்லி அனுப்பியிருந்தால், நானே வந்திருப்பேன்!" என்றான்.

"ஒரு முக்கியமான விஷயம். நானே உன்னிடம் சொல்லவேண்டும் என்று வந்தேன்" என்று இழுத்த

சோதிடர், ''அரசர் கவலைக்கிடமாக படுக்கையில் இருக்கிறார்'' என்றார் கம்மிய குரலில்!

''என்ன?''

வியப்போடு வினவிய வேந்தன், வியப்பை அடக்கிக் கொண்டு, ''உண்மையாகவா?'' என்றான்.

''ஆமாம். ஒரு வாரமாகப் படுத்த படுக்கையாய் கிடக்கி றாராம்..!

அவர், ''கிடக்கிறாராம்...!'' என்று இழுத்ததும், 'சோதிடர் கூட இன்னும் அரசரைப் போய் பார்க்கவில்லையோ' என்று வேந்தன் நினைத்தான். அதைக் கேட்டும் விட்டான்!

''நீங்கள் போய் அரசரைப் பார்க்கவில்லையா?''

''அந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை.''

''அய்யா! என்னசொல்லுகிறீர்கள்? வேந்தன் ஆச்சரியத் தோடு கேட்டான்!

''ஆமாம். நான் அரசரைப் பார்க்கக்கூடாது என்று மந்திரி காத்தமுத்து சொல்லிவிட்டார். என் மருந்தும் அரசருக்குத் தேவையில்லையாம்'' சோதிடரின் ஒளி மங்கிய கண்கள் கசிந்தன.

''நீங்கள் ஏன் வைத்தியம் பார்க்கக்கூடாதாம்?''

''நான் விஷத்தைக் கொடுத்துக் கொன்று விடுவேன் என்று அரசரே என்னை வேண்டாம் என்று சொல்லி விட்டாராம். காத்தமுத்து சொல்கிறார்'' சோதிடர் அழுதே விட்டார்.

''எல்லாம் தெரிந்த நீங்களே இப்படிக் கண் கலங்கலாமா?'' என்று வேந்தன் சோதிடரைத் தேற்றினான்.

''அரசர் கவலைக்கிடமாக இருக்கிறார் என்ற செய்தி உங்களுக்கு எப்படித் தெரியும்?''

சோதிடர் இடுப்பில் மறைத்து வைத்து இருந்த ஓர் ஓலையை எடுத்து நீட்டினார்.

''இதை, இளவரசி பூங்கொடி எனக்கு அனுப்பி யிருக்கிறார்'' என்று சொன்னார்.

வேந்தன் பரபரப்போடு ஓலையைப் பிரித்தான்!

''அய்யா! தந்தை கவனிப்பாரற்று, படுக்கையில் இருக்கிறார். நீங்கள்தான் பிழைக்க வைக்க வேண்டும்' என்று எழுதி, கீழே பூங்கொடி கையெழுத்துப்போட்டு இருந்தாள்!

''அய்யா! இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?'' வேந்தன் உறுதியோடு கேட்டான்.

''நான் பலமுறை அரண்மனைக்குள் போய் அரசரைப் பார்க்க முயன்றும், காத்தமுத்துதடுத்து விட்டார். நான் கிழவன். அதனால், அவரது எதிர்ப்பை முறியடித்து விட்டு, உள்ளே போய் அரசருக்கு வைத்தியம் செய்ய முடியவில்லை. ஆனால் உன்னால் முடியும்...!''

''அய்யா!'' வேந்தன் வியப்போடு கூவினான்.

''ஆமாம், வேந்தன். உன்னால் முடியும். அது எனக்குத் தெரியும்'' என்றார் சோதிடர் அழுத்தமாக!

''அரசரைப் பார்த்து நான் என்ன செய்ய முடியும்?'' வேந்தன் புரியாமல் கேட்டான்!

''நீ எதுவும் செய்ய வேண்டாம். நான் தரும் மருந்தை கொண்டு போய் அரசரைக் குடிக்க செய்து விடு. அது போதும்'' என்றார் சோதிடர் உற்சாகமாக.

''வேண்டாம். நாம் இருவருமே அரண்மனைக்குப் போகலாம்'' என்றான் வேந்தன்.

''அது எப்படி முடியும்?'' சந்தேகத்தோடு கேட்டார் சோதிடர். ''உன்னைக் கண்டாலே, காத்தமுத்து படைகள் சூழ்ந்து கொள்ளுமே.''

''என்னை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது'' அரும்பு மீசையை முறுக்கினான், வேந்தன்.

''நீ வீரன். போராடிப் போய் விடுவாய். நான் கிழம், என்ன செய்ய முடியும்!'' என்று அச்சப்பட்டார் சோதிடர்.

''என்னை ஒரு வீரன் என்று நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள் அல்லவா?'' வேந்தன் தான் கேட்டான்.

''நீ வெறும் வீரன் அல்ல. மாவீரன்'' சோதிடர் பெருமிதம் கொண்டார்!

''அது உண்மை என்றால், நீங்கள் என்னோடு வாருங்கள்!''

சோதிடரால் தப்ப முடியவில்லை. வசமாக மாட்டிக் கொண்டு விழித்தார்.

''சரி. நானும் வருகிறேன்'' என்று அவர் வேந்தன் வழிக்கு வந்தார்.

சோதிடர் ஏற்கனவே, அரசருக்குத் தேவையான மருந்தை கையோடு கொண்டு வந்து இருந்தார்!

வேந்தன், விடாப் பிடியாக சோதிடரையும் குதிரையில் ஏற்றினான்.

குதிரை படுவேகத்தில் பறந்து சென்று, சிறிது நேரத்தில், அரண்மனை வாயிலை அடைந்தது!

வேந்தன் உற்சாகமாக குதித்தான்!

சோதிடர் மெதுவாக இறங்கினார்!

இருவரும் அரண்மனைக்குள் நுழைந்தார்கள்.

காவலர்கள் அவர்களைத் தடுக்கவில்லை.

வெளிவாசலைக் கடந்து உள் வாயிலை அடைந்தபோது, இரண்டு இரும்புக் கரங்கள், வாயிலை அடைத்துக் கொண்டு அவர்களை உள்ளே செல்ல விடாமல் தடுத்தது!

அவை மந்திரி காத்தமுத்துவின் கரங்கள்!

## 27

**வே**ந்தன், காத்தமுத்துவின் கரங்கள் தடுப்பு சுவர் எழுப்பியதைக் கண்டு கலங்கவில்லை!

அதை அவன் எதிர்பார்த்தே வந்திருந்தான்!

சோதிடரும் ஆச்சரியப்படவில்லை. இப்படி நடக்கும் என்பது அவருக்குத் தெரியும்.

காத்தமுத்துவின் இரும்பு கரம் அவர்களைத் தடுத்து நிறுத்தியதும், ''அடுத்து என்ன செய்வது?'' என்பது போல், சோதிடர் வேந்தனைத் திரும்பிப் பார்த்தார்!

வேந்தன் அலட்சியமாக, காத்தமுத்துவை நோக்கினான்!

''அய்யா! நீங்கள் கவலைப்படாதீர்கள். நாம் அரசரைப் பார்க்கலாம்.''

ஆற்றாமையோடு திரும்பிய சோதிடருக்கு வேந்தன் பதில் சொன்னான்!

அதைக் கேட்டதும், காத்தமுத்துக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது!

''என்னை மீறி அரண்மனைக்குள் புகுந்து விடுவாயா?'' என்று மீசையை முறுக்கினார்!

''நான் சண்டை போட வரவில்லை. அரசரைச் சந்திக்க வந்திருக்கிறேன்'' என்றான் வேந்தன் அலட்சியமாக.

''நீங்கள் அரசரைப் பார்க்க வேண்டிய தேவை இல்லை. அவரை கவனித்துக் கொள்ள எங்களுக்குத் தெரியும்'' என்று கர்ச்சித்தார், காத்தமுத்து.

அவர்கள் இருவரும் மோதிக் கொண்டதும் சோதிடர் தர்ம சங்கடமான நிலைக்குள்ளானார்.

''மந்திரியாரே! வீண் குழப்பம் வேண்டாம். ஒரு நிமிட நேரம் அரசரைப் பார்த்துவிட்டுப் போய் விடுகிறோம். தயவு செய்து அனுமதியுங்கள்'' என்று கெஞ்சலாகக் கேட்டார்.

''அரசர் உங்களைப் பார்க்க விரும்பவில்லை. பேசாமல் போய் விடுங்கள்.''

காத்தமுத்துவின் கல்மனம் சோதிடருக்காக இரங்க வில்லை!

வேந்தனுக்கு ஆத்திரம் அதிகமானது!

''நாங்கள் அரசரைக் காணாமல், இங்கிருந்து போக மாட்டோம்'' என்றான் அழுத்தமாக.

''மிரட்டுகிறாயா?'' என்று வாளை உருவினார் காத்த முத்து!

வேந்தனும் சூடாக வாளை பிடித்தான்!

அங்கு ஒரு பயங்கரப் போர் ஏற்படும் நிலைமை உருவானது!

ஆனால் சோதிடர் அவசரமாக வேந்தனை அடக்கினார்.



''வேந்தா! இப்போது சண்டை வேண்டாம். நாம் திரும்பிப் போய் விடுவோம். கடவுள் சித்தம் போல எல்லாம் நடக்கட்டும்'' என்று மனம் கசிந்து பேசினார், சோதிடர்!

வேந்தன் சோதிடருக்காகக் கோபத்தை அடக்கினான்.

இருவரும் திரும்பி நடந்தனர்!

எதையோ, சாதித்து விட்டவர் போல, காத்த முத்து வெற்றிச் சிரிப்பு சிரித்தார்!

சோதிடர் முன்னே சென்றார்.

வேந்தன் பின்னே நடந்தான். அவன் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது.

சிறிது தூரம் சென்றதும், வேந்தன், ''அய்யா!'' என்றான்!

''என்ன வேந்தா!'' என்று திரும்பினார் சோதிடர்.

''அய்யா! உங்களிடம் இருக்கும் மருந்தை என்னிடம் கொடுங்கள். நான் அரசரிடம் கொண்டு போய் சேர்த்து விடுகிறேன்.''

''உன்னால் எப்படி முடியும்?'' என்று சந்தேகத்தோடு கேட்டார், சோதிடர்!

''என்னை நம்பிக் கொடுங்கள். உங்கள் நம்பிக்கை வீண் போகாது'' என்று வேந்தன் சோதிடரைப் பார்த்தான்!

''சரி, உன் விருப்பப்படியே செய்'' என்று கூறி பத்திரமாக வைத்திருந்த மருந்துக் கலவையை எடுத்து வேந்தனிடம் கொடுத்தார்.

அவர் விடை பெற்று சென்றதும், வேந்தன் தன் குதிரையில் ஏறினான்.

குதிரை, அவனது குலதெய்வம் காளிதேவியின் குகையை நோக்கி ஓடியது!

வேந்தன் காளிதேவியின் சிலைமுன் தலைகுனிந்து நின்றான்!

''தாயே, இந்த மருந்தை எங்கள் அரசரைக் குடிக்க செய்ய வேண்டும். அவர் உயிரைக் காத்தல் வேண்டும்'' என்று உருக்கமாக வேண்டினான்!

பிறகு மீண்டும் குதிரையில் ஏறி அரண்மனையை நோக்கிப் பறந்தான்!

அரண்மனையில், இளவரசி பூங்கொடி கவலையோடு உட்கார்ந்து இருந்தாள்!

திடீரென்று அவள் முன்னால், ஒரு பூ வந்து விழுந்தது!

அவள் ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்த்தாள்.

அங்கே வேந்தன் கம்பீரமாக நின்று கொண்டு இருந்தான்!

''வேந்தன்!'' என்று அவள் வியப்போடு வாயைத் திறந்தாள்!

அவன் அவளது வாயை மூடினான்.

''சத்தம் போடாதே! இந்த மருந்துப் பொடியை நீரில் கலக்கி அரசருக்குக் கொடு. அவருக்கு குணம் கிடைக்கும்.

உன்னைப் பிறகு வந்து சந்திக்கிறேன்'' என்ற வேந்தன் அவசரமாக அங்கிருந்து வெளியேறினான்!

பூங்கொடி வேகமாகத் தன் தந்தையின் அறைக்குப் போனாள்.

மருந்தைக் கலக்கி அவருக்குக் குடிக்கக் கொடுத்தாள்!

அதை இரண்டு ஜோடிக் கண்கள் வியப்போடு பார்த்துக் கொண்டு இருந்தன!

''மருந்து இங்கே எப்படி வந்தது?''

## 28

அந்த நான்கு கண்களும் ஆச்சரியத்தால் வியந்தன.

''அரண்மனைக்குள் மருந்து எப்படிச் சென்றது?'' அவை ஒன்றை ஒன்று மீண்டும் கேட்டுக் கொண்டன.

புரியாத புதிரைப் புரிந்து கொள்ளத் துடித்துக் கொண்டிருந்த அந்தக் கண்களுக்குச் சொந்தக்காரர்கள் மந்திரி காத்தமுத்துவும், அவருடைய அருமந்தப் புத்திரன் வெங்கனும்தான்!

''சீபூம்பா''வின் சக்தி, வேந்தனிடம் செல்லுபடியாகாமல் போனதும், வெங்கன் மந்திரவாதியிடம் போகவில்லை. நேராக அரண்மனைக்கு வந்தான்!

அப்போது அவனுக்கு மந்திரவாதியின்மீது நம்பிக்கை இருக்கவில்லை. மாறாக, தன் தந்தையின் சூழ்ச்சியை நம்பினான்!

மகனைக் கண்டதும், காத்தமுத்து உற்சாகம் அடைந்தார்.

வேந்தனும், சோதிடரும் வந்ததால் ஏற்பட்ட கலக்கம் மகனைப் பார்த்த பிறகுதான் தணிந்தது, அவருக்கு!

''வெங்கா! என் கனவு நிறைவேறப் போகிறது! சீக்கிரம் நீ இளவரசி பூங்கொடியின் கழுத்தில் மாலை சூடப் போகிறாய்!'' என்றார் மகிழ்ச்சியாக!

வேந்தனிடம் 'பொதி' கணக்கில் வாங்கி கட்டிக் கொண்டு வந்த வெங்கன், காத்தமுத்துவின் உற்சாகத்துக்கு காரணம் புரியாமல் மிரள மிரள விழித்தான்.

''தந்தையே, என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று வியப்போடு வினவினான்.

''நீ இந்த நாட்டுக்கு அரசன் ஆகப் போகிறாய்'' காத்தமுத்து ஒருபடி மேலே போய் சொன்னார்.

''உண்மையாகவா?''

வெங்கன் நம்பிக்கை இல்லாமல் வாயைப் பிளந்தான்!

''உன் தந்தை சொன்னால், செய்து காட்டாமல் விடமாட்டான்'' என்று மீசையை முறுக்கிய காத்தமுத்து, தனது அடுத்த திட்டத்தை விளக்கினார்.

''வெங்கா! அரசர் இப்பொழுது உடல் நலக்குறைவால் படுக்கையில் இருக்கிறார். அவருக்கு யாரும் வைத்தியம் பார்க்க விடாமல் தடுத்து விட்டேன். இன்னும் ஓரிரு தினங்களில் அவருக்குக் கடைசி காலம் நெருங்கி விடும். மேலோகம் போவதற்குள் தன் செல்வ மகளைத் திருமணக் கோலத்தில் பார்க்க ஆசைப்படுவார். அப்போது உன்னைக் கொண்டு போய் நிறுத்துகிறேன், தந்தை சொல்லை இளவரசி பூங்கொடி தட்டமாட்டாள். பிறகு பொன்னிமலைத் தீவுக்கு நீ அரசன்; பூங்கொடி அரசி!''

தந்தையின் திட்டத்தைக் கேட்டு அகமகிழ்ந்து போனான், வெங்கன்.

''தந்தையே!'' என்று உற்சாகமாக எதையோ சொல்ல வாயெடுத்த வெங்கனுக்கு, வேந்தன் நினைவு வந்தது! மேற்கொண்டு பேச்சு வராமல் தவித்தான்!

மலர்ந்த அவன் முகம் சுருங்கியது! உற்சாகம் மறைந்தது!

''என்ன, வெங்கா!'' என்று வினவிய காத்தமுத்து, ''என்ன சொல்லப் போகிறாய் சொல்லு... சும்மா சொல்லு'' என்றார்!

வெங்கன் மிகவும் கஷ்டப்பட்டு ''வேந்தனுக்கு விஷயம் தெரியுமா?'' என்று கேட்டான்!

வேந்தனை நினைத்துக் கொண்டதும், காத்த முத்துவுக்கும் ''பகீர்'' என்றது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''சோதிடரும், வேந்தனும் அரசரைப் பார்க்க வந்தார்கள். விரட்டி அடித்து விட்டேன். திருமணம் முடியும் வரை அவனை இந்தப் பக்கமே வரவிடக் கூடாது'' என்றார் அழுத்தமாக!

''அவனை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான் வெங்கன் புது வீரம் வந்தவனாய்!

''என்ன செய்யப் போகிறாய்'' என்று கேட்டார் தந்தை!

''எனக்குத் தெரிந்த ஒரு மந்திரவாதி இருக்கிறார். அவரிடம் சொன்னால் வேந்தனை நம்மை நெருங்க விடமாட்டார். மந்திரத்தால் அவனைக் கட்டிப் போட்டு விடுவார்'' என்றான் மகன் உற்சாகமாக.

அது காத்தமுத்துவுக்கு நல்ல யோசனையாகவே பட்டது!

''முதலில் வேந்தனை அரண்மனைப் பக்கம் வராமல் தடுக்கச் சொல். பிறகு தீர்த்துக் கட்டச் சொல்லி விடு!''

''சரி, தந்தையே'' என்ற வெங்கன், ''இப்பொழுது நான் அரசரைப் பார்க்கலாமா?'' என்று கேட்டான்.

''வா போகலாம்'' என்று கூறிவிட்டு, காத்தமுத்து முன்னே நடந்தார்!

மகன் பின்னால் சென்றான்!

சற்று நேரத்தில் இளவரசி பூங்கொடி வேந்தன் கொடுத்த மருந்தோடு, தந்தையிடம் வந்து கொண்டு இருந்தாள்!

பூங்கொடியைக் கண்டதும், அவள் என்ன பேசுகிறாள் என்பதைக் கேட்க, இருவரும் ஒதுங்கி வந்து கொண்டு இருந்தாள்!

ஆனால், அவள் மருந்தைக் கலக்கி அரசருக்குக் குடிக்கக் கொடுத்ததைப் பார்த்ததும், அவர்களைத் தூக்கி வாரிப் போட்டது. இரத்தம் கொதித்தது!

''இளவரசிக்கு மருந்து எப்படி வந்தது?'' என்று தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டார்கள்!

அரசர் பிழைத்தால், அரசர் பதவி கிடைக்காமல் போய் விடுமே, என்று நினைத்துக் கொண்டதும், வெங்கனுக்கு ஆவேசம் பிறந்தது!

''இளவரசி!'' என்று அலறிக் கொண்டு ஓடிய வெங்கன், அதே வேகத்தில் அரசர் கையில் இருந்த மருந்துக் கிண்ணத்தைப் பிடுங்கி எறிந்தான்!

## 29

அதே நிமிடத்தில் வெங்கன் மீது ஓர் இரும்புக் கரம் விழுந்தது!

அது அவனை ஒரு குத்துவிட்டு, தூக்கி வீசியது!

வெங்கன் ''ஆ!'' என்று தரையில் விழவும், மந்திரி காத்தமுத்து திடுக்கிட்டு திரும்பினார்.

அங்கே வேந்தன் மலை போல நின்று கொண்டு இருந்தான்!

கண நேரத்தில் நடந்து விட்ட இந்த நிகழ்ச்சியைக் கண்டு, இளவரசி பூங்கொடி பேச்சு வராமல் திகைத்தாள்!

அங்கு நடந்தவை அவளுக்குத் திகைப்பையும் மலைப்பையும் கொடுத்தன!

கனவு எதுவும் காணுகிறோமோ, என்று கண்களைக் கசக்கிப் பார்த்தாள்!

அது கனவு அல்ல நனவுதான் என்பதை, வேந்தன் நின்ற நிலை எடுத்துக் கூறியது!

வேந்தன் மதம் பிடித்த யானை போல் வெங்கன் மீது மோதிக் கொண்டிருந்தான்!

''அரசரைக் கொன்று விட்டு அரச பதவியைப் பிடித்து விடலாம் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறீர்களா?'' என்று சாடினான்.

அரசர் பொன்னரசன் எழவும் முடியாமல் பேசவும் இயலாமல் தவித்தார்! அந்த அளவுக்கு அவர் நோயால் சக்தி இழந்து இருந்தார்.

''வேந்தா!'' என்று கர்ச்சித்துக் கொண்டு பாய்ந்து வந்த காத்தமுத்து, வேந்தன் முகத்தை நோக்கியதும், ''மருந்து என்று, இளவரசியிடம் விஷத்தைக் கொடுத்து அரசரைக் கொல்லப் பார்க்கிறாயா?'' என்று இரைந்தார்!

''தந்தையே! இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது!'' என்று எழுந்து ஓடி வந்தான் வெங்கன்!



''சூழ்ச்சி செய்வது நீங்கள்தான். என் தந்தையை சாகடித்து விட்டு, அரச பதவியைப் பிடித்து விடலாம் என்று நீங்கள் நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். அதனால்தான், அவர் குடிக்கப் போன மருந்தைத் தட்டி விட்டீர்கள்...''

அதுவரை பேசாமல் நின்ற பூங்கொடி வாய் திறந்தாள்!

அவளது முகம் சினத்தால் நெருப்பாய் சிவந்து இருந்தது!

பெண் புலியாய் நின்ற பூங்கொடியைப் பார்த்ததும், காத்தமுத்து திணறினார்.

''இளவரசி! நீங்கள் அறியாமல் பேசுகிறீர்கள். சூழ்ச்சி செய்வது வேந்தனும் சோதிடரும்தான். நாங்கள் அல்ல. அதனால்தான் அவர்கள் இருவரையும் அரண்மனைக்குள் அனுமதிக்காமல் இருந்தேன். ஆனால், எப்படியோ, உங்களிடம் விஷத்தைத் தந்து, அரசரைக் கொல்ல அவர்கள் வேலை செய்து இருக்கிறார்கள். வெங்கன் மட்டும் மருந்துக் கிண்ணத்தை தட்டி விடாமல் இருந்திருந்தால். இந்நேரம் அரசர் நம்மையெல்லாம் தவிக்க விட்டுப் போயிருப்பார்.''

கண்ணீர் வடிக்காத குறையாகப் பேசினார் காத்தமுத்து!

பூங்கொடி எதையும் நம்பாதவளாய், முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு நின்றாள்!

''இவனால்தான் எல்லாம் வந்தது'' என்று ஆத்திரத்தோடு திரும்பிய காத்தமுத்து, ''வேந்தா! உடனே இங்கிருந்து போய் விடு!'' என்று அலறினார்!

வேந்தன் அலட்சியமாக அவரைப் பார்த்தான்.

''தந்தையே! அவன் சொன்னால் கேட்க மாட்டான் அடித்தால்தான் போவான்'' என்ற வெங்கன், வேந்தனை குத்து விட கையை மடக்கி ஓங்கினான்!

அவனது கையை, அநாயாசமாக பிடித்து மடக்கிக் கொண்டு, வேந்தன் திருப்பி ஒரு குத்து விட்டான்!

அந்த இடி தாக்குதலைத் தாங்க முடியாமல், வெங்கன் வாய் அவனை அறியாமலேயே, ''சீ பூம்பா'' என்று அழைத்தது!

மகன் தரையில் விழுந்ததும் தந்தையான மந்திரி காத்தமுத்துக்கு ஆக்ரோஷம் வந்தது!

''வேந்தா!'' என்று கூவிக் கொண்டு, வாளை ஓங்கினார்!

அந்த நேரம் வேந்தனின் கத்தி, வெங்கனது கழுத்தைப் பதம் பார்த்துக் கொண்டு இருந்தது!

''அரசர் குடிக்கப் போன மருந்தைத் தட்டி விடும்படி யார் சொன்னார்கள்'' என்று அவனை மடக்கிக் கொண்டு இருந்தான்!

அதைப் பார்த்த காத்தமுத்து, ஓங்கிய வாளை வீசவில்லை!

வேந்தன் தன் மகனின் உயிரைப் போக்கி விடுவானோ என்று பயந்தார்!

எனவே, பதுங்கிக் காரியத்தை சாதிக்க நினைத்தார், காத்தமுத்து!

''வேந்தா! அரசர் ஏற்கனவே கலக்கமுற்று இருக்கிறார். அவருக்கு முன்னாலேயே ஒரு கொலையைச் செய்து, அவரது உயிரைப் போக்கி விடாதே!'' என்று கெஞ்சினார்.

''அரசருக்கு ஆபத்து என்றால், என்னால் சும்மா இருக்க முடியாது. மக்களும் தூங்கிக் கொண்டிருக்க மாட்டார்கள்!'' என்று பார்வையால் அவர்களை சுட்டெரித்த வேந்தன் வெங்கன் கழுத்திலிருந்த கத்தியை எடுத்தான்!

காத்தமுத்துவுக்கு அப்போதுதான் போய்க் கொண்டு இருந்த உயிர் திரும்பியது!

## 30

**வெ**ங்கன் தப்பித்தோம் பிழைத்தோம் என்று அந்த இடத்திலிருந்து நழுவினான்!

வேந்தன், அவனை கவனித்தான். ஆனால், ஓடுகிற நாயைத் துரத்திக் கடிக்கும் பழக்கம் அவனுக்கு இல்லை.

அவன் கத்தியை இடுப்பில் சொருகிக் கொண்டே, அலட்சியமாக காத்தமுத்துவைப் பார்த்தான்!

''இளவரசி! நீங்கள் அறைக்குப் போங்கள். அரசருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது' என்று காத்தமுத்து, பூங்கொடியை அங்கிருந்து போகச் செய்தார்!

அவள் தயக்கத்தோடு வேந்தனை நோக்கினாள்!

''நீங்கள் தைரியமாக இருங்கள். உங்கள் தந்தையை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது. விடவும் மாட்டேன்'' என்று அழுத்தமாக அவளுக்கு உறுதி அளித்தான் அவன்.

வேந்தனின் உறுதிமொழியில் திருப்தி அடைந்த பூங்கொடி, அந்தப்புரத்துக்கு விரைந்தாள்!

காத்தமுத்து கோபத்தை அடக்கிக் கொண்டு, சாந்தமாக அவனை நோக்கினார்.

''வேந்தா உன்னிடம் சில விஷயங்கள் பேச வேண்டும். கொஞ்சம் தனியாக வருகிறாயா?'' என்று அழைத்தார்!

''இங்கே, நாம் தனியாகத்தானே இருக்கிறோம்.''

''அந்தரங்க விஷயங்களை, இரகசிய அறையில் வைத்துதான் பேச வேண்டும்!'' என்று சொல்லிக் கொண்டே காத்தமுத்து நடந்தார்!

''அப்படி என்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை'' என்று வேந்தன் அவரைப் பின் தொடர்ந்தான்!

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டே, அரண் மனையின் உள் வாயிலைக் கடந்து வெளியே வந்தார்கள்!

''மந்திரியார்ரே! இரகசிய அறை என்கிறீர்களே!'' என்று நினைவுபடுத்தினான், வேந்தன்.

''அது அரண்மனைக்கு வெளியே, தனியாக அமைந்து உள்ளது.''

அவர்கள் வெளி வாயிலை அடைந்தார்கள்!

பெருங்கதவு திறந்தது!

பெரும் அதிர்ச்சி அவனைத் தாக்கியது!

வெங்கன் பெரும் படையோடு வேந்தனை எதிர் நோக்கி நின்று கொண்டு இருந்தான்!

பத்து, பன்னிரண்டு வீரர்கள் வேந்தன் மீது ஈட்டி பாய்ச்சுவதற்கு தயாராக அவனைச் சுற்றி வந்து நின்றார்கள்.

''மந்திரியாரே! என்ன, இதெல்லாம்...?'' சினத்தோடு வினவினான், வேந்தன்.

காத்தமுத்து அவனை சட்டை செய்யாமல் அகங்காரத்தோடு, அரண்மனைப் பக்கம் திரும்பினார்.

அரண்மனைக்குள்ளிருந்தும் ஒரு படை அவனை நோக்கி வந்து கொண்டிருந்தது!

காத்தமுத்துவின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்ட வேந்தன், எதையும் வென்று காட்டுபவன் போல நிமிர்ந்து அவரை நோக்கினான்.

''மந்திரியாரே, உம் படையைக் கொண்டு என்னை சிறைப்படுத்தி விடலாம் என்று கனவு காணுகிறீரா! அது, ஒரு நாளும் நடக்காது!'' என்றான் திடமாக!

''ஏன், நடக்காது. அதையும் பார்த்து விடுவோம்'' என்று முன்னேறி வந்தான், வெங்கன்!

காத்தமுத்து கை அமர்த்தி மகனைத் தடுத்தார்.

''வேந்தா! இந்த முறை நீ தப்பிப் போக முடியாது. நீ நம்பிக் கொண்டிருக்கும் மாய சக்தியும் உன்னைக் காப்பாற்றாது! உயிரின் மீது ஆசையிருந்தால், உன்னிட முள்ள ஆயுதங்களை எடுத்துத் தரையில் போட்டு விட்டு, ''சரண்'' அடைந்து விடு. மறுத்தால்..''

''மறுத்தால் என்ன செய்வீர்கள்?'' பொங்கும் எரிமலையாகக் கேட்டான் வேந்தன்!

''இந்த வாளுக்கு உன்னை இரையாக்குவேன்!'' என்று வாளைத் தூக்கிக் காட்டிக் கொண்டு கத்தினான், வெங்கன்!

''உங்கள் முடிவு அதுதான் என்றால், நானும் அதற்குத் தயார்'' என்று தனது வாளைப் பற்றினான் வேந்தன்!

''உனக்கு இன்னும் திமிர் அடங்கவில்லை'' காத்தமுத்து கொக்கரித்தார்!

கொக்கென்று நினைத்தாயோ, கொங்கனவா என்று அவரைத் தன் பார்வையாலேயே சுட்டெரித்தான் வேந்தன்.

''தந்தையே! அவனை எங்களிடம் ஒப்படைத்து விட்டுப் போங்கள். அந்த நாயை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!'' வெங்கன் வீராப்பு பேசினான்!

''அரச பதவியைப் பிடிக்க அரண்மனையையும் மந்திரவாதியையும் சுற்றித் திரியும் நாய் யார் என்று எங்களுக்குத் தெரியும்'' வேந்தன் குத்தலாகப் பதில் அளித்தான்!

அது, வெங்கனை 'சுருக்' என்று தைத்தது!

''என்னையா, நாய் என்று சொன்னாய்'' என்று அவன் வேந்தனை நோக்கி ஓடி வந்தான்!

மகனை நாய் என்றதும், பெற்றவருக்கும் ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது!

## 31

அரச பதவியை எட்டிப் பிடிக்கப் போகும் - அதுகிடைத்து விட்டதாகவே எண்ணி இன்பத்தில் திளைத்திருக்கும் - வெங்கனை 'நாய்' என்றதும், அவனது இரத்தம் கொதித்ததை விட, அவனைப் பெற்றவரான காத்தமுத்துவின் இரத்தம் பல மடங்கு அதிகமாகக் கொதித்தது!

குப்பை, கோபுரத்தைப் பார்த்து கேலிசெய்கிறதே, என்று புழுங்கினார்.

கோபத்தின் எல்லைக்கே சென்று விட்ட அவர் ''அனாதைப் பயலே, என்ன சொன்னாய்?'' என்று வேந்தனை ஓங்கி மிதித்துத் தள்ளினார்.

குப்புற விழப் போன வேந்தன், சாதுரியமாக நிமிர்ந்தான்! அந்த வேகத்தில் காத்தமுத்துவை நோக்கினான்.

அவனது உடம்பு அவமானத்தால் ஆடியது!

''மந்திரியாரே! ஆத்திரத்தை அடக்கும். இருக்கிற மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டு போய் விடுங்கள்'' என்று கர்ச்சித்தான்!



''போகா விட்டால் என்ன செய்வாய்?'' மீண்டும் காலைத் தூக்கினார், காத்தமுத்து.

வேந்தன் கல்லெறிபட்ட புலியானான்.

காலைத் தூக்கிய காத்தமுத்துவுக்கு காலாலேயே ஓர் உதை விட்டான்!

அதைத் தாக்குப் பிடிக்க முடியாமல் அவர், ''ஆ'' என்று அலறிக் கொண்டு தரையில் சாய்ந்தார்!

தந்தை விரைவில் விழுந்ததும், தனயன் வெங்கன் வீராவேசம் கொண்டான்!

''சீ பூம்பா'' என்ற, அவனுக்கு சொந்தமான தாரக மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு, வேந்தன் மீது பாய்ந்தான்.

தன்னோடு ''சீ பூம்பா''வும் சேர்ந்து கொண்டால், வேந்தனை இலகுவில் வீழ்த்தி விடலாம் என்று அவன் நினைத்தான்!

அதற்குள் காத்தமுத்துவும் எழுந்தார். அடிபட்ட நாய் போல, வேந்தன் மீது விழுந்தார்!

சுற்றி நின்ற வீரர்கள் காத்தமுத்துவின் உத்தரவுக்காகக் காத்து இருந்தார்கள்!

காத்தமுத்துவும் வெங்கனும் ஒன்று சேர்ந்து மோதியது. வேந்தனின் வீரத்துக்கு தீனி கிடைத்தது போல இருந்தது!

குலதெய்வம் காளிதேவி அவனுக்கு அளித்திருந்த அபரிமிதமான சக்தியை, அவன் அள்ளி அள்ளி வீசினான்.

வாளை ஏவி விட்டான்.

அதன் வேகத்தைத் தாங்க முடியாமல் வெங்கன் திணறினான். காத்தமுத்துவுக்கு மூச்சு வாங்கியது!

வேந்தனின் வாள், இயக்கி விட்ட மின் விசிறி போல் சுழல்வதைக் கண்ட படைவீரர்கள் அச்சத்தோடு வாயைப் பிளந்தனர்.

காத்தமுத்து கட்டளையிட்டால் கூட எத்தனைபேர், வேந்தனை நோக்கிச் செல்வார்கள் என்று சொல்ல முடியாது!

அந்த அளவுக்கு அவர்கள் கிலி பிடித்துப் போய் நின்றார்கள்!

மாவீரன் நரசிம்மனின் மகன் தந்தையையும் மிஞ்சி நிற்கிறானே என்று பெருமிதப்பட்ட வீரர்களும் அங்கு நின்றார்கள்!

வேந்தனின் வெடித் தாக்குதலால், சிதறுண்டு போன வெங்கன், ''தந்தையே! நம் வீரர்களை வேந்தனை சுற்றி மடக்கச் சொல்லுங்கள்'' என்று அபயக் குரல் எழுப்பினான்!

''வீரர்களே! வேந்தனைச் சுற்றி வளையுங்கள், பிடித்துக் கட்டுங்கள்.''

வேறு வழியில்லாமல் காத்தமுத்து கத்தினார்.

காத்தமுத்துவின் கட்டளை பிறந்ததும், வீரம் உள்ளவர்கள், தீரத்தோடு வேந்தனை நோக்கிப் பாய்ந்து வந்தார்கள்!

ஈட்டியோடு எதிரும் புதிருமாக ஓடி வந்தவர்கள், தங்களைத் தாங்களே குத்தி மாய்த்துக் கொண்டார்கள்!

வாளோடு சாடியவர்கள், கைபோன போக்கில் வாளைச் சுழற்றினார்கள்!

ஒதுங்கி நின்ற காத்தமுத்து, வேந்தன் ஒழிந்தான் என்றே நினைத்தார்!

வெங்கனும் அப்படியே எண்ணினான். வீரர்களின் வாளுக்கும் வேலுக்கும் வேந்தன் இரையாகி விட்டான் என்று நினைத்துக் கொண்டதும், அவனுக்குப் புதுவீரமும் பிறந்தது!

''வீரர்களே, அவனைக் கொன்று விடாதீர்கள்'' என்று வேந்தனுக்கு ஆதரவாகக் கத்திக் கொண்டு ஓடி வந்தான்!

முழு மூச்சாய் வாளை வீசிக் கொண்டிருந்த வீரர்கள், ''அப்பாடா'' என்று ஒதுங்கி நின்றார்கள்!

வெங்கன் தேள் கொட்டிய திருடன் போல ''தந்தையே!'' என்று கூவினான்!

காத்தமுத்து காரணம் புரியாமல் பதறினார்.

## 32

**வே**ந்தன் ஒழிந்தான்! இனிமேல் ஒய்யாரமாக அரச பதவியில் அமர்ந்து விடலாம், என்று கோட்டைகட்டிக் கொண்டு வந்த வெங்கனுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது!

அங்கே, அதுவரை போராடிக் கொண்டிருந்த வீரர்களுக்கு மத்தியில் வேந்தனைக் காணவில்லை!

அரைகுறை உயிரோடு சில வீரர்கள் மட்டுமே வீழ்ந்து கிடந்தனர்!

வெங்கன் "தந்தையே!" என்றதும், காத்தமுத்து பதறி அடித்துக் கொண்டு ஓடி வந்தார்!

வந்த வேகத்தில் அவர் வாய் பேச முடியாமல் நின்று விட்டார்! அவருக்கு எல்லாமே புரியாத புதிராக இருந்தது!

அதுவரை வேந்தன் மீது வாளையும் வேலையும் வீசிய வீரர்கள் சித்த பிரமை பிடித்தவர்கள் போல நின்றார்கள்.

"என் வாள் வேந்தன் மார்பில் பாய்ந்ததையும் அவன் 'ஆ' என்று அலறிக் கொண்டு தரையில் வீழ்ந்ததையும் என் கண்ணாலேயே பார்த்தேன்" என்ற அங்கலாய்த்தான் ஒரு வீரன்!

காத்தமுத்துவுக்கு மூளை கலங்கியது!

வெங்கன் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டான்! "வேந்தன் எப்படித் தப்பினான்?"

அப்போது ஒரு வீரன் ''அதோ, வேந்தன்!'' என்று குரல் கொடுத்தான்.

''வேந்தனா?''

வெங்கன் துடிப்போடு நிமிர்ந்தான். ''எங்கே, அவன்?''

அதற்குள் காத்தமுத்து வேந்தனைப் பார்த்துவிட்டார்!

வேந்தன் சிங்கம் போல எதைப் பற்றியும் கவலைப் படாது கோட்டைக்குள் இருந்து அந்தரங்க வாசல் வழியாக வெளியேறிக் கொண்டிருந்தான்!

அவனுக்காக, குதிரை வெளியே காத்துக் கொண்டு நின்றது!

''வீரர்களே! அவனை விரட்டிப் பிடியுங்கள்'' என்று கூவிக் கொண்டே வெங்கன் தலைதெறிக்க ஓடினான்!

வீரர்கள் அவனைத் தொடர்ந்து பாய்ந்து சென்றார்கள்!

வெங்கனும், வீரர்களும் தன்னை நோக்கி வருவதைப் பார்த்த வேந்தன், அலட்சியமாக ஒரு புன்முறுவலை உதிர்த்து விட்டு, குதிரையில் தாவி ஏறினான்!

அவர்களால், குதிரை தரையில் செல்கிறதா, பறந்து செல்கிறதா என்பதையே கண்டு கொள்ள முடியவில்லை!

''டக்... டக்... '' என்ற குதிரை ஓடும் ஒலி மட்டுமே அவர்கள் காதில் விழுந்தது!

பெரிய ஏமாற்றத்தைத் தழுவிக் கொண்ட வெங்கன் ஆற்றாமையால் விம்மினான்!

அவனது கோபம் எல்லாம் இளவரசி மீது திரும்பியது!

இளவரசி பூங்கொடி கொடுக்கும் தைரியத்தில் தான், வேந்தன் இப்படி விளையாட்டுக் காட்டுகிறான் என்று அவன் நினைத்தான்!

அவனுக்கு இரத்தம் சூடு ஏறியது!

காத்தமுத்து தடுத்தும் அவன் நிற்கவில்லை!

தான் செய்வது சரியா, தவறா என்ற கூட பார்க்காமல் அவன் ஆத்திரத்தோடு, அந்தப்புரத்துக்குள் நுழைந்தான்!

பஞ்சு மெத்தையில் நெஞ்சைப் புதைத்து, தந்தையை நினைத்து விசும்பிக் கொண்டிருந்த பூங்கொடி, வெங்கனைக் கண்டதும், தீயை மிதித்தவள் போல துடித்து எழுந்தாள்!

அரசரே சொல்லிக் கொள்ளாமல் செல்ல அஞ்சும் அந்தப்புரத்துக்குள், வெங்கன் நுழைந்தது, பூங்கொடிக்கு கடுங்கோபத்தை உண்டு பண்ணியது!

''யாரைக் கேட்டு இங்கே வந்தீர்கள்?'' என்று எடுத்த எடுப்பிலேயே கேள்விக் கணையைத் தொடுத்தாள்!

வெங்கன் பூங்கொடி எழுப்பிய வினாவுக்கு பதில் அளிக்கவில்லை. அவனது எண்ணம் எல்லாம் வேந்தன் மீதே இருந்தது!

''வேந்தன் இங்கே எப்படி வந்தான்?'' என்று படபடத்தான்.

அவளுக்கு கோபம் இன்னும் அதிகானது!

''வேந்தன் இங்கே வரவில்லை. முதலில் நீங்கள் வெளியே போங்கள்'' என்று இரைந்தாள்.

''நீங்கள் தான் அந்த அயோக்கியனை மறைத்து வைத்திருந்தீர்கள்!''

''யார் அயோக்கியன் என்று எனக்குத் தெரியும். உங்கள் திட்டம் எதுவும் பலிக்காது'' பூங்கொடி பெண் புலியாக சீறினாள்.

வெங்கனுக்கு சந்தேகம் வலுத்தது!

வேந்தனை ஒழித்தால் மட்டும் போதாது. பூங்கொடி இருந்தாலும் ஆபத்து என்று அவன் நினைத்தான்.

## 33


**வெ**ங்கன் தன் முடிவில் திடமாக இருந்தான்

இளவரசி பூங்கொடி உயிரோடு இருக்கும் வரை வேந்தனை அழிக்க முடியாது என்று அவன் எண்ணினான்.

இதற்கு முன்பு அவனது ஆசை வேறாக இருந்தது!

அரசர் பொன்னரசனுக்குப் பிறகு, இளவரசி பூங் கொடிக்கு மாலை சூடி விட்டு அரச பதவியைத் தனக்கு சூட்டிக் கொள்ளத் திட்டம் போட்டிருந்தான்!

அரச பதவியில் இருந்த மயக்கம், பூங்கொடியின் அழகிலும் அவனுக்கு இருந்தது!



ஆனால் இப்பொழுது அவன் தன் மனதை மாற்றிக் கொண்டு விட்டான்.

பூங்கொடியின் பார்வை அழுத்தமாக வேந்தன் மீது விழுந்து விட்டதை அறிந்ததும், அழகு மீது இருந்த மயக்கம் தெளிந்தது!

அவன் அரச பதவியில் தான் குறியாக இருந்தான்.

பூங்கொடி விரட்டி அடித்ததும், அந்தப்புரத்தில் இருந்து வெளியேறிய வெங்கனின் உடல் அவமானத்தால் துடித்தது!

இளவரசியைத் தீர்த்துக் கட்டும் வேலையை, தந்தைக்குத் தெரியாமலேயே செய்து முடிக்க அவன் நினைத்தான்!

அப்போது அவன் நினைவில் வந்து உறுத்தியது மந்திரவாதிதான்.

எனவே வெங்கன் உடனடியாக மந்திரவாதியைத் தேடிப் புறப்பட்டான்.

வெங்கனைப் பார்த்ததும் மந்திரவாதி ''இடி இடி'' என்று சிரித்தான்!

''என்ன நண்பரே வேந்தனை ஒழித்து விட்டீரா?'' என்று அலட்சியமாகக் கேட்டான்.

அவமானத்தால் தலைகுனிந்து நின்ற வெங்கன் அதுவரை நடந்த விஷயங்களையும், வேந்தன் போர் வீரர்களின் மத்தியில் இருந்து மாயமாய் மறைந்து போனதையும் எடுத்துச் சொன்னான்!

அதை கேட்டு, மேலும் ஒரு வெடிச் சிரிப்பை உதிர்த்தான், மந்திரவாதி!

அந்தச் சிரிப்பு வெங்கனுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது!

''உமக்குச் சிரிக்கத்தான் தெரியும். வேந்தனை ஒன்றும் செய்ய முடியாது'' என்றான் அலட்சியமாக!

''என்ன சொன்னாய்?''

திறந்து இருந்த வாயை அகல விரித்தான் மந்திரவாதி!

அவனது முகத்தை நேர் கொண்டு பார்க்க அஞ்சியவனாய் தலைகுனிந்து கொண்டான், வெங்கன்.

''வெங்கா! என் சக்தியிலேயே உனக்கு சந்தேகம் வந்து விட்டதா?''

இரைந்தான் மந்திரவாதி.

வாய் திறக்காமல் மவுனியானான், வெங்கன்!

தன் வல்லமையை வெங்கனுக்கு புரிய வைக்க எண்ணிய மந்திரவாதி, ''சீ பூம்பா'' என்ற அழைப்புக் குரல் எழுப்பினான்.

அடுத்த வினாடி -

மந்திரவாதியின் குகையைச் சுற்றியுள்ள மலைகள், வெடித்து சிதறுவது போன்ற ஓர் அதிர்ச்சி அங்கு எழுந்தது!

வெங்கன் பயமும் அதிர்ச்சியும் அடைந்து நின்றான்!

''இப்பொழுது என்னை என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?''

வெங்கனை நோக்கிக் கேட்டான், மந்திரவாதி.

மந்திரவாதியின் சக்தியில் புது நம்பிக்கை கொண்டவனாய் உற்சாகமாக பேசினான், வெங்கன்!

''இளவரசி பூங்கொடி உயிரோடு இருக்கும் வரை வேந்தனை அழிக்க முடியாது அதனால்...'' என்று தன் அடுத்த திட்டத்தையும் விளக்கினான், அவன்.

''இளவரசி உனக்கு மனைவியாக வேண்டாமா?'' என்ற கேட்டான் மந்திரவாதி.

''பூங்கொடி வேண்டும். ஆனால் அவளை விட அரச பதவிதான் முக்கியம்.''

மந்திரவாதி, சிறிது நேர சிந்தனைக்குப் பறகு, மீண்டும் வாயைத் திறந்தான்!

''வெங்கா! உனக்கு அரச பதவியையும் பெற்றுத் தருகிறேன். இளவரசி பூங்கொடியையும் உனக்கு அரசியாக ஆக்குகிறேன்.''

அதைக் கேட்டதும், வெங்கனுக்கு வாயில் தேன் வார்த்தது போல் இருந்தது!

''உண்மையாகவா?'' என்று உற்சாக மிகுதியால் கேட்டான்!

''என் காளி தேவியின் மீது ஆணையாக'' என்று உறுதி அளித்தான் மந்திரவாதி!

''வேந்தனை எப்படி ஒழிப்பது?'' வெங்கன் அச்சத்தோடு கேட்டான்.

''அவனை நான் கவனித்துக் கொள்கிறேன். நீ போ'' என்ற மந்திரவாதி ''சீ பூம்பா'' என்ற ஆங்காரத்தோடு ஓலமிட்டான்!

அது எங்கெங்கோ சென்று எதிரொலித்தது!

காளிதேவி குடியிருந்த குகையின் ஓரமாக உள்ள ஒரு பாறையில் படுத்திருந்த வேந்தன் திடுக்கிட்டு எழுந்தான்!

அந்தப் பாறை விரிந்து, அவனை விழுங்குவது போல இருந்தது!

## 34

**வே**ந்தன் ஓர் அப்பழுக்கற்ற - அசைக்கக் கூட முடியாத வீரன்!

எத்தகைய தாக்குதலையும் முறியடிக்கும் சக்தி அவனுக்கு இருந்தது!

தேக்கு போன்ற திடமான உடல் அவனுடையது!

அவனது இதயம் எதையும் தாங்கும் வலிமை பெற்றது!

தின்மை வாய்ந்த தோள்கள்.

துடிப்பான இரத்தம்!

ஆனாலும், அவன் ஒரு நிமிடம் துடித்துத் தான் போனான்!

தூக்கத்தில் இருந்து எழுந்த அவனுக்குக் கண்ணைக் கட்டி விட்டது போல இருந்தது!

இடியோசையையும் மிஞ்சும் பேரொலி ஒன்று அவனைச் சுற்றி எழுந்து, அவனது காதுகளைச் செவிடு ஆக்கியது!

சுற்றியிருந்த பெரு மலைகள் பெயர்ந்து அவன் மீது விழுவன போல அசைந்தன.

பாறைகள் மலையில் இருந்து சரிந்து வேந்தனை நோக்கி வேகமாக உருண்டன.

அவற்றைப் பார்த்ததும், வேந்தனுக்கு நடுக்கம் அதிகமானது!

அவை, தன்னை நசுக்கிக் கொன்று விடுமோ என்று பயந்தான்!

அச்சம் அவனை விரட்டியது!

அவன் அங்கிருந்து ஓடத் தொடங்கினான்!

பாறைகள் அவனை விரட்டத் தொடங்கின.

அப்போது பயங்கர சிரிப்பொலி ஒன்று எழுந்தது!

அதில் அகங்காரமும் அலட்சியமும் நிறைந்து இருந்தன!

அந்த சிரிப்பொலியைக் கேட்டதும், வேந்தன் ஒரு வினாடி நின்றான்! சிந்தனை வயப்பட்டான்!

இது, எல்லாம் ''சீ பூம்பா''வின் வேலையாக இருக்குமோ!

அவனது மூளை சுறுசுறுப்பாக இயங்கியது!

ஒரு நிமிட நேரத்தில் நடந்து விட்ட அந்த நிகழ்ச்சியை நினைத்து அவன் அவமானப்பட்டான்.

எவ்வளவு பெரிய கோழையாக - பேடியாக நடந்து விட்டோம்.

இப்படி நினைத்துக் கொண்டதும், வேந்தன் ஓட்டத்தை நிறுத்தினான்.

எந்தத் தாக்குதலையும் சமாளிக்க வல்ல வீரனாக நிமிர்ந்து நின்றான்.

அப்போது அதுவரை உருண்டு வந்த பாறைகள் படு வேகத்தில் அவனை நோக்கிப் பறந்து வந்தன.

ஆனால் இப்பொழுது அவன் பயந்து ஓடவில்லை!

நின்று பதில் அடி கொடுக்க எண்ணினான்.

''சீ பூம்பா''வே மரியாதையாக அடங்கிப் போய்விடு. அல்லது அழிந்து போவாய்'' என்று கர்ச்சித்தான்!

மீண்டும் அதே சிரிப்பொலி!

பறந்து வந்த பாறைகள் துடிப்போடு அவனை நெருங்கின.

குலதெய்வம் காளிதேவியை மனதிற்குள் நினைத்துக் கொண்ட வேந்தன், ''நில் அப்படியே!'' என்று உருண்டு வந்தபாறைகளை நோக்கிக் கை நீட்டினான்!

அடுத்த வினாடி....

மந்திரத்துக்குக் கட்டுண்ட நாகம் போல, பாறைகள் மெல்ல செயல் இழந்து அப்படியே நின்றன.

ஆடி அசைந்த பெரு மலைகள் அடங்கின.

புழுதிக் காற்று நின்றது!

வேந்தன் கம்பீரமாக சுற்றுமுற்றும் பார்த்தான்!

''மறைந்து இருந்து ஏவல் செய்து கொண்டிருக்கும் மந்திரவாதியே தைரியம் இருந்தால், நேரில் வா, மோதிப் பார்ப்போம்!'' என்று சவால் விட்டான்!

இதற்குப் பதில் வரவில்லை!

மாறாக, மயான அமைதி ஏற்பட்டது.

''நீ வரவேண்டாம். இருக்கும் இடத்தைச் சொல். நானே வருகிறேன்'' மீண்டும் சவால் விட்டான், வேந்தன்!

அப்போது, அடங்கிக் கிடந்த பாறைகள் மீண்டும் அசைந்தன!

அவனைச் சுற்றிலும் ''சீ பூம்பா'' என்ற குரல் எழுந்தது!

தரையே அசைந்து விட்டது போல, அவன் நிற்க முடியாமல் தள்ளாடினான்.

அப்போது கண்ணைப் பறிக்கும் தீப் பந்தம் ஒன்று அவனைச் சுட்டெரிக்கப் பறந்து வந்தது!

அதைப் பார்த்ததும், வேந்தன் மீண்டும் ஓடத் தொடங்கினான்.

## 35

தீப்பந்தத்தைக் கண்டு வேந்தன் ஓட்டம் பிடிக்கவும், மந்திரவாதி பாடு கொண்டாட்டமாகியது!

வேந்தனை விளையாட்டுக் காட்டி, அப்படியே அழித்து விட நினைத்தான்!

தன் குகையில் இருந்த ஒரு பயங்கரச் சிலை முன்பு அமர்ந்து கொண்டு மந்திரங்களை உச்சரித்தான்!

''ஓம்....''

''ரீம்..''

''கரீம்...''

''ஜெய்..''

''சீபூம்பா..''

மந்திரவாதி மந்திரங்களை முடித்ததும், ஓடிக் கொண்டிருந்த வேந்தன் முன், திடீர் என்று ஒரு புலி தோன்றியது.

ஒரு பக்கம் தாங்க முடியாத அனலைக் கக்கிக் கொண்டிருக்கும் தீப்பந்தம்!

மறுபக்கம் பசிக் கொடுமையால் இரை தேடி நிற்கும் புலி!



நடுவில் வேந்தன்!

எந்தப் பக்கம் திரும்பி ஓடினாலும் தீப்பந்தமும் புலியும் அவனை விடப் போவது இல்லை!

புலிக்கும் தீப் பந்தத்துக்கும் இடையே நின்று தத்தளித்துக் கொண்டிருந்த வேந்தனுக்கு அப்போதுதான் தன் இடையில் தூங்கிக் கொண்டிருந்த வாளின் நினைவு வந்தது!

வாளை உருவினான்.

வாள் கைக்கு வந்ததும், அவனுக்கு புது பலமும், வலிமையும் வந்தது!

அவன், உருவிய வாளோடு புலி மீது பாய்ந்தான்!

பாய வந்த புலி, பதுங்கி ஓடியது.

இது என்ன மாயம் என்ற எண்ணியவனாய் அவன் தீப்பந்தம் வந்த திசையை நோக்கினான்!

பறந்த வந்த தீப்பந்தத்தையும் காணவில்லை!

''சீ பூம்பா'' என்ற குரலும் ஒலிக்கவில்லை!

குழப்பம் அடைந்த வேந்தன், தீப்பந்தம் வந்த திசையை நோக்கி ஓடினான்!

ஏவி விட்டவன் அங்கே எங்கேயாவது நிற்கக் கூடும் என்ற நினைப்பில்!

அவன் படுத்திருந்த இடத்துக்கே வந்து விட்டான், ஆனால் யாரும் அவன் கண்ணில் படவில்லை!

ஒன்று மட்டும் அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது!

காத்தமுத்து - வெங்கனுக்கு ஆதரவாக, மந்திரத்தினால் ஏவல் செய்யும் சக்தி பெற்ற மந்திரவாதி ஒருவனும் தன்னை அழிக்க நேரடியாக முற்படுகிறான் என்பதை வேந்தன் உணர்ந்ததும், அவனது உடல் துடித்தது!

அந்த மந்திரவாதி எங்கே எப்படி வாழ்கிறான் என்பதைக் கண்டு பிடித்து, அவனோடு மோத உறுதி பூண்டான் அவன்.

**அ**ரண்மனையில் அரசர் பொன்னரசனின் நிலைமை படு மோசமாகியது!

படுத்த படுக்கையாக இருந்த அரசருக்கு, துடிப்பும் நின்று கொண்டு வந்தது!

வெங்கன், பிணம் தின்னிக் கழுகு போல், அரசர் எப்போது மண்டையைப் போடுவார், அரசர் ஆகலாம் என்று காத்துக் கொண்டிருந்தான்!

மந்திரவாதியை சந்தித்த பிறகு இளவரசி பூங்கொடியும் தனக்குத்தான் என்பதில் அவன் உறுதியாக இருந்தான்!

அடிக்கடி பூங்கொடியைப் போய்ப் பார்ப்பதும், அவளுக்கு ஆதரவாகப் பேசுவதுமாக இருந்தான், அவன்!

சோதிடரோ, வேந்தனோ அரண்மனைப் பக்கமே வராமல் போய் விட்டது, அவளுக்கு அவநம்பிக்கையைக் கொடுத்தது!

ஒரு நாள் நீர் வழிந்த கண்களோடு அரசர் படுத்திருந்த தனி அறைக்குள் போனாள்.

மகளைப் பார்த்ததும், பொன்னரசன் அழுதே விட்டார்.

"மகளே! உனக்கு திருமணம் நடத்தி வைத்துப் பார்க்கும் பாக்கியம் எனக்கு கிடைக்காது போல இருக்கிறதே! என்னை, இந்தப் பாவிகள் உயிரோடு இருக்க விடமாட்டார்கள்" என்று கண் கலங்கினார்.

பூங்கொடி, என்ன சொல்லுவது என்று தெரியாமல் விம்மினாள்.

பொன்னரசன் தொடர்ந்து பேசினார்.

"மகளே! வேந்தன் ஒருவனால் மட்டுமே, என்னையும் நாட்டையும் இந்தப் பாவிகளிடம் இருந்து காப்பாற்ற முடியும், சிறு வயதில் அவனைச் சிறையில் அடைத்து கொடுமைப்படுத்திய நானே இதைச் சொன்னதாக, வேந்தனிடம் சொன்னால் அவன் என்னை மன்னித்து, நாட்டைக் காப்பாற்றி விடுவான்."

அரசரும் வேந்தனிடம் அளவற்ற மதிப்பு வைத்திருந்தது, இளவரசிக்கு ஆறுதலைக் கொடுத்தது!

தந்தையே! நீங்கள் தெரிவித்த இந்தச் செய்தியை எப்படியும் வேந்தனிடம் தெரிவிப்பதற்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்று தன் அறைக்கு வந்த பூங்கொடிக்கு ஜோதிடர் நினைவு வந்தது!

சோதிடரை சந்தித்து விஷயத்தைச் சொன்னால் போதும், செய்தி வேந்தனுக்குப் போய்விடும் என்று எண்ணினாள்.

## 36

அன்று இரவே, பூங்கொடி, பணிப்பெண் உடையை உடம்பில் சுற்றினாள். சோதிடர் குடிசையை அடைந்தாள்!

சோதிடர் வியப்போடு, இளவரசியை வரவேற்று அமரச் செய்தார்.

பூங்கொடி செய்தியைச் சொன்னாள்.

''நீங்கள் தைரியமாக அரண்மனைக்குப் போங்கள். நான் தருகிற மருந்தைப் பத்திரமாகக் கொண்டு போய் அரசருக்குக் குடிக்கக் கொடுங்கள். எல்லாம் நல்லபடியாக நடக்கும்'' என்று சோதிடர் சொன்னார்.

பூங்கொடி ஆறுதலோடு வெளியேறினாள்.

''இளவரசி!''

சோதிடரோடு குடிசையை விட்டு வெளியேறிய பூங்கொடி, அந்தக் குரலைக் கேட்டு வெடவெடத்துப் போனாள்!

இளவரசிய்யை, இந்த இரவு நேரத்தில் இவ்வளவு அதிகாரத்தோடு அழைப்பவர் யார் என்று அறியும் பொருட்டு, சோதிடர் பூங்கொடியை முந்திக் கொண்டு வெளியே வந்தார்!

அங்கே -

வெங்கன் வெறுப்போடு நின்று கொண்டிருந்தான்!

பூங்கொடி அரண்மனையை விட்டு வெளியேறியதை, தன் தூதுவன் மூலம் அறிந்த வெங்கன், அவளைத் தொடர்ந்து வந்திருந்தான்!

மறைந்து நின்று, அவர்கள் பேசியதையும், அவன் கேட்டிருந்தான்!

அவனுடைய கண்கள் கோவைப்பழம் போல சிவந்து இருந்தன.

''யாரது! மந்திரி மகன் வெங்கனா? ஏது இவ்வளவு தூரம், இந்த இரவு நேரத்தில்!'' எதுவும் நடக்காதது போல அமைதியாகக் கேட்டார், சோதிடர்!

''இந்த நாட்டின் இளவரசி - அதுவும் கன்னிப்பெண் - இந்த இரவு நேரத்தில் சோதிடர் குடிசைக்கு வரலாம்! ஆனால் நாட்டைக் காக்கும் ஒரு வீரன், இந்த வீட்டுக்கு இரவு நேரத்தில் வந்தது ஆச்சரியமாக இருக்கிறதோ!'' கோபக் கனலைக் கக்கினான், வெங்கன்!

''விஷயத்தோடு வந்தால் தவறு இல்லை.''

''நானும் விஷயத்தோடு தான் வந்து இருக்கிறேன்.''

''என்ன விஷயம்! வாருங்கள் உட்கார்ந்து பேசுவோம்.''

''நான் உட்காரவில்லை. உங்களை இழுத்துப் போய் சிறையில் அடைக்க வந்திருக்கிறேன்.''

வெங்கன் அலட்சியமாகப் பேசினான்.

''வெங்கா!'' என்று தடுமாறினார், சோதிடர். ''என்னை ஏன் சிறையில் அடைக்க வேண்டும்.''

''நீர் தேசத் துரோகி! எனவே, வெளியில் இருக்கக் கூடாது.''

வெங்கன் இப்படிச் சொன்னதும், பூங்கொடி பொங்கும் எரிமலையானாள்.

''வெங்கா! சோதிடரை சிறையில் அடைக்க நீங்கள் யார்?'' என்று சாடினாள்.

''இளவரசி! இந்த விஷயத்தில் நீங்கள் தலையிட வேண்டாம். நாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எங்களுடையது! ஒரு நாட்டின் இளவரசி, இப்படி நடுநிசி நேரத்தில் அரண்மனையை விட்டு வெளியேறுவது நல்லது அல்ல. உடனே அரண்மனைக்குப் புறப்படுங்கள்'' என்று வெங்கன் அவசரப்படுத்தினான்!

பூங்கொடியால் எதுவும் பேச முடியவில்லை!

அவள் சோதிடர் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள்!

''எதற்கும் பயப்படாதே! எல்லாம் நல்லபடியாக முடியும்'' என்று ஆறுதல் கூறுவது போல, இளவரசியை நோக்கினார் சோதிடர்.

அந்தப் பார்வையில் சற்று ஆறுதல் அடைந்த பூங்கொடி, தன் பணிப் பெண்களுடன், அங்கிருந்து அகன்றாள்.

அவளுக்குத் துணையாக இரண்டு வீரர்களையும் அனுப்பி வைத்தான், வெங்கன்.

பூங்கொடி சிறிது தூரம் கூட சென்றிருக்க மாட்டாள்!

''சோதிடரைப் பிடித்துக் கட்டுங்கள்'' என்று அதிகார மாகக் கட்டளையிட்டான் அவன்.

நாலு வீரர்கள் சோதிடரை நெருங்கினார்கள்!

''வெங்கா! என்ன இது எல்லாம்!'' சோதிடர் பதறினார்.

''அரசர் கட்டளைப்படி உன்னைக் கட்டி இழுத்துப் போய்ச் சிறையில் தள்ளப் போகிறேன்'' என்றான் வெங்கன் அகம்பாவத்துடன்.

''நான் சிறைக்குப் போய்த்தான், இந்த நாடு துரோகிகளிடம் இருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்று இருந்தால், என்னைக் கட்டி இழுத்துப் போக வேண்டாம். நானே சிறைக்கு வருகிறேன்'' என்று வெங்கனை நிமிர்ந்து பார்த்தார் சோதிடர்.

அந்த முரடர்களின் காதில் சோதிடரின் பேச்சு விழவே இல்லை!

வெங்கன் வீரர்களைப் பார்த்து ''உம்'' என்றான்!

உடனே, சோதிடரை நெருங்கிய நாலு வீரர்கள், அவரை அப்படியே அலாக்காகத் தூக்கி, குதிரையில் ஏற்றினார்கள்!

வெங்கன், வெற்றிப் புன்னகையோடு, முன்னே செல்ல, சோதிடரை ஏற்றிச் சென்ற குதிரை பின்னே தொடர்ந்தது.

வெங்கனுக்கு நினைவு எல்லாம் இளவரசி பூங்கொடி மேலேயே இருந்தது!

எவ்வளவு தைரியம் இருந்தால், நடுநிசி நேரத்தில் அரண்மனையை விட்டு வெளியேறுவார் என்று எண்ணி எண்ணிக் கலங்கினான்!

இளவரசியை இவ்வளவு சுதந்திரமாக நடமாட விட்டால், காரியம் கெட்டு விடும் என்றும் அவன் நினைத்தான்.

## 37

**சோ**திடர் மேல் வீரர்களின் கை பட்டதுமே மலையில் படுத்திருந்த வேந்தனுக்கு உடம்பு கனத்தது!

வேகமாக எழுந்து உட்கார்ந்து சிந்தனை வயப்பட்டான்!

அவனால் மேற்கொண்டு அங்கு இருக்க முடியவில்லை!

சோதிடரைப் பார்க்க வேண்டும் போல அவனுக்கு இருந்தது.

குதிரையில் ஏறி, தட்டி விட்டான்!

அந்த இரவு நேரத்திலும், குதிரை நாலுகால் பாய்ச்சல் போட்டது!

சோதிடரின் குடிசையை குதிரை அடைந்த போது, விளக்கு ஒளி தெரியவில்லை.



வேந்தன் குதிரையில் இருந்து இறங்கி, கதவைத் தட்டினான்.

பதில் இல்லை.

பலத்த சந்தேகத்தோடு நிமிர்ந்தான், வேந்தன்!

அப்போது பக்கத்து குடிசையில் இருந்த ஒருவர் விஷயத்தைச் சொன்னார்.

''வெங்கன் படையோடு வந்து, சோதிடரை இழுத்துப் போனான்'' என்று அவர் தெரிவித்தார்.

அதைக் கேட்டதும், வேந்தனின் இரத்த நாளங்கள் புடைத்தன.

அப்போதே, வெங்கனை சந்திக்க வேண்டும் என்ற துடிப்பு அவனுள் எழுந்தது!

**வே**ந்தன் வாளைத் தொட்டதும், ஏவல் சக்திகள் செயலற்றுப் போனது, மந்திரவாதிக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது!

புலி அடித்துக் கொல்லவும், அந்த உடலைத் தீ சுட்டுப் பொசுக்கவும் வேந்தன் மீது தீப்பந்தத்தையும் புலியையும், மந்திரவாதி ஏவினான்!

அவனது திட்டம் இப்படிப் புஸ் வானம் ஆகும் என்று அவன் கனவில் கூட நினைக்கவில்லை.!

அவனுக்குப் பெருத்த ஏமாற்றமாகியது!

அவன் மீண்டும் சிலை முன்பு அமர்ந்தான்!

''ஓம்...''

''ரீம்...''

''க்ரீம்..''

''த்ரீம்..''

''ஜெய் சீ பூம்பா'' என்ற உரத்தக் குரலில் மந்திரங்களை உச்சரித்தான்!

அடுத்த வினாடி -

புதிதாக எதையோ கண்டு பிடித்து விட்டவன் போல், துடிப்போடு எழுந்தான்!

''உன் பல்லைப் பிடுங்கியே தீருவேன்'' என்று மனதுக்குள் சபதம் செய்து கொண்டான்!

**வே**ந்தனை எதிரே பார்த்ததும் வெங்கன் வெடவெடத்துப் போனான்.

கை, கால்கள் உதறல் எடுத்தன!

வேந்தன் இப்படி வந்து நிற்பான் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

மந்திரவாதியிடம் மாட்டிக் கொண்டிருப்பான் என்று நினைத்து, அவன் மகிழ்ச்சிக் கடலில் நீந்திக் கொண்டிருந் தான்!

அதனால்தான் இவ்வளவு தைரியமாக, சோதிடரை சிறையில் தள்ள முற்பட்டான்!

சோதிடரை வெங்கன் குதிரையில் ஏற்றிய செய்தியை அறிந்ததும், வேந்தன் வாயு வேகத்தில் அரண்மனைக்குச் சென்றான்.

வெங்கன் தன் பரிவாரங்களுடன், அரண்மனையைப் போய் அடையவில்லை என்பதைத் தெரிந்து கொண்டு திரும்பிய போது தான் வழியில் இந்த சந்திப்பு நடந்தது!

வேந்தன், வெங்கனுக்கு எதிரிலே அலட்சியமாக நின்று கொண்டு இருந்தான்!''வெங்கா! உன் எண்ணம் நிறைவேறாது'' என்று கம்பீரமாக உரைத்தான், வேந்தன். அவனது கண்கள் சோதிடரைத் தேடின.

பின்னால் வந்த குதிரையில் இருந்த சோதிடர், அப்போது தான் வேந்தனைப் பார்த்தார்!

''வேந்தா!'' என்றார் பாசத்தோடு!

''சோதிடரைச் சிறையில் அடைக்க வேண்டும் என்பது அரசர் கட்டளை''.

வெங்கன் குனிந்த தலை நிமிராமல் பேசினான்!

வேந்தனிடம் போரிட்டு, தோல்வியைத் தழுவிக் கொள்ள அவன் விரும்பவில்லை. அதனால் பேச்சில் அடக்கத்தைக் காட்டினான்.

''சோதிடர் ஒரு குற்றமும் செய்யாதவர். தைரியம் இருந்தால், என்னை இழுத்துப் போய் சிறையில் அடை'' என்று சவால் விட்டான் வேந்தன.

''குற்றவாளியா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர் அரசர்'' வெங்கன் தலை நிமிராமலேயே பேசினான்.

''நீயாக சோதிடரை என்னிடம் ஒப்படைக்க மறுத்தால், நான் அவரை உன்னிடம் இருந்து மீட்டுப் போக வேண்டிவரும்''.

''என்ன?'' பீதியோடு வினவினான் வெங்கன்!

''உன்னையும், உன் வீரர்களையும் மண் கவ்வ வைத்து விட்டு, சோதிடர் அய்யாவைக் கூட்டிப் போவேன்'' என்று அழுத்தமாகச் சொன்னான் வேந்தன்!

''நான் உன்னோடு, போரிட வரவில்லை'' என்று சொன்ன வெங்கன், ''வீரர்களே! அந்த சோதிடரை இறக்கி விட்டு விட்டு, வாருங்கள். அரசரிடம் போவோம்'' என்று அவசரமாக குதிரையைச் செலுத்தினான்!

வேந்தன் நகைத்தான்!

தலை தப்பினால் போதும் என்று மற்ற வீரர்களும் வெங்கனைத் தொடர்ந்தார்கள்!

## 38

**சோ**திடர் தள்ளாடியபடி வேந்தனிடம் வந்தார்!

''வேந்தா! காத்தமுத்து கண் வைத்து விட்டார். இனிமேல் இந்தக் கிழவனுக்கு என்றைக்கும் ஆபத்துதான்''.

''அய்யா! நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். உங்களை யாரும் ஒன்றும் செய்து விட முடியாது. நான் இருக்கிறேன். என்னை நம்புங்கள்'' என்று ஜோதிடருக்கு தைரியமூட்டினான், வேந்தன்.

''நாளையும் குடிசைக்கு வெங்கன் வந்தால், நான் என்ன செய்வது?''

''உங்களைத் தனியே விட்டால்தானே! நீங்கள் இனிமேல் என்னோடுதான் இருக்கப் போகிறீர்கள்'' சோதிடரை உற்றுப் பார்த்தான் வேந்தன்!

''வேந்தா!'' என்றார் சோதிடர் அதிர்ச்சியோடு, ''நான் உன்னோடு எப்படி இருக்க முடியும்.''

''உங்களுக்கு எந்தக் குறையும் இல்லாமல் என்னோடு வைத்துக் கொள்கிறேன்'' என்று அவன் வற்புறுத்தி அழைத்தான்!

சோதிடர் அரைகுறை மனதோடு ''சரி'' என்றார்!

வேந்தன் அவரைக் குதிரையில் ஏற்றினான்!

குதிரை பாயத் தொடங்கியது!

இளவரசி பூங்கொடி வந்து போன விஷயத்தை வேந்தனிடம் சோதிடர் சொன்னார்.

எல்லாவற்றையும் கேட்ட வேந்தன், ''உடனே அரசரைக் காப்பாற்றியாக வேண்டும்'' என்றான்.

சோதிடர் காட்டில் படர்ந்து கிடந்த மூலிகைகளைப் பறித்து வேகமாக மருந்து தயார் செய்தார்.

''அரசரை சந்தித்து இந்த மருந்தைக் குடிக்கக் கொடு. அவருக்கு நல்ல குணம் கிடைத்து விடும்'' என்று மருந்தை வேந்தனிடம் கொடுத்தார்.

வேந்தன் மருந்தைப் பெற்றுக் கொண்டு, குதிரையில் ஏறினான்.

அரண்மனையை நோக்கி வேந்தன் செல்வதை, தனது மந்திர சக்தியால் அறிந்த மந்திரவாதி பதறி எழுந்தான்.

''சீ பூம்பா'' என்று அலறினான்.

அந்த சத்தத்தில், பொன்னி மலைத்தீவே குலுங்கியது.

மரங்கள் சடசடவென்று சரிந்தன! வயல்கள் கருகின!

மிருகங்கள் பீதியால் தலைதெரிக்க அங்கு மிங்கும் ஓடத் தொடங்கின!

மக்கள், பொன்னிமலைத் தீவுக்கு அழிவு வந்து விட்டது என்றே நினைத்தார்கள்!

தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள புகலிடம் தேடி ஓடினர்.

ஆனால் வேந்தன் மட்டும் எந்தவித சங்கடத்திலும் சிக்காமல், போய்க் கொண்டிருந்தான்!

அவனது எண்ணம் எல்லாம் அரண்மனையைப் பற்றியே இருந்தது!

திடீர் என்று ஓர் அலறல் ஒலி விழுந்தது!

''ஜெய் சீ பூம்பா...!''

அடுத்த வினாடி -

பாய்ந்து சென்ற வேந்தனின் குதிரை பதறி நின்றது!

வேந்தன் கண்களை அகல விரித்தான்!

கடிவாளத்தைச் சுண்டினான்!

குதிரை அசையவில்லை.

அடுத்த கணம் -

''பளபள'' என்று மின்னிக் கொண்டு, ஒரு வாள், வேந்தனின் மார்பை நோக்கி வந்தது!

வேந்தன் உஷார் ஆனான்!

ஏவல் சக்தி மறைந்திருந்து, களத்தில் இறங்கி விட்டதை உணர்ந்ததும், அவன் லாவகமாக குதிரையில் இருந்து குதித்தான்!

கண் இமைக்கும் நேரத்தில் தனது வாளை உருவி எதிரியின் வாளை நோக்கி வீசினான்!

அது, காளிதேவி அவனுக்கு அளித்த வாள்!

எதிரியை அடித்து நொறுக்கி வீழ்த்தி விட்டு, திரும்பி வருமாறு தன் வாளை ஏவினான்!

அடுத்த வினாடி.

இரண்டு வாள்களும் அந்தரத்தில் பயங்கரமாக மோதின!

தீப்பொறிகள் பறந்தன!

ஆனால் எந்த வாளுமே பின் வாங்கவில்லை!

ஒன்றுக்கொன்று சளைக்காமல் பெரும் போர் புரிந்தன!

இரண்டுமே இரண்டு மலையாக நின்று போரிட்டாலும், வேந்தனின் வாள் மாமலையாக நின்றது!

ஆனாலும் அந்த சரி நிகர் போர் அதிக நேரம் நீடிக்கவில்லை!

எதிரியின் வாளுக்கு நாடி தளர்ந்தது!

அது பின் வாங்கத் தொடங்கியது!

அந்த நேரத்தில் வேந்தன் எதிர்பார்க்காத ஒன்று நடந்தது.

## 39

**வா**ள் பின் வாங்கியதும், எரிமலை வெடித்து சிதறுவதைப் போன்ற ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது!

அடுத்த வினாடி -

மந்திரவாதி ஆவேசத்துடன் அங்கு தோன்றினான்!

அவனது கையில் இருந்த வாள் மின்னலைப் போல் ''பளிச்பளிச்'' சென்று வெட்டியது!

பரட்டைத் தலை!

சிவந்த கண்கள்!

அவமானத்தால் துடிக்கும் அடர்ந்த மீசை!

கழுத்தில் ருத்திராட்சைக் கொட்டை மாலை!

இடையில் ஒரு எலும்பு துண்டு!

அவன் நெற்றியில் வைத்திருந்த குங்குமப் பொட்டு, அவனை முக்கண்ணனாகக் காட்டியது!

மொத்தத்தில் பயங்கரப் பூதம் போல, அவன் காட்சி அளித்தான்!

அவனைப் பார்க்கவே வேந்தனுக்கு அருவெறுப்பாக இருந்தது!

மாமிச மலை போன்ற அவனது உடல், வேந்தனுக்கு சிறிது அச்சத்தைக் கொடுத்தது!

மந்திரவாதி வாளைச் சுழற்றிக் கொண்டு, ''வேந்தா'' என்று அறைகூவல் விட்டான்!

வேந்தனால், இதற்கு மேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை!

அவனும் களத்தில் குதித்தான்.

அதுவரை அந்தரத்தில், மந்திரவாதியின் வாளை விரட்டி அடித்த வாள் கைக்கு வந்தது!

மந்திரவாதியின் முன், பெருமலையை உடைக்கும் சிற்றுளியாக வேந்தன் நின்றான்!



வேந்தனை நேரடியாகப் பார்த்ததும், மந்திரவாதி எள்ளி நகையாடினான்!

''சிறு நரியே! என்னிடமா வாலை ஆட்டுகிறாய்? நறுக்கி விடுவேன், ஜாக்கிரதை!'' என்று சீறினான்.

வேந்தன் பின்வாங்கவில்லை. வாய் மூடியாகவும் நிற்கவில்லை. அஞ்சாத சிங்கமாக நின்றான்!

''உன்னால் முடிந்தால் பார்த்துக் கொள்'' என்றான் அலட்சியமாக.

''கிண்டல் பண்ணுகிறாயா?'' என்று சாடினான் மந்திரவாதி.

''கிண்டலுக்கு கிண்டல்!'' என்று தலை நிமிர்ந்து சொன்னான் வேந்தன்!

''அடி கொடுத்தால்...'' மந்திரவாதி மீசையை முறுக்கினான்!

''பதிலடி கிடைக்கும்..!''

வேந்தன் சொல்லி வாயை மூடவில்லை!

அதற்குள் அடங்காத வெள்ளமாய், மந்திரவாதி வேந்தன் மீது பாய்ந்தான்! இந்தப் பாய்ச்சலுக்கு எல்லாம் நடுங்குபவனா, வேந்தன்?

இடி தாங்கி போல், நின்று, மந்திரவாதியின் திடீர் தாக்குதலைத் தாங்கினான்!

மந்திரவாதி, எந்தக் கோணத்தில் இருந்து வாளை வீசினாலும், அதை வேந்தனின் வாள் முறியடித்தது!

வேந்தனோடு, வாள் போரில் வெல்ல முடியாது என்பதை அறிந்து கொண்டதும், அவனது மார்பில் வாளைப் பாய்ச்சும் முயற்சியில் இறங்கினான், மந்திரவாதி.

வேந்தனுக்கு வேறு பக்கம் போக்குக் காட்டி, வாளை அவனது மார்பை நோக்கி வீசினான்!

இந்த முயற்சியிலும் மந்திரவாதிக்குத் தோல்வியே ஏற்பட்டது.

வேந்தன் தன் மற்றொரு கையால் மந்திரவாதியின் வாளைத் தடுத்து நிறுத்தினான்.

இத்தனைக்கும் அவனது கையில் சிறு காயம் கூட ஏற்படவில்லை!

ஆனால், மந்திரவாதியின் பூத உடல் வியர்த்தது!

கை தளர்ந்தது!

பின்வாங்குவது போல் சென்று, தன் தலை முடியில் ஒன்றைப் பிடுங்கி, வேந்தன் மீது வீசினான்.

அடுத்த வினாடி -

தலை முடி கருநாகமாக மாறி, வேந்தனை விரட்டியது!

வேந்தன், ''தாயே!'' என்று கூவினான்!

அடுத்த நிமிடம் -

ராட்சச மயில் ஒன்று பறந்து வந்து பாம்பைக் கொத்திச் சென்றது!

அடுத்து மந்திரவாதி ''சீ பூம்பா'' என்ற கத்தினான்!

தரையை ஓங்கி மிதித்தான்!

உடனே பெரிய பூகம்பம் ஏற்பட்டது. பூமி இரண்டாக வெடித்து விரிந்தது!

பூமாதேவி, வேந்தனை எடுத்து விழுங்கி விடுவாள் என்றே மந்திரவாதி நினைத்தான்.

ஆனால் பூமாதேவியோ, வேந்தன் மீது பூமாரி பொழிந்தாள்!

வேந்தன் எந்தத் தாக்குதலையும் சந்திக்காதவன் போல நின்று கொண்டிருந்தான்!

தோல்விக்கு மேல் தோல்வியை சந்தித்த மந்திரவாதிக்கு உடல் துடித்தது!

அற்ப பயலிடம் நம் சக்தி பலிக்கவில்லையே என்று தவித்தான்!

கடைசி முயற்சியாக தன் இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த எலும்புத் துண்டை எடுத்து வேந்தனை நோக்கி வீசினான்!

அந்த எலும்புத் துண்டு பல்லாயிரக்கணக்கான அம்புகளாய் வேந்தனை நோக்கிப் பாய்ந்தன.

## 40

அம்புகளைக் கண்டு வேந்தன் அச்சப்படவில்லை. தனது அற்புத வாளை எடுத்து தனக்கு மேலாக சுழற்றினான்.

அவ்வளவு தான்! பாய்ந்து வந்த அம்புகள் சடசடவென்று ஒடிந்து தரையில் விழுந்தன.

மந்திரவாதி கண் பிதுங்கினான்.

வேந்தன் வெற்றிச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தான்.

''மந்திரவாதியே! நீ யார் என்பதைச் சொல்லிவிடு. இது வரை செய்த அட்டூழியங்களுக்கு எல்லாம் அரசரிடம் போய் மன்னிப்புக் கேள். நல்ல அரசர். உன்னை மன்னித்து விடுவார்'' என்று கர்ச்சித்தான்.

சிறுநரி எக்காளமிடுகிறதே என்று எண்ணி வெதும்பினான், மந்திரவாதி.

அவமானத்தால் அவனது உடல் குன்றியது.

சீ பூம்பாவை மனதில் நினைத்து ஜெபித்தான்!

பிறகு, குரல்வளை நெறிக்கப்பட்டவன் போல ''ஆ'' என்று அலறினான்!

அடுத்த கணம் -

பேய் பிடித்தவன் போல ஆடினான்!

அவன் கட்டி முடித்திருந்த நீண்ட தலைமுடி அவிழ்ந்தது!

வாய் மந்திரங்களை முணுமுணுத்தது.

ஓர் இடத்தில் நிற்காமல், அவன் அப்படியும் இப்படியுமாக குதித்து ஆடினான்!

அவன் ஆடும் வேகத்தில், பூமியே அதிர்ந்தது.

அதைக் கண்டும் வேந்தன் மிரளவில்லை!

மேற்கொண்டு என்ன நடக்கிறது என்பதை அறியும் ஆவலில் அவன் இருந்தான்!

சிறிது நேரம் தனது மலை போன்ற உடலை பம்பரமாக ஆட்டிக் கொண்டிருந்த மந்திரவாதி, அடுத்து ''ஆ...ஊ...'' என்று ஏதேதோ கத்தத் தொடங்கினான்.

வேந்தனால் எந்த வார்த்தையையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை!

பேய் மொழி பேசுகிறானோ, என்று நினைத்தவனாய், மந்திரவாதியின் நடவடிக்கைகளைக் கவனிக்கலானான்.

இப்பொழுது அவன் போட்ட ஆட்டம் அதிகமானது.

கைகளை மடக்கியும் காலைத் தூக்கியும் ஆடினான்; குதித்தான்.

அவனைப் பார்ப்பதற்கு ஓர் அரக்கன் போல் இருந்தான்.

திடீர் என்று அவன் வெறி பிடித்தவன் போல கத்தினான்.

''சீ பூம்பா'' என்று ஓலமிட்டான்.

கண்கள் மின்னலைப் போல வெட்டி நின்றன.

அடுத்த வினாடி -

அவனது கைக்கு ஓர் ஈட்டி வந்தது!

அவன் மதம்பிடித்த யானை ஆனான்.

ஈட்டியைக் கையில் ஏந்திக் கொண்டு வேந்தனை நோக்கிப் பாய்ந்தான்!

அந்த ஈட்டியின் பளபளப்பு வேந்தனது கண்களைக் கூசச் செய்தது!

அவன் மந்திரவாதியை நிமிர்ந்து பார்க்கவே முடியாமல் திணறினான்.

கண்களைத் திறக்கமுடியாமல், மேலும் சிறிது நேரம் அங்கு வேந்தன் நின்றிருந்தால் அவனது மார்பை மந்திரவாதியின் ஈட்டி, பிளந்து இருக்கும்.

ஆனால் வேந்தன் நொடிப்பொழுது நேரத்தில் மிக சாதுரியமாகத் தப்பினான்.

தரையில் குப்புற விழுந்து உருண்டான்!

மந்திரவாதியின் குறி தப்பியது!

வேந்தன் தரையில் இருந்து எழும்போது புதுப் பலத்தோடு நிமிர்ந்தான்.

தனது வாளைக் கொண்டு, மந்திரியின் திடீர் ஈட்டியை திக்குமுக்காடச் செய்தான்!

நாகம் போல், ஈட்டி அவன் மீது சீறியது!

அந்த சீற்றத்தை வேந்தனின் வாள் அடக்கியது!

அதைக் கண்டு மந்திரவாதி மிரண்டான்!

மேற்கொண்டு போரிடவும் அச்சப்பட்டான்!

அந்த நேரத்தில், வேந்தன் வாளை ஓங்கி வீசவே, மந்திரியின் ஈட்டி இரண்டாக, ஒடிந்து, அதன் முனை தரையில் போய் குத்திக் கொண்டு நின்றது!

நிராயுதபாணியாக நின்ற மந்திரவாதியை, வேந்தன் வாளைக் கொண்டு தாக்க விரும்பவில்லை!

வாளை இடையில் சொருகிவிட்டு, கை கொண்டு தாக்கினான்,

மந்திரவாதியின் கை ஓங்குமுன், வேந்தன் முந்திக் கொண்டான்!

மின்னல் வேகத்தில் பாய்ந்து, ஈட்டியை இழந்து நின்ற மந்திரவாதியின் கன்னத்தில் ஒரு குத்து விட்டான்.

தலையால் வயிற்றில் முட்டி, கீழே தள்ளினான்.

ஏற்கனவே தோல்வி ஜன்னி கண்டு இருந்த மந்திரவாதி, வேந்தனின் திடீர் தாக்குதலால், திருப்பி தாக்கும் சக்தியின்றி தவித்தான்.

அந்த நேரத்தில், வெங்கன் பெரும் படையோடு அங்கே வந்தான்!

அவனைக் கண்டதும், மந்திரவாதி துள்ளி எழுந்தான்!

## 41

தன்னந்தனியனாய் தவித்துக், கொண்டிருந்த, மந்திரவாதி, தனி வீரம் பெற்றான்.

ஒரு பக்கம் வெங்கன்!

மறு பக்கம் மந்திரவாதி!

சுற்றிலும் ஆயுதம் தாங்கிய போர் வீரர்கள்.

இரும்பு கூண்டிற்குள் அடைக்கப்பட்ட வேங்கையாக நின்று திணறினான், வேந்தன்!

எந்தப் பக்கம் பாய்ந்தாலும், அவனுக்கு ஆபத்து காத்துக் கொண்டு இருந்தது!

வெங்கன் உருமினான்.

அவன் கையில் புதிய ஆயுதம் ஒன்று இருந்தது!

தூரத்தில் இருந்தும் குறி பார்த்து சுடக் கூடிய பெரிய துப்பாக்கி ஒன்றை அவன் கையில் பிடித்து இருந்தான்.

வேந்தனுடன் நேருக்கு நேர் மோதி, அவனை வீழ்த்த முடியாது என்பதைத் தெரிந்து கொண்டதும், வெளிநாட்டில் இருந்து துப்பாக்கி வரவழைத்து, மறைந்திருந்து அவனைச் சுட்டு வீழ்த்தி விடுவது என்று மந்திரி காத்தமுத்து தீர்மானித்தார்.

உடனே, தன் தூதுவன் ஒருவனை வெளிநாட்டுக்கு அனுப்பியும் வைத்தார்.

அவன் வெளிநாட்டில் பயிற்சியும் பெற்றுக் கொண்டு, புது ஆயுதத்தோடு அன்று காலைதான் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான்!

துப்பாக்கியைக் கண்டதும், வெங்கன் துள்ளிக் குதித்தான்.

''தந்தையே! இப்பொழுதே ஆணையிடுங்கள். வேந்தன் என்கிற அந்தப் பதரை சுட்டுக் கருக்கி விடுகிறேன்'' என்று ஆர்ப்பரித்தான்.

''அய்யா! சுடுவதற்கு பயிற்சி வேண்டுமே...'' என்று இழுத்தான் அதை வாங்கி வந்த தூதுவன்!

''என்னை கொக்கு சுடத் தெரியாத கோமாளி என்றா நினைத்தாய்?'' என்று கொக்கரித்தான் வெங்கன்!

மந்திரி காத்தமுத்து பிரச்சினையில் இருந்து நழுவினார்!

குருவியையா சுடப் போகிறான், குறி தப்புவதற்கு? பெரிய உருவம் தானே! மகன் எப்படியும் வேலையை முடித்து விட்டு வந்து விடுவான் என்று கணக்குப் போட்டார், அவர்.

''வெங்கா! உன் போன்ற வீரனுக்குப் பயிற்சி தேவையில்லை, உடனே துப்பாக்கியோடு போ. வேந்தனை கண்டுபிடித்து, சுட்டுப் பொசுக்கி விட்டு வா. குறி தப்பினால், உன்னை அவன் தீர்த்து விடுவான்'' என்ற பயமுறுத்தி, அனுப்பி வைத்தார். காத்தமுத்து!

காத்தமுத்துவின் எச்சரிக்கை, வெங்கனுக்கு சிறிது அச்சத்தையும் கொடுத்தது!

எனவேதான், அவன் பெரும் படையோடு அங்கு வந்து இருந்தான்.

வெங்கனது அச்சுறுத்தல், அவனது குல தெய்வம் காளிதேவியைத் தவிர் அவனை யாரும் காப்பாற்ற முடியாது என்பதை வேந்தன் தெளிவாக உணர்ந்து இருந்தான்!

எனவே, தேவியின் காதில் தன் குரல் விழும்படி ''தாயே!'' என்று அழைத்துக் கொண்டு, அவன் தன் வாளை உருவினான்.

அடுத்த வினாடி -

''டுமீல்.... டுமீல்....''

வெங்கனின் துப்பாக்கி அலறியது!

''தாயே!'' என்று வேந்தன் தரையில் வீழ்ந்தான்!

வெங்கனுக்கு அப்போதும் வெறி அடங்கவில்லை!

மீண்டும் துப்பாக்கியை அழுத்தினான்!

''டுமீல்....டுமீல்...''



துப்பாக்கியின் கதறல் நின்றது!

வெங்கன் கம்பீரமாக நின்று சிரித்தான்!

மந்திரவாதி ஒரு படி மேலே போனான்!

''பொன்னிமலைத் தீவின் முடிசூடா மன்னன், மாவீரன் வெங்கன் வாழ்க!'' என்று முழங்கினான்.

''வீரர்களே! இந்தப் பிணத்தை அப்புறப்படுத்துங்கள்!'' என்று வெற்றி வேந்தனாக ஆணை பிறப்பித்தான், வெங்கன்.

வீரர்கள் வேந்தனைத் தூக்கிப் பக்கத்தில் இருந்த பள்ளத்துக்குள் வீசினார்கள்!

பிறகு, அனைவரும் அரண்மனை நோக்கிப் புறப் பட்டார்கள்!

காளிதேவியின் குகையில் வேந்தனுக்காக காத்திருந்த ஜோதிடருக்கு திடீர் என்று உடம்பு முழுவதும் முள்ளாகக் குத்தியது!

வலி தாங்காது எழுந்த சோதிடரின் கால்கள், தானாக நடக்கத் தொடங்கின.

எங்கு போகிறோம், எப்படிப் போகிறோம் என்பதைக் கூட அவர் உணரவில்லை!

திடீர் என்று ஓர் இடத்தில் அவரது கால்கள் ஆணி அறைந்தாற் போல் நின்றன!

வியப்பால் கண்களைத் திறந்தார்.

## 42

**வே**ந்தனின் குதிரை சோதிடரை நோக்கிப் பாய்ந்து வந்து கொண்டு இருந்தது.

அதன் கண்கள் குளமாகி இருந்தன!

குதிரையின் சோகத்தைக் கண்டதும், ஜோதிடர் என்னமோ, ஏதோ என்று பதறினார்.

குதிரை, அவருடைய கையைக் கவ்வி இழுத்து அவசரப்படுத்தியது. அவர் ஏறிக் கொள்ள ஏதுவாக குனிந்து கொடுத்தது.

சோதிடர் மேலே ஏறிக் கொண்டதும், குதிரை மீண்டும் ஓடியது!

அடர்ந்த காட்டைக் கடந்து, ஒரு படுகுழியின் ஓரத்தில் குதிரை ''சட்''டென்று நின்றது.

சோதிடர் பரபரப்போடு, உள்ளே எட்டிப் பார்த்தார்!

அங்கே -

வேந்தன் குற்றுயிராய் முனகிக் கொண்டு கிடந்தான்.

நூற்றுக்கணக்கான அம்புகள் ஒன்று போல் சீறி வந்து, மார்பில் நறுக் நறுக்கென்று குத்தியது போல இருந்தது, சோதிடருக்கு!

''வேந்தா!'' என்று அலறி துடித்துக் கொண்டு குதிரையில் இருந்து குதித்தார்.

அடுத்த வினாடி -

அந்த பயங்கரப் பள்ளத்துக்குள் அவர் பாய்ந்தார்.

வேந்தனின் உடலை, துப்பாக்கி குண்டுகள் கிழித்து இருந்தது அவருக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது.

உடனடியாக, குண்டு பாய்ந்த இடத்தில் கீறி குண்டுகளை எடுத்தார்.

அடுத்த அவனை மேலே கொண்டு வந்து சிகிச்சை அளிக்க வேண்டும்!

சோதிடர் பலவாறு சிந்தித்துக் கொண்டு இருக்கும் பொழுது, குதிரை அவருக்குக் கை கொடுத்தது.

சறுக்கு விளையாடுவது போல, குதிரை பள்ளத்துக்குள் இறங்கியது!

இருவரையும் மேலே ஏற்றிக் கொண்டு, வெளியே வந்து இறக்கியது!

சோதிடர் வேந்தனை ஓர் இடத்தில் கிடத்தினார்.

அருகே கிடந்த மூலிகைகளைப் பறித்து சாறு பிழிந்து காயங்களுக்குப் போட்டார்.

சிறிது நேரத்தில் வேந்தன் கண் திறந்தான்.

அந்த நிலையிலும் அவன் கடமையிலேயே கண்ணாக இருந்தான்.

கண் திறந்ததும் அவன், ''அய்யா! அரசரையும், பூங்கொடியையும் உடனே காப்பாற்ற வேண்டும். அந்த அயோக்கியன் அரண்மனைக்குப் போயிருப்பான்'' என்றான்.

''அவர்களுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை'' என்று தேற்றினார், சோதிடர்.

அப்போது அவனது நினைவில் இளவரசி பூங்கொடி வந்தாள்,

**வே**ந்தன் வீழ்ந்ததும், வெங்கன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அவன் உற்சாகத்தின் உச்சிக்கே சென்றான்.

அதுவரை அவனுக்கு உதவியாக இருந்து வந்த, மந்திரவாதியைக் கூட அவன் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை!

அவனது நினைவுகள் எல்லாம் இளவரசி பூங்கொடியைப் பற்றியே இருந்தது.

அந்த நிமிடமே பூங்கொடியை சந்திக்க அவன் துடித்தான்.

வெங்கனின் பாரா முகம், கூடவே வந்த மந்திரவாதிக்கு எரிச்சலைக் கொடுத்தது.

''வெங்கா!''

சற்று அழுத்தமாகவே அழைத்தான் மந்திரவாதி.

வெங்கன் அலட்சியமாகத் திரும்பினான்!

'நீ ஏன் என்னோடு வந்து கொண்டு இருக்கிறாய்?' என்று கேட்பது போல இருந்தது அவனது பார்வை!

''அரண்மனையில், நான் எங்கே தங்குவது?'' என்று கேட்டான், மந்திரவாதி.

அதைக் கேட்டதும் வெங்கன் ஹா....ஹ.......ஹா... என்று பலமாக சிரித்தான்!

''மந்திரவாதிக்கு, மன்னன் வாழும் இடத்தில் என்ன வேலை. நீர் உமது குகைக்கே போகலாம்.''

''வெங்கா! உன்ன உளருகிறாய்? வேந்தனை ஒழித்து விட்டால், மந்திரி பதவி தருவதாகச் சொன்னாயே!'' மந்திரவாதி சீறினான்.

''உமது சக்தியால் தான் எதுவும் முடியவில்லையே! நான் தானே அவனைக் கொன்றேன்''

''வெங்கா!'' மந்திரவாதி இரைந்தான். ''என்னிடம் விளையாடாதே! எனக்கு மந்திரி பதவி கொடுக்க முடியுமா? முடியாதா?'' கேட்டான் மந்திரவாதி.

''முடியாது. உன்னால் முடிந்ததைப் பார்த்துக் கொள்!'' அழுத்தமாகச் சொன்னான், வெங்கன்.

''முடியாதா....!''

''முடியாது...முடியாது..'' வெங்கன் உறுதியாக இருந்தான்.

மந்திரவாதி ஆத்திரத்தோடு குதிரையில் இருந்து இறங்கினான்.

அவனுடைய கண்கள் தீப் பிழம்பாக சிவந்தன.

''வெங்கா! என்னை ஏமாற்றி விட்டு அரசர் ஆகி விடலாம் என்று மட்டும் நினைக்காதே. நான் இருக்கும் வரை அது நடக்காது'' என்று வேகமாக காட்டுக்குள் நடந்தான், மந்திரவாதி.

''அப்படியென்றால், உன்னையும் உயிரோடு விடமாட்டேன்'' வெங்கன் கொக்கரித்தான்.

''என்ன சொன்னாய்?'' என்று வெடுக்கென்று திரும்பினான், மந்திரவாதி.

மந்திரவாதிக்கு நேராக துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு நின்றான் வெங்கன்.

## 43

அபயம் வேண்டி குகையை வலம் வந்து கெஞ்சியவன், ஆயுதம் கிடைத்ததும், ஆர்ப்பரித்தான்!

நல்லதா, கெட்டதா என்று பாராமல் பாலை வார்த்தவன் செய்த தவறை உணர்ந்தான்!

''என்னோடு மோதத் துணிந்துவிட்டாயா?'' பல்லை நறநற வென்று கடித்தான், மந்திரவாதி.

''உன் மாயசக்தியால் அசைக்கக் கூட முடியாத வேங்கை வேந்தனையே தீர்த்து விட்டேன். நீ எம்மாத்திரம், என் துப்பாக்கி முன்'' என்றான் வெங்கன் அகந்தையோடு!

அவன் கையில் இருந்த துப்பாக்கி, அவனுக்கு அவ்வளவு துணிவைக் கொடுத்தது.

''அற்ப பதரே! என் சக்தியைக் கேலி செய்கிறாயா உன்னை என்ன செய்கிறேன், பார்!''

மந்திரவாதி ஆத்திரத்தோடு வெங்கனை நோக்கினான்.

''உன்னை உயிரோடு விட்டால் தானே!'' வெங்கன் துப்பாக்கியை அழுத்தியபடி முன்னேறினான்.

மந்திரவாதி எதற்கும் துணிந்தவன் ஆனான்!



''துப்பாக்கியே துணை'' என்று நிற்கும் வெங்கனை, வெறும் பயல் ஆக்க முனைந்தான்!

''வெங்கா!'' என்று இரைந்து கொண்டு, அவனை நெருங்கி வந்தான்.

திடுதிப்பென்று மந்திரவாதி நெருங்கவும், குறி வைத்த துப்பாக்கியை வெங்கன் அழுத்தப் போனான்.

ஆனால் கண நேரத்துக்குள் மந்திரவாதி ''லபக்'' கென்று பாய்ந்து, வெங்கனின் கையில் இருந்த துப்பாக்கியை ஓங்கி உதைத்தான்!

துப்பாக்கி, பக்கத்தில் இருந்த பள்ளத்தில் போய் விழுந்தது!

அதை உதை, வெங்கனுக்கு விழுந்தது!

மந்திரவாதியின் ''ஜெட்'' வேக தாக்குதலை சமாளிக்க முடியாத வெங்கன் ''அய்யோ, துப்பாக்கி போச்சு! பைரவா! துப்பாக்கியை எடுத்து, இவனை சுட்டு வீழ்த்து'' என்று மந்திரவாதியின் இடியை வாங்கிக் கொண்டே தன் காப்பாளனுக்கு உத்தரவிட்டான்!

அதற்குள் மற்ற வீரர்களும், மந்திரவாதி மீது பாய்ந்தார்கள்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே, மந்திரவாதி அதிலிருந்து தப்பிக்க வழி தேடினான்.

தனது தலை முடியைப் பிடுங்கி, வாயில் வைத்து மந்திரங்களை ஓதி, வீரர்கள் மீது வீசினான்.

முடிகள் எல்லாம் பாம்பாக மாறின. வீரர்களை விரட்டி அடித்தன!

வெங்கன் மீதும் ஒன்றை வீசினான்!

பாம்புக்கு படையே நடுங்கும் என்பார்கள்! வெங்கன் எம்மாத்திரம்!

அவன் ''அய்யோ அம்மா!'' என்று கத்திக் கொண்டு ஓட்டம் பிடித்தான்!

துப்பாக்கியை எடுக்க வந்த பைரவனும் அங்கு நிற்கவில்லை!

''வெங்கா! நீ என்னையே அழிக்க நினைத்தாய். இனிமேல் உன்னை ஒழிக்காமல் விட மாட்டேன். அரச பதவியும் உனக்கு இல்லை. பொன்னி மலைத் தீவே என் கைக்குள் வரப் போகிறது'' என்று கொக்கரித்தான் மந்திரவாதி.

மந்திரவாதியின் சவால் வெங்கனின் காதில் விழவே இல்லை!

அவன் திரும்பிப் பார்க்காமல் ஓடிக் கொண்டிருந்தான்!

எனவே, வெங்கன் அனாதையாக விட்டுச் சென்ற துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டு, மந்திரவாதி கம்பீரமாக தன் குகையை நோக்கி நடந்தான்.

துப்பாக்கி பறி போனதும் வெங்கன் பல் பிடுங்கப்பட்ட நாகம் ஆனான்.

அரண்மனைக்குள் போகவே அவன் பயந்தான்.

தன் தந்தை என்ன செய்வாரோ, ஏது பேசுவாரே என்று அச்சப்பட்டான்!

அதனால், தன் காப்பாளனையே, மந்திரி காத்த முத்துவிடம் அனுப்பி வைத்தான்.

பைரவன் போய் விஷயத்தைச் சொன்னதும், காத்தமுத்து இடிந்து போய் உட்கார்ந்து விட்டார்.

புலியைக் கொன்றுவிட்டு, எலியிடம் பிடி கொடுத்து விட்டு வந்து விட்டானே! அந்தத் துப்பாக்கியை வைத்து அவன் என்ன பாடு படுத்தப் போகிறானோ, என்று கலங்கினார்.

''பைரவா! அந்த மந்திரவாதியை ஒழிக்க என்ன செய்யலாம்?'' என்று மனம் உடைந்து கேட்டார்.

''அய்யா! ஒரு மந்திரவாதியை அழிக்க, இன்னொரு பெரிய மந்திரவாதியால் தான் முடியும்'' என்று ஆலோசனை கூறினான் பைரவன்.

காத்தமுத்து உற்சாகமாக நிமிர்ந்தார்.

''அப்படியென்றால் நாளையே நாடு முழுவதும் அறிவித்து விடு. ''அரசருக்குஆலோசனைக் கூற தலைசிறந்த மந்திரவாதி வேண்டும் என்று'' பைரவனுக்கு கட்டளையிட்டார் மந்திரி.

## 44

மறுநாள் பொன்னிமலைத் தீவு முழுவதும் செய்தி பரவியது!

மந்திரியின் ஏவலாட்கள், நகரின் முக்கிய வீதிகளுக்குச் சென்று முரசு கொட்டி செய்தியை அறிவித்தார்கள்.

''மந்திரவாதி'' என்றதும் சிறுவர்கள் பயந்தார்கள்!

பெரியவர்கள் ஏதோ பெரிய விஷயம் நடக்கப் போகிறது என்று கணக்குப் போட்டார்கள்!

எல்லாத் தரப்பு மக்களையும் உலுக்கிய அந்தச் செய்தி, வேந்தனின் காதிலும் விழுந்தது!

மந்திரி காத்தமுத்து, மந்திரவாதிகளின் துணையை நாடுவதேன்?

வேந்தன் பலமுறை தனக்குத்தானே, இந்தக் கேள்வியைக் கேட்டுப் பார்த்தான்.

சரியான பதில் கிடைக்கவில்லை!

''அய்யா! மந்திரிக்கு ஆலோசனை கூற மந்திரவாதி எதற்கு?'' என்று சோதிடரின் சிந்தனையைத் தூண்டி விட்டான், வேந்தன்.

சோதிடர் எதுவும் பேசாமல் சிரித்தார்.

''நான் ஊர் பக்கம் போய், நிலைமையை அறிந்து வரட்டுமா?'' வேந்தன் மீண்டும் பேசினான்!

அதை விரும்பாதவர் போல, சோதிடர் வேந்தனை நோக்கினார்.

''வேந்தா! உனக்கு நல்ல ஓய்வு தேவை. எதையும் மனதில் போட்டுக் குழம்பாமல், இங்கேயே இரு. நான் சென்று மக்களும் மந்திரியும் என்ன நிலையில் இருக்கி றார்கள் என்பதைக் கண்டு வருகிறேன்'' என்று சொன்னார்.

''உங்களை மந்திரி காத்தமுத்து தேடிக் கொண்டு இருக்கிறாரே!''

''என்னை அவர் என்னை செய்துவிட முடியும்? அப்படியே நான் அகப்பட்டுக் கொண்டாலும் பாதகம் இல்லை. நீ மட்டும் மந்திரியின் கண்ணில் படாமல் இருந்தால் போதும்!'' உறுதியோடு பேசினார், சோதிடர்.

''அய்யா! என் குல தெய்வம் காளிதேவி உங்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்பட விடமாட்டாள். நீங்களே சென்று செய்தி அறிந்து வாருங்கள். நான் ஆவலோடு உங்களுக்காகக் காத்து இருப்பேன்'' என்று சோதிடருக்கு விடை அளித்தான் வேந்தன்.

**அ**ரண்மனை சோகமே உருவாகக் காட்சி அளித்தது!

அரசர் பொன்னரசன் உயிரைவிடவும் முடியாமல், வைத்துக் கொள்ளவும் முடியாமல் தவித்துக் கொண்டு இருந்தார்.

இளவரசி பூங்கொடிக்கு கவலை அதிகமானது.

வெங்கன் வேந்தனை சுட்டு வீழ்த்திய செய்தியும் காற்று வாக்கில் அவள் காதில் விழுந்தது!

அதை அவள் முழுமையாக நம்பவில்லை என்றாலும், வேந்தன் அரண்மனைப் பக்கமே வராமல் இருந்தது அவளுக்குத் துன்பச் சுமையை ஏற்றியது.

தன்னையும் நாட்டையும் காத்தமுத்துவிடம் இருந்து வேந்தன் காப்பாற்றப் போகிறான் என்று அவள் உறுதியாக நம்பிக் கொண்டு இருந்தாள்.

எனவே, வேந்தன் உயிருக்கு ஆபத்து என்பதை அவளால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை!

அவளுக்குள் கவலைத் துடிப்பு அதிகமாகவே, சோதிடரைப் போய் பார்த்து வரலாமா என்று எண்ணினாள்.

எண்ணியபடி துணிந்தாள்!

துணிந்தவள் திரும்பிய போது, அவள் காலடியில் ஒரு கல் ஒன்று வந்து விழுந்தது!

கல் என்றால் சாதாரணக் கல் அல்ல!

வைரக்கல் போல மின்னியது!

பூங்கொடி அதை உற்று நோக்கினாள்!

அது அவள் முகத்தைப் ''பளிச்''சென்று காட்டியது.

அதை அவள் கையில் எடுக்கவில்லை'

பட்டப்பகல் நேரத்தில் கல் எப்படி வந்தது?

அவள் சிந்தனை வயப்பட்டாள்.

கல்வந்த வழியைத் தேடினாள்.

சன்னல் வழியாக கீழே எட்டிப் பார்த்தாள்.

ஒரு குருவி - குஞ்சு கூட அவள் கண்ணில்படவில்லை.

ஒன்றும் புலப்படாமல் திரும்பிய பூங்கொடி, பேயைப் பார்த்து விட்டவள் போல ''ஆ'' என்று அலறினாள்.

அவளது உடல் அச்சத்தால் ஆடியது!

வியர்வைத் துளிகள் உடல் எங்கும் அரும்பின.

கால்கள் தரையில் நிற்க வலு இல்லாமல் நடுங்கின.

தலை சுழன்றது!

அடுத்த வினாடி -

அந்த அழகுச் சிலை ''தடால்'' என்ற தரையில் சாய்ந்தது!

## 45

பூங்கொடி தரையில் விழுந்த சத்தம், பக்கத்து அறைகளில் இருந்த பணிப் பெண்கள் காதுவரை எட்டியது.

வெங்கன் தான் இளவரசியின் அறைக்குள் நுழைந்து விட்டானோ என்று அவர்கள் பதறி அடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

வந்தவர்கள், பூங்கொடி சுயநினைவு இல்லாமல் விழுந்து கிடப்பதைப் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தார்கள்.

பூங்கொடியை பொன் போலத் தூக்கி மடியில் வைத்து, முகத்தில் தண்ணீர் தெளித்தார்கள்.

மயில் விசிறியால் காற்று வரவழைத்தார்கள்.

சற்று நேரத்தில், பூங்கொடிக்கு நினைவு திரும்பியது!

பணிப் பெண்கள் முகத்தில் மகிழ்ச்சி படர்ந்தது!

''அம்மா! உடம்புக்கு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டாள், ஒரு பணிப் பெண்.

''நான்... நான் நன்றாகத்தானே இருக்கிறேன். என் உடம்புக்கு ஒன்றும் இல்லையே'' என்ற பூங்கொடி மிரள மிரள விழித்தாள்.

அவளது முகத்தில் பயத்தின் சாயல் தெரிந்தது!

''இளவரசி! ஏன் இப்படிப் பயந்து நடுங்குகிறீர்கள்?'' என்று படபடத்தாள் மற்றொரு பணிப்பெண்

பூங்கொடி பணிப்பெண்களின் பக்கமே திரும்பவில்லை. அறை முழுவதும் எதையோ தேடினாள்.

''இளவரசி! என்ன தேடுகிறீர்கள்?'' என்ற மற்றொரு பணிப் பெண் வினவினாள்!

அப்போது பூங்கொடி திடீர் என்று, ''அய்யோ, பேய்... பேய்...! என்று அலறினாள்!

பணிப் பெண்கள் பதற்றத்தோடு சுற்றுமுற்றும் பார்த்தார்கள்!

அந்த அறைக்குள் அவர்களைத் தவிர ஒரு ஈ, எறும்பு கூட இல்லை!

''இளவரசி! தைரியமாக இருங்கள். இங்கே, பேயும் வரவில்லை. பிசாசும் இல்லை'' என்று இளவரசியைத் தேற்றினாள் ஒரு பணிப்பெண்!

பூங்கொடியோ தன் அலறலை நிறுத்தவில்லை.

''பேயை விரட்டுங்கள்.... பேயை விரட்டுங்கள்'' என்று கத்திக் கொண்டே பின்னோக்கி சென்றாள்.

பணிப் பெண்களுக்கு பூங்கொடி மேலே சந்தேகம் எழுந்தது.

இளவரசிக்கு பேய்க் கோளாறு பிடித்து இருக்குமோ என்று அவர்கள் எண்ணினார்கள்!

''உடனே, மந்திரியிடம் சொல்ல வேண்டும்'' என்று ஒருவள் சொன்னதும், பூங்கொடியை படுக்க வைத்து விட்டு, எல்லோரும் மந்திரியைத் தேடி ஓடினார்கள்!

அப்போது அந்த அறைக்குள் பூங்கொடியைத் தவிர வேறு யாரும் இல்லை!

அவள் கண்களை இரு கைகளாலும் பொத்திக் கொண்டு, ''பேய்... பேய்...'' என்று உளறிக் கொண்டே இருந்தாள்!

திடீர் என்று ''இளவரசி'' என்று யாரோ மெல்லிய குரலில் அழைப்பது கேட்டது.

ஆனால், பூங்கொடி கண்களைத் திறக்கவில்லை.

''பூங்கொடி.... பூங்கொடி...' மீண்டும் அதே மெல்லிய குரல்!

இப்போது பூங்கொடி குரல் வந்த திசை நோக்கி கண்திறந்து பார்த்தாள்.

என்ன ஆச்சரியம்!

அவள் முன்பு பார்த்த பேய் மனிதன் அங்கு இல்லை!

முதலில் வந்து விழுந்த பளிங்கு கல் மட்டுமே மின்னிக் கொண்டு கிடந்தது!

பூங்கொடி சற்று பயம் நீங்கியவளாக கல்லைக் கூர்ந்து நோக்கினாள்.

அந்தக் கல் ''பூங்கொடி'' என்று அவளை அழைத்தது.

அதைக் கேட்டதும் பூங்கொடியின் முகத்தில் வியப்பும், பயமும் படர்ந்தது.

அதற்குள் கல் பேசியது:

நான் தான் மந்திரவாதி. இந்த நாட்டை ஆள ''சீ பூம்பா''வால் அனுப்பப்பட்டவன். இனிமேல் நீ எனக்கு அடிமை.

''மறுத்தால்...'' இளவரசி துணிவோடு கேட்டாள்!

''உன் தந்தையையும் வேந்தனையும் உயிரோடு நீ பார்க்க முடியாது. என் மந்திர சக்தியால் இந்த நாட்டையே அழித்து விடுவேன்...''

கல் இப்படிப் பேசியதும், இளவரசிக்கு சப்த நாடியே நின்று விட்டது!

அய்யோ, இது என்ன சோதனை என்று குமுறியபடி படுக்கையில் போய் ''தொப்''பென்று விழுந்தாள்!

கல் அங்கிருந்து மறைந்தது!

## 46

பணிப் பெண்கள் சொன்ன சொன்ன செய்தியைக் கேட்டதும் மந்திரி காத்தமுத்து துள்ளி எழுந்து ஓடினார்.

ஆனால் அந்த ஓட்டம், அந்தப்புரத்தை அடையுமுன் ஆட்டம் கண்டது!

அவரது காலில் ஏதோ ஒன்று ''நறுக்'' கென்று குத்தியது!

''ஆ'' என்று உயிர் போவது போல கத்திய காத்த முத்து, பூட்சுக்குள் கையை நுழைத்து தேடினார்.

ஓர் ஆணி அவர் கையில் சிக்கியது!

வேகமாக பூட்சை கழற்றி எறிந்து விட்டு ஆணியை உருவினார்.

ஆணி கைக்கு வந்தது. வலி உடனே நின்றது. ஆனால் குத்திய இடத்தில் இருந்து இரத்தம் கசியவில்லை

இது என்ன விந்தையான ஆணியாக இருக்கிறது என்று அதைக் கையில் எடுத்துப் பார்த்தார், காத்தமுத்து.

அப்போது "காத்தமுத்து! அங்கே போகாதே! உனக்கும் பேய் பிடித்து விடும். பேசாமல் உன் அறைக்குப் போ... போ..." என்று அதட்டும் ஒரு குரல் அவர் காதில் விழுந்தது.

பேய் என்றதும் பேயறைந்தவர் போல நின்றார், காத்தமுத்து!

முன்னும் பின்னும் பார்த்தார்!

எந்த அரவமும் அங்கு காணப்படவில்லை!

நாடித் துடிப்பே நின்று விட்டது போன்ற ஓர் உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது!

"நீ யார்? எங்கிருந்து பேசுகிறாய்?" என்று அவர் கேட்க நினைத்தார்.

ஆனால் வார்த்தைகள் தொண்டையை விட்டு வாய்க்குள் வர மறுத்தன.

காத்தமுத்து திணறிக் கொண்டு இருக்கும் போது, அவரது கேள்விக்குப் பதில் வந்தது.

"நீ உன் அறைக்குப் போ. அப்போது நான் யார் என்பது தெரியும். என்னை மீறி இளவரசியின் அறைக்குள்

போனால் நீ வெறும் காத்தமுத்துவாக வெளியே வரமுடியாது. பேய் மனிதனாக வருவாய்.''

பேசும் குரல் மீண்டும் ஒலித்ததும், காத்தமுத்து குலை நடுங்கிப் போனார்.

முன் வைத்த காலைப் பின் வைத்தார்.

தன் அறைக்குப் போய் ஆசனத்தில் அமர்ந்தார்.

## 47

அடுத்த வினாடி -

பளபளக்கும் வாள் ஒன்று, பறந்து வந்து, அவருக்கு முன் கிடந்த மேசையை குத்திப் பிளந்தது.

''அய்யோ!'' என்று அலறப் போனார், காத்தமுத்து.

ஆனால் அவர் கத்தவில்லை.

ஏதோ ஒன்று அவரது தொண்டையை அடைத்துக் கொண்டது!

மேசையில் குத்திய வாள், தவறி மார்பில் பாய்ந் திருந்தால்...

நினைத்துப் பார்க்கவே காத்தமுத்து அஞ்சினார்!

அவரது உடல் அவரது கட்டுப்பாட்டையும் மீறி நடுங்கியது.

இதயம் ''டக் டக்'' என்று வேகமாக அடித்துக் கொண்டது.

அப்போது ....

''ஹா....ஹ்....ஹா..'' என்ற பலத்த சிரிப்பொலி அந்த அறையை அசைத்தது!

காத்தமுத்து பீதியால் துடித்து எழுந்தார்.

வெளியே போக முயன்றார்.

ஆனால் அதற்குள் ''சீ பூம்பா'' என்ற முழக்கத்தோடு, அவன் முன்னே பேய் உருவாகத் தோன்றினான் மந்திர வாதி.

''நீ ... நீ... யார்...!'' வார்த்தைகள் வராமல் போராடினார், காத்தமுத்து!

''நான் தான் மந்திரவாதி!'' அழுத்தமாகப் பேசினான் மந்திரவாதி.

''உன் மகன் வெங்கனின் பல்லைப் பிடுங்கி விட்டவன், நான் தான். பொன்னிமலைத் தீவை ஆளப் போகிறவனும் நான்தான். எனக்கு அடிபணிய மறுத்தால், உன் மகனின் துப்பாக்கி என்னிடம் தான் உள்ளது. அதற்கு இரையாக்கி விடுவேன்...''

அதைக் கேட்டதும் வாழ்வே முடிந்து போனது போல இடிந்து போனார் காத்தமுத்து.

''நான் என்ன செய்ய வேண்டும்...'' அவரே தான் கேட்டார்.

''எனக்கு எதிரான நடவடிக்கையில் நீ ஈடுபட்டால், சற்று முன், இந்த மேசையில் பாய்ந்த வாள், உன் மார்பைக் கிழிக்கும்..

''ஆ!'' என்று நிமிர்ந்தார் காத்தமுத்து.

அப்போது, மந்திரவாதி அங்கு இல்லை!

வாள் மட்டுமே மேசையில் குத்திக் கொண்டு நின்றது!

காத்தமுத்துக்கு ஒரே அதிர்ச்சி.

உடனே, ஏதோ பேய்க் குரல் கேட்டுவிட்டவர் போல, துள்ளி எழுந்த காத்தமுத்து, ''என்ன...?'' என்றார், பதட்டத்தோடு.

ஆனால் எதிரே பைரவனைப் பார்க்கவும், அவரது முகம் கடுமையானது.

''என்ன பைரவா? என்றார் அதட்டலோடு.

அதிகாரத் தொனியும் அதில் தெரிந்தது.

காத்தமுத்துவின் முகத்தில் நொடிப் பொழுதில் தோன்றி மறைந்த பயத்தின் சாயல், பைரவனுக்குப் புரியாத புதிராக இருந்தது.

ஆனாலும் தான் வந்த காரியத்தைத் தெரிவித்தான்.

''அய்யா! தங்கள் உத்தரவுப்படி, நாடு முழுவதும் முரசு அறைந்து செய்தி அறிவித்து விட்டேன். நாளை பொன்னி மலைத் தீவைக் கடந்தும் செய்திபரவிவிடும். மந்திரவாதிகள் வரத் தொடங்கி விடுவார்கள். நம்மிடம் வாலாட்டும் மந்திரவாதியை ஒழித்துக் கட்டி விடலாம்..''

''மந்திரவாதி'' என்றதும் காத்தமுத்துக்கு இரத்தம் கொதிப்படைந்தது.

''நிறுத்து...!''

அடக்க முடியாமல் கத்தினார், காத்தமுத்து.

''அய்யா...!'' தீயை மிதித்து விட்டவன் போல அலறினான், பைரவன்.

தவறாக எதுவும் பேசி விட்டோமோ, என்று அஞ்சினான்.

"மந்திரவாதியும் வேண்டாம். மண்ணாங் கட்டியும் வேண்டாம். எவனாவது வந்தால், திருப்பி அனுப்பி விடு!"

காத்தமுத்துவின் புதுக் கட்டளை பிறந்ததும், பைரவனால் மேற்கொண்டு அங்கு நிற்கமுடியவில்லை.

எதையுமே புரிந்து கொள்ள முடியாமல், அவன் அறையை விட்டு வெளியேறினான்.

அரண்மனையில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து வருகிறேன் என்றுவேந்தனிடம் சொல்லி விட்டு வந்த சோதிடர், தன் பழுத்த உடம்பை சுமந்து கொண்டு, ஊரை நெருங்கும் போது நன்றாக இருட்டி விட்டது!

அந்த இருளும் அவருக்குப் பக்கபலமாகவே இருந்தது.

அதிகமாக யார் கண்ணிலும் படாமல், விஷயத்தைத் தெரிந்து கொண்டு, இரவோடு இரவாக வேந்தனிடம் போய் விட வேண்டும் என்று அவர் நடையை விரைவுபடுத்தினார்.

அப்போது -

இருளைக் கிழித்துக் கொண்டு வந்த ஓர் ஒளிக் கதிர் அவர் மீது விழுந்தது.

அந்த ஒளிக் கதிர்கள், பார்வையை துலங்கச் செய்வதற் குப் பதிலாக, கண்ணை மறைத்தது! பார்வையை இழக்கச் செய்தது.

சோதிடர் முன்னேறிப் போக முடியாமல் திணறினார்.

அவர் கண்ணை மூடித் திறந்தபோது, அவர் முன்னே மந்திரவாதி நின்று கொண்டிருந்தான்.

## 48

''நீ யார்?'' என்று அலறினார் சோதிடர்.

ஹா...ஹ்....ஹா.. என்று நகையாடினான் மந்திரவாதி! ''நான் தான் பொன்னிமலைத் தீவின் நாளைய அரசன்!''

பூகம்பம் ஏற்பட்டது போல இருந்தது சோதிடருக்கு.

''முதலில் பேய் உருவில் நிற்கும் நீ யார் என்பதைச் சொல்!'' சோதிடர் தளர்ந்து விடாமல் கேட்டார்.

சீ பூம்பாவால் அனுப்பப்பட்ட மந்திரவாதி மீண்டும் கனைத்தான். ஹா...ஹ்...ஹா...

''அசிங்கமாக இருக்கிறது வாயை மூடு'' என்று சீறினார் சோதிடர். ''இப்போது என்னைப் போக விடு.''

''உன்னை நகரத்துக்குள் நுழைய விடமாட்டேன். உயிர் வாழ வேண்டும் என்றால் திரும்பிப் போய்விடு!''

''எனக்கு முக்கிய வேலை இருக்கிறது. என்னைத் தடுக்காதே!'' சோதிடர் முன்னேற முயன்றார்.

''கிழட்டு நாயே! என்னை மீறி போய் விடுவாயா? உன் உயிரையே குடித்து விடுவேன்'' மந்திரவாதிக்குக் கோபம் அதிகமானது.

ஆனால் சோதிடர் பின்வாங்குவதாக இல்லை. அரண்மனை நிலவரத்தை அறிந்து வேந்தனுக்கு தெரிவிக்க வேண்டிய அவசியத்தை அவர் நன்றாக உணர்ந்து இருந்தார்

பொன்னிமலைத் தீவு மக்களையும் நாட்டையும் காப்பாற்ற, வேந்தனைத்தானே அவர் நம்பிக் கொண்டிருக் கிறார்.

''பேய் மனிதனே! அப்பாலே போ. என் வழிக்கு வராதே! என்னை எந்த சக்தியும் தடுக்க முடியாது.'' என்றார் சோதிடர் ஆவேசமாக.

ஆத்திரம் பொங்கியது மந்திரவாதிக்கு!

''சோதிடக் கிழமே! உன் உயிரைப் போக்க என் மந்திர சக்தி வேண்டியது இல்லை. மனிதனால் படைக்கப்பட்ட இந்த ஆயுதமே போதும்'' என்று ஆர்ப்பரித்த மந்திரவாதி, ''ஓ...சீ...பூம்பா'' என்று கண்மூடித் திறந்தான்.

அடுத்த கணம் -

வெங்கன் பறிகொடுத்த துப்பாக்கி மந்திரவாதியின் கைக்கு வந்தது!

''துப்பாக்கி கொண்டு என்னை மிரட்டுகிறாயா?'' என்று கொதித்து எழுந்தார்சோதிடர்.

''உன்னை மிரட்டவில்லை. தரையில் உருட்டப் போகிறேன்'' என்று கர்சித்தான் மந்திரவாதி.

கர்ச்சித்ததோடு நில்லாமல், சோதிடர் நெஞ்சுக்கு நேராக துப்பாக்கியை ஏந்தவும் செய்தான்!

மந்திரவாதியின் முரட்டுத் தனம், சோதிடரை இரத்தக் கண்ணீர் சிந்த வைத்தது!

''தெய்வமே! எனக்கு வழிகாட்டு'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கத்தினார்.

அடுத்த வினாடி -

வேந்தன் அங்கு வந்து குதித்தான்!

மந்திரவாதியின் பிடியில் இருந்த துப்பாக்கி நழுவி தரையில் விழுந்தது!

வேந்தன் எப்படி வந்தான், எங்கிருந்து குதித்தான் என்ற ஆராய்ச்சியில் ஈடுபடும் நிலையில் சோதிடர் இல்லை!

ஏதோ தெய்வ தரிசனம் கிடைத்து விட்ட பூரிப்பில் அவர் நின்று கொண்டிருந்தார்!

பேயாகநின்று சோதிடரை உறுத்திக் கொண்டிருந்த மந்திரவாதி, பேயைப் பார்த்து விட்டவன் போல் பதறினான்; நடுங்கினான்.

வேந்தன் என்றோ செத்து விட்டான் என்றல்லவா, அவன் இதுவரை நினைத்துக் கொண்டு விளையாடினான்.

வேந்தனோ, ஏவி விட்ட அம்பு போல, மந்திரவாதியைக் குத்திக் கொண்டு இருந்தான்.

''ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதனையே கடிக்க வந்து விட்டாயா?'' என்று பந்தாடினான் வேந்தன்.

சுழற்றி விட்ட பம்பரம் போல், ஆடிக் கொண்டிருந்தான் மந்திரவாதி.

அவன் திருப்பி தாக்குவதற்கே வேந்தன் இடம் கொடுக்கவில்லை.

அவனுக்கு விழி பிதுங்கியது!

அங்கே, கொலை விழுந்து விடுமோ என்று பயந்த சோதிடர், ''வேந்தா! போதும் நிறுத்து'' என்று ஓடி வந்து வேந்தனின் கையைப் பிடித்தார்!

அப்போது தான், வேந்தனும் சற்று கோபம் தணிந்தவனாக, தனது ஆவேசத் தாக்குதலை நிறுத்தினான்.

அதோடு, மந்திரவாதி தொலைந்து போவான் என்று சோதிடர் நினைத்தார்.

ஆனால் அவனோ மந்திர வேலையில் இறங்கினான்!

அவன் கடைசி ஆயுதமாக வெறி பிடித்த புலியாக மாறி, வேந்தன் மீது பாய்ந்தான்!

வேந்தனுக்கு அடங்கிய கோபம் மீண்டும் கொப்பளித்தது.

புலியை லாவகமாக மடக்கி, தாடையில் நாலு குத்து விட்டான்!

அதன் சீற்றம் குறைந்தது!

பிறகு அதை அப்படியே அலாக்காக தலைக்கு மேலே தூக்கி எரியப் போனான்.

அப்போது அவன் கையில் இருந்தது புலி அல்ல; மந்திரவாதி!

## 49

நரகாசூரன் போல் நின்று போரிட்ட மந்திரவாதியை, பந்தை எடுத்து வீசுவது போல தூக்கி எறிந்தான் வேந்தன்!

மந்திரவாதி ''அம்மா'' என்று அலறிக் கொண்டு தரையில் விழுந்தான்!

சக்தி இழந்து விழுந்தவன், அதே வேகத்தில் எழுந்தான்.

''அய்யா! என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று சோதிடரின் காலைப் பற்றினான்.

புயலாக நின்ற வேந்தன் சற்றே அடங்கினான்.

''நீ யார்? முதலில் அதைச் சொல்'' என்று மீண்டும் மந்திரவாதியைத் தாக்கப் போனான், வேந்தன்.

அவனுக்குக் கோபம் முழுமையாகத் தணியவில்லை.

''வேந்தா, என்னை விட்டு விடு. நான்தான் உன் சித்தப்பா, புலியன்!''

கிலி அடித்துப் போய் நின்ற மந்திரவாதி அபயக் குரல் எழுப்பினான்.

''புலியனா?'' என்று திகைத்தார் சோதிடர்.

''என்ன உளறுகிறாய்?'' என்று அதட்டினான், வேந்தன்.

''உண்மையைத்தானே சொல்லுகிறேன். நான் உன் சித்தப்பா தான்'' மந்திரவாதி மீண்டும்சொன்னான்.

''புலியன் தான் நாடு கடத்தப்பட்டு விட்டாரே!'' என்று சந்தேகப்பட்டார் சோதிடர்.

''என் தந்தை கூட அப்படித்தான் என்னிடம் சொன்னார்'' என்று ஆமோதித்தான், வேந்தன்.

''துரோகி'' என்று குற்றம் சுமத்தப்பட்டு நாடு கடத்தப்பட்ட நான், மந்திரவாதியாக மீண்டும் வந்தேன்'' என்றான், புலியன்.

''அப்படியா?'' சோதிடர் ஆச்சரியப்பட்டார்.

''இதோ பாருங்கள்!' என்று தனது முகத்தில் இருந்து சவ்வு போன்ற ஒன்றை உரித்தான், மந்திரவாதி.

இப்போது வேந்தனுக்கு அடையாளம் தெரிந்தது.

மந்திரவாதி, வேந்தனுடைய சித்தப்பா புலியன் தான்! அவன் சிறு வயதில் பார்த்தது.

சோதிடருக்கும் சந்தேகம் தீர்ந்தது!

இந்தப் புலியன் தான், வேந்தனின் தந்தை நரசிம்மனுக்கு முன்பு பொன்னிமலைத் தீவுக்குத் தளபதியாக இருந்தான்.

அப்போது, பக்கத்து நாட்டை ஆண்டு கொண்டு இருந்த வேங்கையனுக்கும் புலியனுக்கும் இரகசியத் தொடர்பு ஏற்பட்டது.

அதன் விளைவு?

புலியன் பொன்னிமலைத் தீவையே வேங்கையனுக்கு தாரை வார்த்துக் கொடுக்க திட்டமிட்டான்.

இந்த இரகசியம் எப்படியோ, வேந்தனின் தந்தை நரசிம்மனின் காதில் விழுந்தது.

நரசிம்மன் அப்போது சாதாரணப் போர் வீரனாக இருந்தார்.

எனவே அப்போது ஆண்டு கொண்டிருந்த அரசரிடம் (பொன்னரசனின் தந்தை) சென்று, விஷயத்தை ஆதாரத்தோடு கூறினார்.

விழிப்படைந்து கொண்டு அரசர், புலியனைத் தந்திரமாகக் கைது செய்தார். அவன் மீது ''நாட்டுத் துரோகி'' என்ற முத்திரையைக் குத்தி, நாடு கடத்தினார்.

நாட்டுப் பற்று மிகுந்த நரசிம்மனைப் பொன்னி மலைத் தீவுக்கு தளபதி ஆக்கினார்.

''நீ எப்படி மந்திரவாதி ஆனாய்?'' என்று வினவினார் சோதிடர்.

அடிமை போல அடங்கி நின்று கொண்டிருந்த புலியன் பேசினான் -

''நான் நாடுகடத்தப்பட்டு, காட்டில் அடிமையாக வாழ்ந்து கொண்டு இருந்த போது, ஒரு பாழடைந்த மண்டபத்தில், பேய்களோடு விளையாடிக் கொண்டிருந்த ஒரு பயங்கர மனிதரை சந்தித்தேன். அவர் எனக்கும் மந்திர வித்தைகள் சொல்லித் தந்தார். அதைக்கொண்டு, எனக்கு ''துரோகி'' பட்டம் சூட்டிய அரசரைப் பழிவாங்க வேண்டும் என்று எண்ணினேன். அதுவே வெறியாக மாறவும் இந்த வேடத்தில், நாட்டுக்குள் நுழைந்தேன். ஆனால் மந்திரம் கடைசி வரை கைகொடுக்கவில்லை. இப்போது நான் திருந்தி விட்டேன். என்னைக் கொன்று விடாதீர்கள்'' என்று மீண்டும் சோதிடரின் காலைப் பிடிக்கப் போனான், புலியன்.

''சரி, உங்களுக்கு இந்த மந்திர சக்தியைக் கொடுத்தவரின் பெயர் என்ன? இப்போது அவர் எங்கே இருக்கிறார்?'' என்று மரியாதை கொடுத்து பேசினான், வேந்தன்.

''அவர் தான் ''சீ பூம்பா'' அவர் இப்போது உயிரோடு இல்லை ஆவி வடிவில் உலாவுகிறார்'' என்றான் புலியன்.

''சித்தப்பா நீங்கள் இதுவரை இந்த நாட்டு மக்களுக்கு செய்து வந்த அநீதிகளை நான் மட்டும் மன்னித்தால் போதாது, அரசரும் மக்களும் மன்னிக்க வேண்டும்.

வாருங்கள் அரசரிடம் போகலாம்'' என்று வேந்தன் சமரசத்துக்கு வந்தான்.

சோதிடரும் அதை ஆமோதித்தார்.

மூன்று பேரும் அரண்மனைக்குப் புறப்பட்டார்கள்.

மந்திரவாதியிடம் இருந்து நாட்டைக் காப்பாற்ற, வேந்தன் இல்லையே என்று வேதனைப் பட்டுக் கொண்டு இருந்த மந்திரி காத்தமுத்து, வேந்தனை நேரடியாகப் பார்த்ததும் வியப்படைந்தார்.

தான் காண்பது கனவா, நனவா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள கண்களைக் கசக்கிப் பார்த்தார்.

காண்பது கனவு அல்ல; நனவு தான் என்று தெரிந்ததும் அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

தன் உயிரும் தப்பியது, நாடும் பிழைத்தது என்று அவர் சந்தோஷப்பட்டார்.

காத்தமுத்துவின் மனமாற்றம் சோதிடருக்கும், வேந்தனுக்கும் பெரும் வியப்பைக் கொடுத்தன!

''வேந்தா! உன்னால் தான் இந்த நாடு வாழப் போகிறது'' என்று நல்ல உள்ளத்தோடு பேசினார், காத்தமுத்து.

வெங்கன் இஞ்சி தின்ற குரங்கு போல, ஓரமாக நின்று கொண்டிருந்தான்.

எல்லோருமாக அரசரைப் பார்க்கப் போனார்கள்.

வேந்தனைக் கண்டதும், இளவரசி பூங்கொடி, துள்ளிக் குதித்து ஓடிவந்தாள்.

கூடவே, காத்தமுத்துவைப் பார்த்ததும் பின் வாங்கினாள்.

அதைப் பார்த்ததும் ''இளவரசியாரே! நான் பழைய காத்தமுத்து அல்ல''என்று அர்த்தத்தோடு சிரித்தார், காத்தமுத்து.

படுக்கையில் இருந்த அரசர் பொன்னரசன், வேந்தன், சோதிடரைப் பார்த்ததும் உற்சாகம் அடைந்து எழ முயன்றார்.

அதற்குள் வேந்தன் தடுத்து விட்டான்!

''அரசே! நீங்கள் எழுந்திருக்க வேண்டாம். உடம்புக்கு ஆகாது. நீங்கள் நன்றாக ஓய்வு எடுக்க வேண்டும்'' என்றான்.

புலியன் சாஷ்டாங்கமாக அரசரின் காலில் விழுந்தான்.

வேந்தன் விஷயத்தை விளக்கினான்.

ஒரு வாரத்தில் பொன்னரசன் நல்ல குணம் பெற்று எழுந்தார்.

தன் மகள் விருப்பப்படி, அவளை வேந்தனுக்கு மணமுடித்துக் கொடுக்க சம்மதித்தார்.

ஒரு நல்ல சுபயோக தினத்தில், வேந்தன் - பூங்கொடி திருமணம் நடந்தது.

அரசர் பொன்னரசன் அரச பதவியை விட்டு விலகி ஆலோசகர் ஆனார்

மாவீரன் வேந்தன் பொன்னிமலைத் தீவின் மக்கள் மன்னனாகத் திகழ்ந்து நல்லாட்சி நடத்தினான்.

★ ★ ★


பொன்னிமலைத்
தீவு